www.padippakam.com

1-30 ஏப்ரல் 2002

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்

கொள்முதல் மோசடி: விவசாயிக்குப் பேரிடி!






படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## "கம்யூனிசப் பூச்சாண்டி"

மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஆவணப் பட இயக்குநரான ஆனந்த் பட்வர்த்தனின் "கடவுளின் பெயரால்", "நாங்கள் உங்களின் குரங்குகளல்ல" என்ற இரு ஆவணப் படங்களை, நியூயார்க் நகரிலுள்ள இயற்கை வரலாறின் அமெரிக்க அருங்காட்சியகத்தில் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. "கடவுளின் பெயரால்" இந்து மதவெறியர்கள் உருவாக்கிய அயோத்தி பிரச்சினையையும், "நாங்கள் உங்களின் குரங்குகளல்ல" இந்து மதத்தின் சாதிக் கட்டமைப்பையும் அம்பலப்படுத்துவதால், இத்திரைப்படங்களைத் திரையிடுவதற்கு அமெரிக்காவில் வசிக்கும் இந்து மத வெறியர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். "ஆனந்த் பட்வர்த்தன் இடதுசாரி; அதனால் அவரின் படங்களைத் திரையிடக் கூடாது" என இந்தக் கும்பல் அமெரிக்கவாழ் இந்துக்கள் மத்தியில் ஒரு கையெழுத்து இயக்கம் நடத்தி அமெரிக்க அரசிற்கு அனுப்பி வைக்க, அவர்களும் கம்யூனிசப் பூதத்திற்குப் பயந்து, இத்திரைப் படங்களைத் திரையிட மறுத்து விட்டனர்.

## தாழ்த்தப்பட்டவனின் உயிர் கிள்ளுக்கீரையா?

குளித்தலை வட்டத்தில் உள்ள புங்கம்பாடி கிராமத்தைச் சேர்ந்த பள்ளி மாணவன் சிவக்குமார், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவன். இரண்டு மாதங்களுக்கு முன்பு, நாயக்கர் சாதியைச் சேர்ந்த இருவர் இச்சிறுவனைத் தங்களுடன் வேட்டைக்கு எடுபிடியாக வருமாறு கூறிக் கட்டாயப்படுத்தினர். எடுபிடியாக வருவதற்கு அச்சிறுவன் மறுக்கவே, அவர்கள் வேட்டைத் துப்பாக்கியால் இச்சிறுவனின் தலையில் சுட்டு விட்டனர். இத்தாக்குதலில் அச்சிறுவனின் ஒரு கண் பாதிப்படைந்து விட்டதோடு, மண்டை ஓட்டுக்குள்ளும் குண்டின் துகள்கள் பாய்ந்து விட்டன. போலீசு, இக்கொலை முயற்சியை உள்ளூர்ப் பஞ்சாயத்தில் பேசி தீர்க்கச் சொல்லி மேல்சாதி வெறியர்களுக்குச்சாதகமாகக் கைகழுவிவிட்டது. தற்பொழுது இந்த வன்கொடுமை தாக்குதல் அம்பலமாகிவிட்டாலும், இச்சிறுவனைத் தாக்கிய மேல்சாதி வெறியர்கள் கைது செய்யப்படவில்லை. தமிழக அரசோ, சிறுவனின் மருத்துவச் செலவுகளுக்குப் பணத்தைக் கொடுத்து, விசயத்தைப் பூசி மெழுகிவிட முயலுகிறது!

## சிறுமிகளைப் பலி கொண்ட இசுலாமியப் பழமைவாதம்

சவூதி அரேபியாவில் உள்ள மெக்கா நகரில் பெண்கள் நடுநிலைப் பள்ளி யொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 15 மாணவிகள் கருகி இறந்து போயினர். இந்த இளம் மாணவிகள் தீக்குள் சிக்குண்டு இறந்து போனதற்கு சௌதி அரேபியாவின் "மத போலீசு" தான் (முசுலீம் மத சட்டதிட்டங்களை சௌதி மக்கள் ஒழுங்காகக் கடைபிடிக்கிறார்களா எனக் கண்காணிக்கும் போலீசு) காரணம் என அந்நாட்டின் அரசு பத்திரிகைகளே குற்றம் சுமத்தியுள்ளன. தீக்குள் சிக்கிக் கொண்ட மாணவிகளை தீயணைப்புப் படை வீரர்கள் காப்பாற்ற முயன்ற பொழுது, இந்த மத போலீசு, "அந்த மாணவிகள் இசுலாமிய முறைப்படி ஆடை அணியவில்லை" என்ற காரணத்தைக் கூறி, (ஆண்) தீயணைப்பு வீரர்கள் பள்ளிக்குள் நுழைய முயன்றதைத் தடுத்து நிறுத்தி விட்டதால்தான் அம்மாணவிகள் தீயில் கருகி இறந்து போனார்கள்.


## வக்கிர சூதாட்டம்

மத்தியப் பிரதேச மாநில அரசு அயோத்தி பிரச்சினை சூடாக இருந்த சமயத்தில் இந்து மதவெறிக் கலவரம் அடிக்கடி நடக்கும் இந்தூர், போபால் நகரங்களைச் சேர்ந்த 100 சூதாட்ட விடுதி முதலாளிகளைக் கைது செய்தது. அயோத்தி பிரச்சினைக்கும், சூதாட்டத்திற்கும் என்ன சம்பந்தம் எனக் கேட்கிறீர்களா? இச்சூதாட்டக்காரர்கள் கலவரம் நடக்குமா? நடக்காதா? என்பதை வைத்து, பந்தயம் நடத்தியிருக்கிறார்கள். 1992-இல் இச்சூதாட்டக் கும்பல் வேண்டுமென்றே கலவரத்தைத் தூண்டி விட்டது போல, இந்த முறையும் பந்தயப் பணத்தைச்சுருட்டிக் கொள்ள கலவரத்தைத் தூண்டிவிட்டு விடுமோ என அரண்டு போய்தான் அரசு இவர்களைக் கைது செய்திருக்கிறது. எப்படியிருக்கிறது பாருங்கள், முதலாளித்துவ வக்கிரம்!

## கடன் வலையில் அமெரிக்க மாணவர்கள்

அமெரிக்காவில் உயர்கல்வியானது தனியாரின் பிடியில் இருப்பதால், அங்கு கல்விக் கட்டணம் மிக மிக அதிகம். நடுத்தர வர்க்க மாணவர்கள் கூடக் கடன் வாங்காமல் பட்டப்படிப்பை முடிக்க முடியாது. "பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் ஒவ்வொரு மாணவனின் தலையிலும் சராசரியாக 10 லட்ச ரூபாய் கடன் இருப்பதாகவும், அந்தக் கடனை அடைக்க முடியாமல் மஞ்சக் கடுதாசி கொடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதாகவும்" அமெரிக்க அரசே ஒப்புக் கொண்டுள்ளது. அரசு தனது சொந்த செலவில் கல்வி தராது; படித்து முடித்து வெளியே வந்தபின் நல்ல வேலையும் கிடைக்காது என்றால், மாணவர்கள் மஞ்சக் கடுதாசியை நீட்டாமல், பச்சை நோட்டுக்களையா நீட்டுவார்கள்?

இரும்புத் தகடுகளால் தடுப்புச் சுவர் அமைத்துப் பாதுகாக்கப்படும் "பாங்கோ ஃப்ரான்சஸ்" வங்கியின் கிளை.



## இரும்புக் கோட்டையா? மணற் கோட்டையா?

அர்ஜென்டினா நாட்டின் பொருளாதாரம் திவாலானதையடுத்து, அந்நாட்டு வங்கிகளில் இருக்கும் மக்களின் சேமிப்புகளைத் திருப்பித்தர மறுத்து வருகிறது, அர்ஜென்டினா அரசு. இதனால், அந்நாட்டு மக்கள் தினந்தோறும் வங்கிகளின் முன் கூடி ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார்கள். இந்த ஆர்ப்பாட்டங்கள் சூறைபாடலாக வளர்ந்து விடுமோ எனப் பயந்து போயிருக்கும் அரசு, வங்கிகள் இருக்கும் கட்டிடங்களைச்சுற்றிலும் இரும்புக் கதவுகளை அமைத்து, வங்கிக் கட்டிடங்களைக் கோட்டை போல மாற்றி வருகிறது. இரும்புக் கதவுகளால் திருட்டைத் தடுக்கலாம்; மக்களின் எழுச்சியைத் தடுத்துவிட முடியுமா?



படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 17

**இதழ் 6**

ஏப்ரல் 2002

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**மின் அஞ்சல் முகவரி:**
**puthiyajananayagam@hotmail.com**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்**
**110, இரண்டாம் தளம்,**
**(மாநகராட்சி வணிக வளாகம்)**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**

# ஓட்டுக்கட்சிகளின் "உறவும்", "நட்பும்" அரசியல் விபச்சாரத்தின் உச்சகட்டம்

நாட்டின் நாடாளுமன்ற - சட்டமன்றக் கூட்டணி அரசியல் ஒரு புதிய பரிணாமத்தை அடைந்துள்ளது. இதுகூட சாத்தியமா, இப்படிக் கூட சந்தர்ப்பவாதமாக நடந்து கொள்வார்களா என்று வாக்காளர்கள் வியந்து நிற்கும் வகையில், ஒரு புதிய கூட்டணித் தோற்றத்தைக் காட்டி திகைக்க வைக்கின்றன, ஓட்டுக் கட்சிகள். "மத்தியில் ஆளும் பாரதீய ஜனதா கட்சியுடன் உறவு - மாநில பா.ஜ.க.வுடன் நட்பு" என்கிற முடிவை தி.மு.க. எடுத்துள்ளது. இது என்ன விநோதமாக இருக்கிறதே என்று கேட்டால், "தி.மு.க.வுடன் உறவு, அ.தி.மு.க.வுடன் நட்பு" என்று தமிழ்நாடு பா.ஜ.க. எடுத்துள்ள நிலையோடு ஒப்பிடுகிறர், கருணாநிதி. இது ஒன்றும் புதிதல்ல. மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பங்கேற்கும்போதே வைகோவின் ம.தி.மு.க., தமிழ்நாட்டில் அக்கூட்டணிக்கு வெளியே நின்று, தி.மு.க.வை எதிர்த்துப் போட்டியிடவில்லையா? என்று கேட்கிறார் கருணாநிதி. மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க.வுடன் கூட்டும், மாநிலத்தில் அதன் எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வுடன் கள்ளக்கூட்டும் என்ற பா.ஜ.க.வின் இரட்டை நிலைக்குப் பதிலடியாக மத்திய பா.ஜ.க.வுடன் கூட்டு, மாநில பா.ஜ.க.வுடன் "எதிர்ப்பு" என்கிற நிலையை தி.மு.க. எடுத்துள்ளது. இந்த "எதிர்ப்பு" என்பதை "நட்பு" என்கிற தனக்கேயுரிய கேலிப் பொருளில்தான் குறிப்பிட்டிருக்கிறார் கருணாநிதி. அதே சமயம் தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் பழிவாங்கும் அரசியலை எதிர்கொள்வதற்கு, மத்திய அரசின் தயவு தேவை என்கிற நிர்பந்தம் காரணமாகவும் "நட்பு" பாராட்டுகிறார்.

ஓட்டுக் கட்சிகளின் கூட்டணி அரசியல் என்பதே சந்தர்ப்பவாதப் பித்தலாட்டங்களின் வரலாறு என்பதைப் பல பத்தாண்டுகளாக நாடு கண்டு வருகிறது. அது இப்போது சந்தர்ப்ப வாத, அரசியல் விபச்சாரம் என்கிற அளவு முதிர்ச்சி அடைந்துள்ளது. இந்தத் திசையில் மிகவும் முன்னோடிகளாக விளங்குபவர்கள் போலி கம்யூனிஸ்டுகள்தாம். மதவாத முசுலீம் லீக், இந்து மதவெறி பா.ஜ.க.வின் பழைய அவதாரமான ஜனசங்கம், அகாலி தளம், பண்ணையார்களின் கட்சியாகிய சரண்சிங்கின் லோக்தளம், மூப்பனாரின் த.மா.கா, அமெரிக்க ஏகாதிபத்திய பாதந்தாங்கி சுதந்திரா கட்சி என்று பலவண்ணக் கூட்டணிகள் அமைத்து நியாயப்படுத்தினர். "கூட்டணி அமைப்பதற்கு ஒரு பொதுத் திட்டமோ சித்தாந்த - கொள்கையோ அவசியமில்லை. சந்தர்ப்ப - சூழ்நிலைக்குத் தகுந்தவாறு அமைந்தாலே போதும்" என்கிற "அறிவுபூர்வமான" விளக்கமளித்தனர்.

அப்புறம் எவ்விதக் கொள்கையும், திட்டமுமின்றிக் கூட்டணி சேர்ந்து தேர்தல்களில் போட்டியிடுவதும், சில மாதங்களிலேயே "தேன்நிலவு" முடிந்துவிட்டது என்று அறிவித்துவிட்டு அணிகள் மாறுவதும் வழக்கமானது. கட்சி மாறுவதும் "ஆயாராம், காயாராம்"களின் செல்வாக்கு அதிகரிப்பதும் வந்தது. பதவிக்கும் பணத்துக்கும் விலை போவதும் குதிரை பேரங்கள் நடப்பதும் சந்தர்ப்பவாதக் கூட்டுகள் சேருவதும் கலைவதும் தண்ணீர்பட்டபாடாகியது. கூட்டணி அசிங்கங்களுக்குப் புதுப்புது விளக்கங்கள், நியதிகள் தோன்றின. "தொகுதி உடன்பாடு வேறு, கொள்கை உடன்பாடு வேறு", "அரசியலில் நிரந்தர எதிரியும் கிடையாது, நிரந்தர நண்பனும் கிடையாது", "அரசியலில் எதுவும் நடக்கலாம்", "அரசியலில் இதெல்லாம் வழக்கம்தான்" என்கிற சந்தர்ப்பவாத சித்தாந்தங்கள் உருவாக்கப்பட்டன. கட்சி தாவுவதில் முதலாளித்துவ அரசியல்வாதிகள்தாம் முன்னோடிகள் என்றால் அணி தாவுவதில் போலி கம்யூனிஸ்டுகள் முன்னோடிகளாக விளங்குகின்றனர். தாம் எந்த அணியில் இருக்கின்றனரோ அதற்கு "முற்போக்கு", "ஜனநாயக", "மதச் சார்பற்ற" முத்திரை குத்தி முலாம்பூசுவதிலும் வல்லவர்களாக உள்ளனர்.

ஆட்சியாளர்கள் மீது மக்கள் வெறுப்புற்ற நிலையில் எதிர்த்தரப்போடு கூட்டணி சேர்ந்து மக்களுக்கு நம்பிக்கையூட்டி வெற்றி பெறச் செய்கின்றனர். புதிய ஆட்சி ஏற்பட்ட சில மாதங்களிலேயே இதுவும் "மக்கள் விரோத அரசாகிவிட்டது" என்று கூறி முந்தைய ஆட்சியாளர்களுடன் கைகோர்த்துக் கொள்ளுகின்றனர். கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவை இப்படித்தான் ஆதரித்தனர், எதிர்த்தனர். இந்தக் கட்சிகளைப் பற்றிய ஒரு சரியான, உறுதியான கணிப்புக் கூட செய்ய முடியாத இந்தக் கட்சிகள் மக்களுக்கு எப்படி நல்ல திட்டங்களையும் தீர்வுகளையும் வழங்க முடியும்? இப்படித்தான் இந்து மதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆதரவிலோ, புதிய பொருளாதாரக் கொள்கையிலோ கொஞ்சமும் மாறுபடாத இலஞ்ச - ஊழல், உல்லாச - ஊதாரி ஜெயா - சசி கும்பலைப் போலி கம்யூனிஸ்டுகள் ஆதரித்து அரசு பதவியில் அமர்த்தினர். இப்போது, அ.தி.மு.க.வோ, தி.மு.க.வோ, தலைமை அப்படி இருந்தாலும் அணிகளும் - கட்சியும் மதச் சார்பற்றவை என்கின்றனர். அணிகளும் - கட்சியும் பெரும்பாலும் பிழைப்புவாதக் கூட்டமாகச் சீரழிந்து விட்டது மட்டுமல்ல, தலைமையோடு தானே கூட்டணி வைத்துப் பதவியில் ஏற்றுகின்றனர். அப்புறம் அது "மக்கள் விரோதமானது" என்று கூற இவர்களுக்கு

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்

www.padippakam.com

# இந்து மதவெறி பாசிச ஆட்சிக்கு கல்தூண் பூசை

கடைசியாக, விசுவ இந்து பரிசத் மற்றும் பஜ்ரங்தள் ஆகிய இந்துமதவெறி பாசிச அமைப்புகளைத் தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஆட்சியாளர்கள் தவிர, ஏறக்குறைய எல்லாத் தரப்பாலும் எழுப்பப்படுகிறது. ''மவுண்ட் ரோடு மகாவிஷ்ணு'' என்றழைக்கப்பட்ட, அறிவிக்கப்படாத அரசு ஏடாக விளங்கும் ''இந்து'' நாளேடும் இந்தக் கோரிக்கையை முன்வைத்துத் தலையங்கம் தீட்டியுள்ளது! அதுவும் தற்போது குஜராத் மாநிலத்தில் இந்த அமைப்புகள் நடத்திவரும் உச்சபட்ச மதவெறிப் படுகொலைகளுக்காக அல்ல. ஒரிசா சட்டப் பேரவை மீது இந்த அமைப்பின் பாசிசப் படையினர் நடத்திய அராஜகத் தாக்குதலின் விளைவாக மட்டுமே இக்கோரிக்கை எழுப்பப்படுகிறது.

இது தொடர்பாக இன்னும் இரண்டு விசயங்கள் கவனிக்கத்தக்கவை. இந்த இரண்டு அமைப்புகள் தவிர, இன்னும் பிற இந்து மதவெறி பாசிச அமைப்புகளின் குரு பீடமாக விளங்கும் ராஷ்ட்ரீய சுயம் சேவ சங்கம் - ஆர்.எஸ்.எஸ்.யைத் தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்படவில்லை. அதன்மூலம் ஒரு நச்சுமரத்தின் இரு கிளைகளை மட்டுமே அகற்றும்படி கோரப்படுகிறது. அடுத்து இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் சண்டப் பிரசண்டம் செய்த சவடால் 'புரட்சிப் புயல்' வை.கோ. உட்பட பகுத்தறிவுப் பாசறையில் பயின்ற திராவிட இயக்கத்தின் வாரிசுரிமை பாராட்டும் திராவிடக் கட்சிகள், பா.ம.க. போன்றவை இக்கோரிக்கையை எழுப்பவில்லை. இக்கட்சிகளின் வட்டாரத் தலைமைவரை அவ்வளவு தூரம் பிழைப்புவாதச் சகதிக்குள் மூழ்கிப் போய்விட்டனர் என்பதுதான் இதற்குக் காரணம்.

நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளும் - பத்தாம் பசலிகளும் திடீரென்று விழித்துக் கொண்டு அலறுகின்றனர். இந்து மதவெறி கும்பலின் கொலை வெறிக் கூச்சல், உயிரோடு எரியும் சிறுபான்மை மத அப்பாவிகளின் சாவுக் கதறல் அவர்களை விழிக்கச் செய்துவிட்டது. தங்கள் கண் முன்னே காணும் குரூரக் காட்சிகள் பயபீதி அடையச் செய்கின்றன. ஆனால், இவையெல்லாம் இந்த நாட்டில் முதன்முறையாக நடப்பவை அல்ல. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இப்படிப் பட்ட மதவெறிப் படுகொலைகளைக் கண்டு வருகிறோம். வடநாட்டின் பெரு நகரங்கள் தொடங்கி சிறு சந்தை நகரங்கள் வரை மதவெறித் தீக்கு இரையாகாதவை ஒரு சில மட்டுமே உள்ளன. பெங்களூர் - ஐதராபாத் - கண்ணூர், மண்டைக்காடு - புளியங்குடி என்று தெற்கேயும் அதன் கொலைக்களம் பெருகி வருகிறது.

இசுலாமியத் தாயின் வயிற்றை அறுத்து, சிசுவை வெளியே எடுத்துக் வெட்டிக் கொல்கிறார்கள்; இசுலாமியப் பெண்ணைக் கற்பழித்த 15 வயது விடலைப் பையனுக்கு மாலை மரியாதை - பாராட்டு என்று கொண்டாடுகிறார்கள். குஜராத்தில் இப்போது நடப்பதுபோன்ற இத்தகைய குரூரங்கள் பலவற்றை ஏற்கனவே நாடு கண்டிருக்கிறது. பெண்களின் மார்பகங்கள் அறுக்கப்பட்டு, நிர்வாணமாக அடித்து ஓடவிட்டு அந்தக் கோலத்தை ''வீடியோ'' ஒளிப்படம் பிடித்திருக்கிறார்கள். இதே குஜராத்தின் சூரத்தில் மனைவியின் முன் கணவனை, தாயின் முன் மகனை உயிரோடு கொளுத்தியிருக்கிறார்கள். கால்வாயில், சாலையோரம், சாக்கடையில் முசுலீம்களை வெட்டி வீசியிருக்கிறார்கள். இசுலாமியர்கள் மட்டுமல்ல, கிறித்தவக் கன்னித் துறவிகளும் பாதிரியார்களும் கூட இந்து மத பாசிச அமைப்புகளின் தாக்குதலுக்குப் பலியாகி இருக்கின்றனர்.

அதேபோல, இந்துமத வெறி பாசிஸ்டுகள் இப்போது கட்டவிழ்த்து விட்டுள்ள மத வெறிப் படுகொலைகள் இறுதியானவையுமல்ல; குஜராத் மாநிலத்தோடு நின்றுவிடக் கூடியதுமல்ல. ஆனால், அப்படித்தான் நாட்டிலுள்ள நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகளும், ஜனநாயகப் பத்தாம்பசலிகளும், செய்தி ஊடகங்களும், ஏன் எதிர்த்தரப்பு ஓட்டுக்கட்சிகளும் கூட நம்பச்சொல்லுகின்றன. இராணுவத்தை அனுப்பி ''குஜராத் கலவர''த்தை ஒடுக்கி, அமைதியை நிலை நாட்டுவது; விசாரணைக் கமிசன் போட்டுக் குற்றவாளிகளைத் தண்டிப்பது; அதேபோல அயோத்தியில் நீதிமன்ற இறுதித் தீர்ப்புவரும் வரை இந்துமதவாத அமைப்பு

**பிரதமரின் தூதுவர் சத்ருகன் சிங்கிடம் (வலது) ராமஜென்ம பூமி நியாஸின் தலைவர் ராமச்சந்திர பரமஹம்ஸ் கல்தூணை ஒப்படைக்கிறார்: உச்ச நீதிமன்ற உத்தரவு செல்லாக்காசானது.**





படிப்பகம்

களை அடக்கி வைப்பது; தீர்ப்பு வந்த பிறகு, அதை அமலாக்குவது - இவற்றின் மூலம் அயோத்திப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும் என்றும் கூட அவை நம்பச் சொல்லுகின்றன.

### அயோத்தி:
### இந்து மதவெறி அடையாளம்

அயோத்தி விவகாரம் அவ்வளவு எளிதான தனியொரு பிரச்சினை அல்ல. தமது நம்பிக்கைக்குரிய கடவுளுக்கு இந்து மதத்தினர் ஒரு கோவில் கட்டிக் கொள்வது என்பது மட்டும் இதில் அடங்கவில்லை. ஆர்.எஸ்.எஸ். - விசுவ இந்து பரிசத் முதலிய அமைப்புகள் கூறிக் கொள்வதுபோல, அயோத்தி - ஒரே ஒரு கோவில் கட்டும் பிரச்சினையல்ல.

மதுரா, காசி என்று மசூதிகளை இடித்துக் கோவில்கள் கட்டுவது தொடரும். இப்படியே 3000 மசூதிகளை இடித்துக் கோவில்கள் கட்டுவது அவர்களின் தற்போதைய திட்டவட்டமான இலக்கு. கர்நாடகாவில் உள்ள பெல்காம் - ஈத்கா மைதானம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு இந்து ராணிக்குச் சொந்தமானது; அங்கே தேசியக் கொடி ஏற்றி இந்துக்கள் மீட்க வேண்டும்; மதுரை திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தர்காவை அகற்றி விட்டு கார்த்திகை தீபம் ஏற்றவேண்டும் என்றும் புதிதுபுதிதாகப் பிரச்சினைகளைக் கிளப்புவதுதான் அவர்களின் வழக்கமாகத் தொடரும்.

அதேசமயம், இந்துமதவெறி அமைப்புகள் கிளப்புவது வெறுமனே மதப்பிரச்சினை மட்டுமல்ல. ஒருபுறம் இந்து மதவாதிகள், மறுபுறம் இசுலாமியர், கிறித்தவர் முதலிய சிறுபான்மை மதவாதிகள் என்று இருதரப்பு மத நம்பிக்கைகளுக்கு இடையிலான மதவாத அடிப்படையிலான மோதல்கள்தாம் என்றும் கருதிவிட முடியாது. ''அயோத்தி - ராமன் கோவில் என்பது வெறும் மத நம்பிக்கை மட்டுமல்ல. இந்து தேசிய எழுச்சியின் சின்னம், இந்து தேசியத்தின் அடையாளம்'' என்று இந்து மத வெறி பாசிஸ்டுகள் திரும்பத் திரும்பக் கூறுகின்றனர். அயோத்தி பாபரி மசூதி மட்டுமல்ல; மதுரா, காசி முதலிய ''மசூதிகள் தேசிய அவமானச் சின்னங்கள்; அவற்றை இடிப்பது, அவமானச் சின்னங்களை அகற்றுவதாகும்'' என்று பெருமையுடன் கூறிக் கொள்கின்றனர்.

மசூதிகளை தேசிய அவமானச் சின்னங்களாகவும், ராமன் - கிருஷ்ணன் - காசி விசுவநாதர் கோவில்களை தேசிய அடையாளங்களாகவும், மசூதிகளை இடிப்பதும் அந்த இடங்களில் கோவில்களைக் கட்டுவதும் இந்துதேசிய எழுச்சியாகவும் ஒரு இயக்கம் கருதுகிறது என்றால், அங்கே வெறுமனே அரசியலையும் மதத்தையும் கலப்பது மட்டும் நடக்கவில்லை. இது வெறும் மதஅடிப்படைவாதமல்ல. ஒரு அரசியல் திட்டம் மத அவதாரம் எடுக்கிறது என்றுதான் பொருள். ஆப்கானின் தாலிபான் பாசிச ஆட்சியாளர்கள் இசுலாமிய அடிப்படைவாத அவதாரம் எடுத்ததைப் போல, ஜெர்மனியின் ஆரிய இன வெறி நாஜிக்கள் தேசியவாதத்துக்குள் புகுந்து கொண்டதைப் போல, ஆர்.எஸ்.எஸ். - வி.இ.ப. - பா.ஜ.க. பாசிஸ்டுகள் இந்து மதவாதத்துக்குள் புகுந்து கொண்டு, அதுவே இந்து தேசியம் என்று வாதிடுகின்றனர்.



அயோத்தியில் கல்தூண் தானம் கொடுக்கப்பட்ட அன்று, கட்டுக் காவலையும் மீறி திரண்ட கரசேவகர்கள்: யாருக்கு போலீசின் பாதுகாப்பு?

### இந்து பாசிசமே
### இறுதி இலக்கு

லல்லு - முலயம் போன்றவர்கள் ஒரு நிரந்தர ஓட்டு வங்கியை உருவாக்கிக் கொள்வதற்காக, சமூக நீதி - இட ஒதுக்கீடு அரசியலைப் பயன்படுத்துவதைப் போல, காங்கிரசுக் கட்சி முன்பு ஜனநாயக சோசலிசம் - நாட்டுடமை என்ற அரசியலை எடுத்துக் கொண்டதைப் போல, எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா கட்சி இலவசத் திட்டங்கள் - கவர்ச்சிவாத அரசியலை எடுத்துக் கொண்டதைப் போல, பெரும்பான்மை மதத்தினரிடையே ஒரு நிரந்தர ஓட்டு வங்கியை உருவாக்கிக் கொள்வதற்காக பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். - வி.இ.ப முதலியவை ''இந்துத்துவா''வைப் பயன்படுத்துகிறார்கள் என்கிற கருத்தை செய்தி ஊடகங்கள் பரப்புகின்றன. ஆனால், இந்த அமைப்புகளின் ''இந்துத்துவா'' அதற்கும் மேலான அரசியல் திட்டத்தை உள்ளடக்கியிருக்கிறது.

'''அயோத்தியில் ராமன் கோவில் கட்டுவது, காசுமீருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமை 370-ஆவது சட்டத்தை நீக்குவது, பொது சிவில் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றுவது - ஆகிய இவை மூன்றும்தான் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். முதலிய சங்கப் பரிவாரங்களின் அடிப்படைத் திட்டம். ஆனால், இந்த மூன்று கொள்கைகளையும் இப்போதைக்கு ஒதுக்கி வைத்துவிட்டு, ''மிதவாத வாஜ்பாயி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் 'தேசிய செயல் திட்டம்' அடிப்படையிலான ஆட்சிதான் நடக்கிறது'' என்று ஆளும் கட்சி மற்றும் அரசுத் தலைவர்கள் கூறிவருகின்றனர்.

சங்கப் பரிவாரங்கள் தொடரும் மத வெறிப் படுகொலைகள், ராமன் கோவில் கட்டுவதற்கான சிற்ப - கல்தூண் வேலைகள் பற்றி செய்திகளும், 2002-இல் கோவில் கட்டுமானப் பணியைத் துவங்கப் போவதாக வி.இ.ப. தலைவர்களின் பேட்டிகளும் வரும்போதெல்லாம் பா.ஜ.க. அரசு ''இரகசியத் திட்டம்'' ஒன்றை வைத்துச் செயல்படுவதாக எதிர்த்தரப்பு குற்றஞ் சாட்டுகிறது. ஆனால், பா.ஜ.க.வின் தற்போதைய நிகழ்ச்சி நிரலில் அயோத்தி பிரச்சினை கிடையாது; 'தேசிய செயல் திட்டம்'தான் உள்ளது என்று அவர்கள் சாதித்து வருகின்றனர்.

ஆனால், உண்மை என்னவென்றால், 'தேசிய செயல் திட்டம்' தள்ளி வைக்கப்பட்டு, ஒதுக்கி வைக்கப்பட்டு, மறைத்து வைக்கப்பட்டு அமலாக்கப்படும் இரகசியத் திட்டம் தவிர, ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - வி.இ.ப. - பஜ்ரங் தள் முதலிய சங்கப் பரிவாரங்களுக்கு வேறொரு உண்மையான திட்டம் உள்ளது. அதுதான் ''இந்துமதவெறி பாசிச பயங்கரவாத ஆட்சியை நிறுவும் திட்டம்.'' இந்தத் திட்டத்தை அவர்கள் இரகசியமாக வைக்கவில்லை. ''இந்துத்துவா'', ''ராம ராஜ்


படிப்பகம்

ஜியம்'' என்று வெவ்வேறு பெயர்களில் விளக்குகிறார்கள்.

இந்தத் திட்டத்துக்கு போதிய ஆதரவு திரட்டுவதற்கான பக்கபலமாகத்தான், ஒரு இடைக்கால ஏற்பாடாகத்தான் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பின் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதற்காகத்தான் அமைப்புக் கட்டுப்பாடும், இலட்சிய உறுதியும் கொண்டவை என்கிற போலித் தோற்றத்தையும் கூடக் கைவிட்டு சந்தர்ப்பவாத அரசியல் கூட்டு அரசாங்கங்களில் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் பங்கேற்கிறது. தேசிய ஒருமைப்பாட்டைக் காக்கவும், அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்கவும் தமது இலட்சியங்களைத் தியாகம் செய்துவிட்டுக் கூட்டணி அரசுகளில் பங்கேற்பதாக நாடகமாடுகின்றனர். ஆனால், தமது இந்து மதவெறி பாசிச பயங்கரவாத ஆட்சியை நிறுவும் திட்டத்துக்கான தயாரிப்புகளைச் செய்வதற்கு இந்த இடைக்கால அரசு அதிகாரம் அவசியம் என்று அறிந்தே சந்தர்ப்பவாத அரசியலில் குதித்துள்ளனர்.

1992 டிசம்பர் 6-இல் அயோத்தி பாபரி மசூதியை இந்து மதவெறியர்கள் தகர்த்தனர். அதற்கு முன்னரும் அதே நோக்கத்துக்காகத் திரண்டிருந்தனர் என்ற போதும், அதற்கு முன்பு உ.பி.யிலும் பீகாரிலும் ஆட்சியிலிருந்த முலயமும், லல்லுவும் இந்துமத வெறியர்களின் முயற்சிக்குக் கடும் எதிர்ப்புக் காட்டினர். ஆனால், அதன்பிறகு உ.பி.யில் அமைந்த பா.ஜ.க.வின் கல்யாண் சிங் ஆட்சி பாபரி மசூதி இடிப்புக்கு முழு பக்கபலமாக அமைந்தது. அப்போது மத்தியில் ஆட்சி புரிந்த காங்கிரசின் நரசிம்ம ராவும் உடந்தையாக இருந்தார். அதேபோல மத்தியிலுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசையும் அதன் ஏஜெண்டும், ஆர்.எஸ்.எஸ். எடுபிடியுமான உ.பி. ஆளுநரையும் இப்போது பயன்படுத்திக் கொண்டு ராமன் கோவிலுக்கு அஸ்திவாரம் தோண்டுவது, கல்தூண் தானமளிப்பது என்கிற பூசைகளை நடத்தி முடித்துள்ளனர்.

### இந்து பாசிஸ்டுகளின் கபட நாடகம்

இரட்டை வேடம் போடுவதும், நாக்கூசாமல் புளுகுவதும் முதலில் பாசிச சக்திகள் பழகிக் கொள்ளும் கலை. பிற இன, மத ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டது போல பேசுவார்கள்; ஆனால் தாமே பிற இன, மத மக்களை ஒடுக்குவார்கள். தேசபற்று, பிற நாடுகளின் ஆக்கிரமிப்பு பற்றியெல்லாம் கூச்சல் போடுவார்கள்; ஆனால், தாமே தேசத் துரோகிகளாகவும், ஆக்கிரமிப்புப் போர் வெறியர்களாகவும் இருப்பார்கள். பயங்கரவாத, பிளவுவாத ஆபத்து குறித்துப் பீதி கிளப்புமளவு கத்துவார்கள்; ஆனால், தாமே பயங்கரவாதிகளாகவும், மத, இன, பிராந்திய ரீதியான பிளவுகளை ஏற்படுத்துபவர்களாகவும் விளங்குவார்கள். சட்டம், ஒழுங்கு, நீதி, தர்மத்தின் காவலர்களைப் போல நாடகமாடுவார்கள்; ஆனால், தாமே அவற்றை மீறும் அராஜக வெறியர்களாக இருப்பார்கள்.


இப்படித்தான், பாபரி மசூதியை இடித்தபோதும், இப்போது ராமன்கோவில் கட்டுமானத்தின் போதும் நடந்து கொள்ளுகிறார்கள். பாபரி மசூதியை இடிக்க மாட்டோம், அங்கே பூசைகளும், யாகங்களும் நடத்துவதற்காக மட்டுமே கரசேவகர்கள் கூடுகிறார்கள் என்று நாட்டின் உச்சநீதி மன்றத்திடம் எழுத்துமூலம் வாக்குறுதியளித்தனர், இந்து மதவெறி பாசிஸ்டுகள். அப்போது, உ.பி. முதல்வராக இருந்த பா.ஜ.க. கல்யாண் சிங், சட்டம் - ஒழுங்கையும் பாபரி மசூதியையும் பாதுகாப்பதாக உறுதியளித்தார். ஆனால், உ.பி. போலீசையும், துணை இராணுவப் படையையும் கரசேவகர்களின் பாதுகாவலர்களாக இருந்து உதவும்படி செய்து பாபரி மசூதியை இடிக்கச் செய்தார்.

இரத யாத்திரைகளும் செங்கல் பூசைகளும், மதவெறிப் படுகொலைகளும் நடத்தியபோது பெருவாரியான ''இந்து மக்கள்'' ஆதரவு திரண்டதைப் போல, பாபரி மசூதி இடிப்பிற்கும், அதைத் தொடர்ந்து நடத்திய மதவெறி - கொலை வெறியாட்டத்திற்கு ''இந்து மக்கள்'' ஆதரவு பெருகும் என்று பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். - வி.இ.ப கூட்டம் நம்பியது. ஆனால், உ.பி.யிலேயே அந்தக் கூட்டத்தை மக்கள் நிராகரித்தனர். முலயம் சிங், மாயாவதி கட்சிக்குப் பெரும்பான்மையாக வாக்களித்தனர். ஆனால், இவர்களுக்கிடையிலான பதவிச் சண்டையைப் பயன்படுத்திக் கொண்டு, கட்சி மாறிகளைப் பிடித்து ஒரு கிரிமினல் ஆட்சியை இந்துமத வெறிக் கூட்டம் நிறுவியது. ஆனால், உ.பி.யில் தற்போது நடந்த தேர்தல்களில் இந்து மதவெறிக் கூட்டம் மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - வி.இ.ப. முதலிய இந்து மதவாத அமைப்புகளுக்கிடையேயும், அதன் தலைவர்களான அத்வானி, வாஜ்பாய்க்கு இடையேயும் கூட கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன; ''இந்துத்துவா'' கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றுவதா, மிதவாத அடிப்படையில் நிதானமாகச் செயல்படுவதா என்கிற கருத்து வேறுபாடு நிலவுகிறது; அதுதான் அயோத்தி விவகாரத்திலும் பிரதிபலிக்கிறது - என்ற கருத்தை செய்தி ஊடகங்கள் பரப்புகின்றன.

''1984 தேர்தல்களில் உ.பி.யில் இரண்டே இரண்டு எம்.பி. தொகுதிகளில் வெற்றி பெற முடிந்த பா.ஜ.க. பின்னர் ஆட்சியைப் பிடிக்குமளவு வளர்ந்ததற்குக் காரணம் அயோத்திப் பிரச்சினையில் காட்டிய தீவிரப் போக்குதான்; வாஜ்பாயி தலைமை பின்பற்றிய சமரச மிதவாதம் காரணமாகத்தான் சமீபத் தேர்தல்களில் பா.ஜ.க. தோல்வியடைந்தது; மீண்டும் பா.ஜ.க. செல்வாக்குப் பெற வேண்டுமானால் இந்துத்துவா கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்ற வேண்டும்'' என்று வலியுறுத்தும் பிரிவினர் கை ஓங்கும் என்று ஒரு கணிப்பு கூறுகிறது.

''இல்லை. வாஜ்பாயினுடைய தாராளவாதக் கண்ணோட்டம், அரசியல் அனுபவ முதிர்ச்சி ஆகியவை காரணமாக கூட்டணிக் கட்சிகளைச் சமாளித்துக் கொண்டும் இந்துத்துவா தீவிரவாதிகளை அடக்கி வைத்தும் திறமையாக ஆட்சி நடத்துகிறார். பா.ஜ.க.வுக்குத் தற்போதுள்ள செல்வாக்கு வாஜ்பாயினுடைய அணுகுமுறையினால் வந்ததுதான். இப்போதும் கூட அயோத்தி




**இராமர் கோயில் கட்டுவதற்காக அயோத்தியில் கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டுள்ள கல்தூண்கள்.**

www.padippakam.com



**சட்டம் - நீதிமன்றம் எதையும் மதிக்கமாட்டோம் என அதிரடி-பூனைப்படை பாதுகாப் போடு பேட்டி கொடுக்கும் அசோக் சிங்கால் (நடுவில்) மற்றும் ராமச்சந்திர பரமஹம்ஸ்.**

விவகாரத்தில் ஒரு பெரும் கலவரம் மூள்வதைத் தடுத்து, உச்சநீதி மன்றத் தீர்ப்பையும் அமலாக்கிவிட்டதோடு வி.இ.பரிசத்தின் கோரிக்கையையும் அமை தியான முறையில் நிறைவேற்றிவிட்டார்'' என்று பாராட்டும் வேறொரு கணிப்பும் உண்டு.

இந்து மதவெறி அமைப்புகளுக்குள் பிளவும், மோதலும் நிலவுவதாகக் கூறு வதும் சரி, மிதவாதம் - தீவிரவாதம் என்று இரு போக்குகள் நிலவுவதாகக் கூறுவதும் சரி - இரண்டுமே தவறான கணிப்புகள் - சித்தரிப்புகள் தாம். தாத்தா மோதிலால் நேரு காலத்தில் இருந்து பேத்தி இந்திரா காலம் வரை காங்கிரசுக் கட்சி இப்படி ஒரு நாடகமாடியது. அதேபோலத்தான் இதுவும்.

வாஜ்பாய் ஒரு பகிரங்கமான உல்லாசப் பேர்வழி என்பது 1977-79 ஜனதா ஆட்சியில் வெளியுறவு அமைச்ச ராக இருந்தபோது அம்பலமானது. எந்த வொரு விசயத்திலும் மழுப்பலாகப் பேசி வழுக்கிக் கொள்வதில் வல்லவர். அயோத்தி பாபரி மசூதி இடிப்பில் அவர் நேரடியாகப் பங்கு பெறவில்லை; இரத யாத்திரை போகவில்லை. இந்து மதவெறி பாசிச நடவடிக்கைகளை நியாயப்படுத்துவ தற்கான வேலை அவருக்கு ஒதுக்கப்பட்டி ருந்தது. இதை வைத்தே அவர் ஒரு மித வாதி, தாராளவாத அரசியல்வாதி என்ப தாகச் சித்தரிக்கப்படுகிறது.

ஆனால், எந்தவொரு விசயத்திலாவது இந்து மதவெறி அமைப்புகளின் நடவடிக் கைகளுக்கு எதிராக அவர் சுண்டு விரலை உயர்த்தியதாகக் கூற முடியுமா? பிரதம ராகப் பதவியேற்றதும் தான் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தவாதி என்பதை நாடாளுமன் றத்தில் உறுதிப்படுத்திப் பேசினார். குஜ ராத்தில் கிறித்தவர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்படுவதைப் பற்றி கேட்ட போது, ''மதமாற்றம் பற்றிய தேசிய விவாதம் தேவை'' என்று கூறி ஆர்.எஸ்.எஸ். நிலையெடுத்தார். மசூதி இடிப்பானாலும், பாதிரியார் கொளுத்தப் பட்டதானாலும், குஜராத்தில் குரூரமான மதப்படுகொலைகளானாலும் அவற்றுக் காக வருந்துவதாகவும், கண்டிப்பதாகவும் முதலைக் கண்ணீர் வடிப்பார்.

அயோத்தி ராமன் கோவில் கட்டுமான பூஜை - கல்தூண் தான பூசை விசயத்தில் வாஜ்பாயி மேற்கொண்ட இரட்டை வேடம் - செய்திகளைக் கூர்ந்து கவனிப்பவர்களின் கேலிக்குரியதாகியது. ராமன் கோவில் கட்டுமானப் பணி துவங்குவதற்கு வி.இ.ப. குறித்துள்ள தேதிக்குள், அதற்கான தடை களை அகற்றிவிடப் போவதாக கடந்த ஜன வரி வரை வாஜ்பாய் திரும்பத் திரும்ப வாக்குறுதியளித்து வந்தார். அதற்காக இசு லாமியப் பிரமுகர்கள் சிலரை அழைத்துப் பேசினார். பாபரி மசூதி இருந்த இடம் தவிர அரசு கையகப்படுத்தியுள்ள பகுதியில் கட்டுமானப் பணி துவங்குவதற்கான பூசை நடப்பதற்கு ஒப்புக்கொள்ளும்படி கோரினார். அவர்கள் மறுத்து விடவே, மசூதி இருந்த இடம் தவிர அதைச் சுற்றி அரசு கையகப்படுத்தியிருக்கும் பகுதியை (67 ஏக்கர்) இராமன் கோவில் கட்டும் பணிக்காக வி.இ.ப.விடம் ஒப்படைப்பதற் குள்ள சட்ட வழிகளைக் கண்டறியுமாறு சட்ட அமைச்சருக்கு உத்திரவு போட்டார். சட்ட அமைச்சகத்தின் ஒப்புதலோடு அங்கு பூசை நடத்துவதற்கு அனுமதிப்பதாகவும் கூறினார். ஆனால், இசுலாமியத் தலைவர் களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியது.

### தமிழக பார்ப்பன கும்பலின் சதித்தனம்

இதற்கிடையே, வி.இ.பரிசத்தின் பாசிசத் தலைவர் அசோக் சிங்கல், ஜெயல லிதா - காஞ்சி சங்கராச்சாரி - முன்னாள் அரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் ஆகிய தமிழகப் பார்ப்பனக் கும்பலை அணுகினார். மத்திய அரசே கோரும் பட்சத்தில் அயோத்தி விவகாரத்தில் தலை யிட்டு சமரசம் செய்விப்பதாக காஞ்சி மட சங்கராச்சாரி ஆட்டம் காட்டவே, இராணுவ மந்திரி பெர்னாண்டஸ் நேரடியாக காஞ்சி வந்து தண்டனிட்டார். (இந்து மத பாசிச கும்பலின் அதிகாரபூர்வமற்ற அரசியல் தர கர்தான் இந்த பெர்னாண்டஸ் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஜெயலலிதா விடம் தூதுபோனது, ஒரிசாவில் பாதிரியார் எரிப்பு முதல் சமீபத்திய குஜராத் மதப் படு கொலைகள் வரை ஆங்காங்கே போய் இந்து மதவெறிக் கும்பலுக்கு வக்காலத்து வாங்குவதுதான் இவரது முதன்மையான வேலை).

தமிழ்நாட்டு பார்ப்பன அதிகார வர்க்கத்தின் பக்கபலத்தோடு அயோத்தி விவகாரத்தில் ஒரு சமாதான நாடகமா டினார் சங்கராச்சாரி. இவரைப் போலி சங்க ராச்சாரி என்று ஒதுக்கித் தள்ளும் பிற நான்கு சங்கராச்சாரிகள் உட்பட சாதுக்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள் பலரும் ஆர்.எஸ்.எஸ். - வி.இ.ப - பா.ஜ.க.வின் தலைமையை ஏற்க மறுத்துவிட்டனர். இந்த நிலையில் இந்து மதவெறியின் ஏகபோக பீடாதிபதியாகிய காஞ்சி சங்கராச்சாரி சமா தானம் என்கிற பெயரில் வி.இ.பரிசத்தின் திட்டத்தையே முன் வைத்தார்.

அதாவது, முன்பு மசூதி இருந்த இடம் தவிர, அரசு கையகப்படுத்தியுள்ள நிலத்தை வி.இ.ப - ராமன் கோவில் கட்டு மான அறக்கட்டளையிடம் ஒப்படைப்பது, அங்கு பூசை நடத்திக் கோவில் கட்டும் வேலையை உடனடியாக நடத்துவதற்கு அனுமதிப்பது, உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பு வந்தபிறகு அதன்படி மசூதி இருந்த இடத்தை ஒப்படைப்பது. இதுவரை ''உச்ச நீதி மன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட மாட்டோம்'' என்று கூறிவந்த வி.இ.ப., இனி ''தீர்ப்பை ஏற்றுக் கொள்வோம்'' என்று வாக்குறுதி அளிக்கவேண்டும் - இதுதான் காஞ்சி சங்கராச்சாரியின் சமரசத் தீர்வு. ''நீ அரிசி கொண்டு வா, அவன் உமி கொண்டு வருவான். இரண்டையும் கலந்து ஊதி ஊதித் தின்னலாம்'' என்கிற தீர்வு. வேறுவகையில் கூறுவதானால், ''உன்னு டையதெல்லாம் என்னுடையது; என்னுடை யதெல்லாம் என்னுடையது'' என்கிற நியாயம். காஞ்சி மட சங்கராச்சாரி தனது சக பாடிகளான இந்து வெறித் தலைவர்களி டமும், இசுலாமியத் ''தலைவர்''களிடமும் பேசிய உடனே, தனது முயற்சி வெற்றி பெற்று விட்டதாகப் பத்திரிகையாளர்க ளிடம் தானே பீற்றிக் கொண்டார்.

காஞ்சி மட சங்கராச்சாரியின் துதிபா டிகள் - எடுபிடிகளான தமிழ்நாட்டுப் பார்ப்பன அதிகார வர்க்கத்தினர் தமது தொடர்புகள், உறவுகளை வைத்து செய்தி ஊடகங்களிலெல்லாம் பரபரப்பு கிளப் பினர். அடுத்த நாளே காஞ்சி மட சங்கராச் சாரியின் நாடகம் அம்பலமானது. ''நீதி


படிப்பகம்

மன்றத் தீர்ப்பு எதுவானாலும் ஏற்பதாகக் கூறவில்லை'' என்று இந்துவெறியர் கூட்டம் அறிவித்தது. இசுலாமியப் பிரமுகர்களும் காஞ்சி மட சங்கராச்சாரியின் சதித் திட்டத்தை ஏற்கவில்லை. அப்போதும் விடாத தமிழ்நாட்டுப் பார்ப்பன கும்பல், ''இசுலாமியத் தலைவர்களின் பிடிவாதத்தால்தான் காஞ்சி முனிவரின் சமரசம் நிறைவேறாமற் போனது'' என்று இப்போதும் புளுகி வருகிறது.

மசூதி இருந்த இடத்தில்தான் கருவறை வைத்து ராமன் கோவில் கட்டுவது என்பது இந்துவெறியர்களின் திட்டம். அத்திட்டத்தைக் கைவிடுவதாக அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இப்போதைக்கு கருவறை தவிர பிற பகுதிகளைக் கட்டுவது; இறுதியில் அடாவடி செய்து கருவறையையும் கட்டி விடுவது; நீதிமன்றத் தீர்ப்பு தமக்கு எதிராக வந்தால் மதிப்பதில்லை; மறுத்து அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடுவது; இப்போதைக்கு நீதிமன்றத் தீர்ப்பை மதிப்பதாகப் புளுகி கோவில் கட்டுவதை ஆரம்பித்து விடுவது; மசூதி இருந்த இடம் இசுலாமியருக்குச் சொந்தமென்று தீர்ப்பு வந்தாலும் அந்த இடத்தைச் சுற்றிக் கோவிலைக் கட்டிய பிறகு என்ன செய்துவிட முடியும்? இடித்தா விடுவார்கள்? என்கிற துணிச்சல்தான் இந்து மதவெறியர்களின் திட்டம். அப்புறம் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவது, புளுகுவது, கொடுத்த வாக்குறுதியை மீறுவது, நம்பிக்கைத் துரோகம் இதெல்லாம் இந்துவெறியர்களின் கைவந்த கலை.

### இந்து பாசிச சதியும் பிற ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத்தனமும்

இந்தப் பாரம்பரியத்தில் ஊறிய வாஜ்பாய், கல்தூண் பூசைக்கு ஒருபுறம் அனுமதி தருவதாகக் கூறிக்கொண்டே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமலாக்குவதாக உறுதி கூறிக் கொண்டிருந்தார்; ஒரு அடையாள பூசைதான் நடக்கப் போகிறது என்று இந்துவெறியர்கள் மழுப்பினார்கள். 'சர்ச்சைக்குரிய இடத்திலோ கையகப்படுத்தப்பட்ட இடத்திலோ, உண்மையான பூசையோ, அடையாள பூசையோ எதுவும் கூடாது' என்று உச்சநீதிமன்றம் தடை விதித்தது. அதை அப்படியே அமலாக்கப் போவதாக வாஜ்பாய் கூறினார். ஆனால், அமைச்சர்கள், உ.பி. ஆளுநர், இந்து மதவெறி அமைப்புகளின் தலைவர்கள், அதிகாரிகள் பலவாறாகவும், முரணாகவும் பேசி வந்தனர்.

அயோத்தியில் பூசைகள் நடத்துவதையும், கரசேவகர்கள் திரளுவதையும் தடுப்பதற்காக என்று கூறி போலீசு - துணை இராணுவத்தைக் குவித்தனர். ஆனால், இந்து மதவெறியர்களின் பாதுகாப்புக் காகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவர்கள் அறிவித்தபடியே கல்தூண் தான பூசை நடந்தது. கல்தூணை அரசு தரப்பில் பெற்றுக் கொள்வதற்காக பிரதமர் அலுவலகத்தில் இருந்து ஒரு அதிகாரி தனிவிமானத்தில் அனுப்பப்பட்டார். தான பூசை, தடைவிதிக்கப்பட்ட இடத்திற்கு வெளியே நடந்தது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் மீறாமல், இந்துத் தலைவர்கள் விருப்பப்படியும் அமைதியாக, திறமையாக வாஜ்பாய் சாதித்துவிட்டதாக செய்தி ஊடகங்கள் பாராட்டின.

ஆனால், இந்து மதவெறியர்கள், தங்கள் சதியைத் திட்டமிட்டவாறு சாதித்தனர் என்பதுதான் உண்மை. உச்ச நீதிமன்றத் தடையை மீறிக் கல்தூண் தானத்தை மத்திய அரசின் சிறப்பு அதிகாரியே முன்னின்று நடத்தினர். ''வாஜ்பாய் இரட்டை வேடம் போடுகிறார்; உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார்'' என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ் சாட்டுகின்றன. ஆனால், அயோத்தி விவகாரத்தை முன்வைத்து இந்துமத வெறியர்கள் கட்டவிழ்த்து விட்டுள்ள பாசிச பயங்கரவாத அராஜகம் இந்த எதிர்க்கட்சிகளின் மிக முக்கியமான பலவீனங்களால் தொடரும் என்பதில் சந்தேகமில்லை. இந்து மதவெறியர்களின் பாசிச பயங்கரவாத நடவடிக்கைகள் எதுவானாலும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கும்படி அவர்களின் கூட்டுச் சதிகாரர்களின் தலைமையிலான அரசிடமே மன்றாடுகின்றன. நீதி விசாரணை, சி.பி.ஐ. விசாரணை, நாடாளுமன்றக் குழு விசாரணை என்று எப்போதும் கோரி வந்தன. இப்போதுதான் இரு இந்துமத வெறி அமைப்புகளுக்குத் தடை விதிக்கக் கோரின. அதையும் உடனே மறந்து விட்டன. வாஜ்பாய் அரசில் பங்கேற்கும் கூட்டணிக் கட்சிகளில் மதச்சார்பற்றவை எனப்படுபவைகளின் சலசலப்புகள் கூட, அவர்களின் பதவிகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறுதான் அமைந்துள்ளன. ஐந்தாண்டுகளுக்கு முன்புவரை தீண்டத்தகாத மதவெறி அரசியல் அமைப்பாகக் கருதப்பட்ட பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுடன் இப்போது பல கட்சிகளும் கூடிக் குலாவுகின்றன.

பிற ஓட்டுக் கட்சிகளின் இத்தகைய பலவீனங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் பா.ஜ.க., நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயக அமைப்புகளுக்கு வெளியே அமைப்பு பலத்தைத் திரட்டிக் கொள்வதில் கூடுதலாகக் கவனம் செலுத்தி வருகிறது. மேற்கே குஜராத், இராசஸ்தான் முதல் கிழக்கே அசாம், ஒரிசா; வடக்கே உ.பி, பீகார் முதல் தெற்கே கேரளா, தமிழ்நாடு என நான்கு திசைகளிலும் வி.இ.ப. - பஜ்ரங்தள், இந்து முன்னணி ஆகிய இந்து பாசிச அமைப்புகளை, குண்டர் படைகளைக் கட்டியமைத்து வருகிறது. ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளும் கிரிமினல்களும் அமைத்துள்ள சமூக விரோதக் கூட்டணியில் இப்போது மதவெறியர்களும் இணைந்துள்ளனர். நாடு முழுவதும் கிரிமினல் குற்றக் கும்பல்களும் மதவெறியர்களும் இணைந்தே மதவெறிப் படுகொலைகள் நடத்துவதைப் பார்க்கிறோம். சமீபத்திய குஜராத் படுகொலைகளில் இந்த உண்மை துலக்கமாக வெளிப்பட்டது.

நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் ''இந்துத்துவா'' அரசியலுக்குள்ள செல்வாக்கு அதன் எல்லையைத் தொட்டு விட்டது. நாடாளுமன்றத்தில் அது தனிப் பெரும்பான்மை பலம் பெற்று, முழுக்கவும் ஒரு சொந்த அரசாங்கத்தை தேர்தல்கள் மூலம் நிறுவும் சாத்தியம் இருண்டே காணப்படுகிறது. ஆகவே, நாடு முழுவதும் பீதியூட்டும் ஏதாவது ஒரு அதீதச் செயலில் ஈடுபட்டு, தனது பாசிச பயங்கரவாத ஆட்சியை நிறுவுவதற்காகக் காத்திருக்கிறது.

● ஆர்.கே.

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகத் தோழர்களே, முகவர்களே,

* புதிய ஜனநாயகம் இதழின் அலுவலகம் புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. இனி கடிதத் தொடர்பு அனைத்திற்கும்,

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம், (மாநகராட்சி வணிக வளாகம்)**
**63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.**

என்ற புதிய முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

* மாதமிருமுறை இதழாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வெளிவந்து கொண்டிருந்த புதிய ஜனநாயகம், ஏப்ரல் - 2002 இதழ் தொடங்கி மாத இதழாக வெளிவரும். தனி இதழ் விலை: ரூ 5.00; ஆண்டு சந்தா: ரூ. 60.00

* ஏற்கனவே சந்தா தொகை ரூ. 120/- என்ற அடிப்படையில் தொகை அனுப்பியுள்ள சந்தாதாரர்களுக்கு, அவர்கள் செலுத்தியுள்ள சந்தா நீடிக்கும் காலம் வரை தொடர்ந்து இதழ் அனுப்பப்படும்.

— ஆசிரியர் குழு, புதிய ஜனநாயகம்.

www.padippakam.com

# நெல் கொள்முதல் மோசடி விவசாயிகளுக்குப் பேரிடி

கடந்த ஆண்டு நடந்த சட்டசபை தேர்தல்களில் வென்று, பாசிச ஜெயா முதல்வர் நாற்காலியில் அமர்ந்தவுடனேயே, உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, தமிழக அரசு நடத்தி வரும் நெல் கொள்முதலிலும் தாராளமயத்தைப் புகுத்தினார். இதன்படி வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் நெல் / அரிசி எடுத்துச்செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டன. காவிரி பாசன விவசாயிகளிடம் இருந்து அரசுக்கு இணையாக தனியார் மண்டி வியாபாரிகளும் நெல் கொள்முதல் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இந்த சீர்திருத்தம் அறிவிக்கப்பட்டவுடனேயே தாராளமயத்தின் கூஜாக்கள் அனைவரும், ''இனி விவசாயிகளின் வீட்டுக் கூரையைப் பொத்துக் கொண்டு பணம் கொட்டும்'' எனக் கதையளந்தனர். ஆனால் அவர்கள் ஊதிவிட்ட இந்த ஜிகினா வேலையெல்லாம் விவசாயிகளிடம் பலிக்கவில்லை. காவிரி பாசன நெல் விவசாயிகள் கடந்த மூன்று மாதங்களாக, ''முறையாக நெல் கொள்முதலை நடத்தக் கோரி'' நடத்தி வரும் போராட்டங்கள், ஜெயா புகுத்திய இந்த சீர்திருத்தம் விவசாயிகளிடம் சந்தி சிரித்து விட்டதையே எடுத்துக் காட்டுகின்றன.

காவிரி பாசனப் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாத மத்தியில் சம்பா அறுவடை துவங்கும் பொழுதே, அப்பாசனப் பகுதியெங்கும் பரவலாக 950 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். ஆனால், இந்த ஆண்டு அறுவடையின் பொழுது, சனவரி 1-க்குப் பிறகும் கூட 950 மையங்களும் முழுமையாகத் திறக்கப்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திறக்கப்பட்டிருந்த மையங்களும் நெல்லைக் கொள்முதல் செய்யாமல் விவசாயிகளின் வயிற்றில் அடிப்பதிலேயே குறியாக இருந்தன.

வழக்கம் போல நெல்லை மூன்று தரமாகப் பிரித்துக் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக, இந்த முறை கொள்முதலைக் கழித்துக் கட்டுவதற்காகவே, நெல் இரண்டு தரமாக மட்டும் பிரிக்கப்பட்டது. ''இந்த முறை பனி அதிகமாகப் பெய்வதால் நெல்லின் ஈரப்பதத்தை 22 சதவீதமாக நிர்ணயிக்க வேண்டும்'' என விவசாயிகள் கோரி வந்ததை அரசு காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், நெல்லின் ஈரப்பதத்தை 18 சதவீதமாக நிர்ணயம் செய்தது. ''இந்த ஆண்டு ஒவ்வொரு மூட்டை நெல்லுக்கும் ஊக்கத் தொகையாக ரூ. 75/- தர வேண்டும்'' என விவசாயிகள் கோரி வந்தார்கள். ஆனால், ஜெயா அரசோ கடந்த ஆண்டு கொடுத்த நாற்பது ரூபாய்க்கு மேல் ஒரு சல்லிக் காசு கூடத் தர முடியாது எனக் கூறிவிட்டதோடு, இரண்டாம் தர நெல்லுக்கு ஊக்கத் தொகையில் இருந்து ரூ. 14/- பிடித்துக் கொள்ளப்படும் என்றும் அடாவடித்தனமாக அறிவித்தது.

ஜெயா கும்பலின் இந்த அடாவடித்தனங்களை எதிர்த்துப் போராடிய விவசாயிகள் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். கடந்த சனவரி 22-ந் தேதி, ஒரத்த நாடு தாலுகாவைச் சேர்ந்த விவசாயிகள், ''முறையாக நெல் கொள்முதலை நடத்தக் கோரி'' பாப்பா நாட்டில் சாலை மறியல் நடத்திய பொழுது, அவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை போலீசு நடத்தியது. சாலை மறியலில் ஈடுபட்ட 29 விவசாயிகளை போலீசு நிலையத்திற்கு இழுத்துப் போய் மீண்டும் தாக்கிய போலீசு, அவர்கள் மீது பிணையில் வெளிவர முடியாத வழக்குகளைத் தொடுத்தது.

இப்படி விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்கிய ஜெயா கும்பல், இன்னொரு புறமோ சனவரி மாத இறுதியில் பாசனப் பகுதியெங்கும் பெரும்பாலான நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறந்தது. இந்த நிலையங்கள் ஆண்டிப்பட்டி தேர்தலையொட்டி ஊரை ஏய்ப்பதற்காகத் திறக்கப்பட்டனவே தவிர, அங்கும் முறையாக நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. அரசு அறிவித்த தரக் கட்டுப்பாட்டின்படி இருக்கும் நெல்லைக் கூட கொள்முதல் செய்யாமல், ''சாக்கு இல்லை; பணம் இல்லை'' என சாக்கு போக்கு சொல்லி, அதிகார வர்க்கம் விவசாயிகளை இழுத்தடித்தது. ஒரு நாளைக்கு முன்னூறு மூட்டைகளுக்கு மேல் நெல் கொள்முதல் செய்ய வேண்டாம் என ஜெயா அரசு வாய்மொழி உத்தரவு போட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால், விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்வது போல பாவனை காட்டி விட்டு, அவர்களை மண்டி வியாபாரிகளின் பக்கம் தள்ளி விடுவதுதான் ஜெயா அரசின் நோக்கம்.

நெல் கொள்முதல் நடத்துவதைப் போல காட்டி வந்த பாவனைகளையும், ஜெயா கும்பல் மார்ச் 15 அன்று அடி

தொடர்ச்சி 11-ஆம் பக்கம்





தஞ்சாவூருக்கு அருகேயுள்ள காளிமேட்டில் நேரடி கொள்முதல் நிலையத்தின் முன்னும் (மேல்படம்), ஒரத்த நாட்டில் வட்டாரக் கொள்முதல் நிலையத்திலும் கொள்முதல் செய்யப்படாமல் குவிந்து கிடக்கும் நெல் மூட்டைகள். நெல் கொள்முதல் நிலையங்களை மூடுவதற்கு முன்னும், பின்னுமுள்ள இலட்சணம் இதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

# பறிபோகும் நெய்வேலி பரிதவிக்கும் தொழிலாளி

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கும் மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் அடுத்த பலி கடா நெய்வேலி நிலக்கரி நிறுவனம்.

என்.எல்.சி. என்று சுருக்கமாக அழைக்கப்படும் நெய்வேலி நிலக்கரி நிறுவனம், தெற்காசியாவிலேயே மிகப் பெரிய இரு திறந்தவெளி சுரங்கங்களையும், தென்னிந்திய மாநிலங்களின் மின் தேவையைப் பெருமளவில் ஈடுசெய்யும் மின் உற்பத்தி நிலையத்தையும், உரத் தொழிற்சாலையையும் கொண்டது. அதனோடு, தொழிலாளர் குடியிருப்புப் பகுதி, கல்விக்கூடம், போக்குவரத்து வசதி, நவீன மருத்துவ வசதிகளுடன் கூடிய மருத்துவமனையையும் உள்ளடக்கி ஏறக்குறைய நூறு சதுர மைல் பரப்பளவிற்கு நிமிர்ந்து நிற்கிறது என்.எல்.சி.

இந்நிறுவனத்தில் பணிபுரியும் 19,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைத் தவிர, ஒப்பந்த தொழிலாளர்களாகவும், இந்நிறுவனத்தைச் சார்ந்து துணை தொழில்களில் ஈடுபடுவதன் மூலமாகவும் பல ஆயிரம் தொழிலாளர்கள் தங்களின் வாழ்க்கைக்கு என்.எல்.சி.யை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். கல்விக் கூடம், மருத்துவமனை, நலத்திட்டங்கள் என்று பல வகைகளில் சுற்று வட்டத்திலுள்ள ஐம்பதுக்கும் மேலான கிராமங்கள் இந்நிறுவனத்தோடு பின்னிப் பிணைந்துள்ளன.

இந்தியாவை 'சோசலிச' நாடாக்குவது என்ற நேரு அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் ரூபாய் 1700 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்ட என்.எல்.சி.யின் இன்றைய சொத்து மதிப்பு 5000 கோடி ரூபாயைத் தாண்டும். நடப்பு நிதி யாண்டில் மட்டும் இந்நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ. 1000 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படும் ஒரு யூனிட் மின்சாரத்தின் அதிகபட்ச விலையே ரூ. 1.75 தான்.

இவ்வளவுதூரம் இலாப மீட்டக் கூடிய என்.எல்.சி.யை எதற்காகத் தனியாருக்கு விற்க வேண்டும்? என்று கேட்டால் ''இதுதான் இரண்டாம் கட்ட பொருளாதார சீர்திருத்தம்'' என்கிறார் தனியார்மய மாக்கல் துறை அமைச்சர் அருண் ஷோரி.

இதற்கு முன் மாடர்ன் பிரட், பால்கோ முதலிய பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும்போது அவை நட்டத்தில் இயங்குவதாக காரணம் கூறியது மத்திய அரசு. அப்போதும் கூட அந்நிறுவனங்களின் இலாபத்தை மூடி மறைத்து பொய்யாக நட்டக் கணக்குக் காட்டியும், சொத்து மதிப்பைக் குறைத்துக் காட்டியும்தான் அடிமாட்டு விலைக்கு விற்றுத் தள்ளியது.

இப்போது அந்த வழிமுறைகளெல்லாம் கைகழுவிவிட்டு மிகவும் வெளிப்படையாகவே, ''நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை யார் வாங்குவார்கள்? இலாபத்தில் இயங்கும் போதுதான் நல்ல விலைக்கு விற்க முடியும்!'' என்று 'நியாயம்' பேசுகிறது மத்திய அரசு. கடந்த ஆண்டுகளில் தனியார்மயத்தை ஆதரித்த நடுத்தர வர்க்கத்தினர் கூட, அரசின் இந்த இரண்டாம் கட்ட பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர்.

என்.எல்.சி.யைத் தனியாருக்கு விற்றால் அங்கு வேலை செய்யும் பல ஆயிரம் தொழிலாளர்களின் குடும்பங்கள் வீதிக்குத் துரத்தப்படுவது ஒருபுறமிருக்க, மின் உற்பத்தி போன்ற முக்கியமான துறைகளில் தனியாரை அனுமதிப்பது எங்கு போய் முடியுமென்பதற்கு மகாராஷ்டிராவில் நுழைந்த என்ரானே மிகப் பொருத்தமான எடுத்துக்காட்டு. இன்று ரூ. 1.75-க்கு விற்கப்படும் ஒரு யூனிட் மின்சாரம் தனியாரிடம் சென்ற பிறகு அதுவே பத்து ரூபாய்க்குக் கூட விற்கப்படலாம். இதனால் சாதாரண மக்கள் அனைவரும் பாதிக்கப்படுவதோடு, தமிழக மின்சார வாரியமும் கூடத் திவாலாகிவிடும்.

ஆனால், பா.ஜ.க. அரசின் கவலையோ எப்படிச் சிக்கலில்லாமல் என்.எல்.சி.யை விற்பது என்பதாகவே உள்ளது. முதலில் 51 சதம் பங்குகளைத் தனியாருக்கு விற்பது என முடிவு செய்து, அதற்கென ராமகிருஷ்ணன் கமிட்டியை அமைத்தது. அக்கமிட்டி, சுரங்கங்களைத் தனியாரிடம் ஒப்படைப்பது குறித்தும், என்.எல்.சி.யின் நிலம் தமிழக அரசிடம் 99 ஆண்டுகள் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளதால் அதை விற்கும்போது உண்டாகும் சட்டச் சிக்கல்கள் பற்றியும் 'எடுத்துக்'கூறி விற்பதற்குப் பரிந்துரை செய்துள்ளது. அதனையொட்டி முதல் கட்டமாக ஏற்கனவே உள்ள இயக்குனர் போர்டு உறுப்பினர்களை மாற்றி அந்த இடத்தில் ஓட்டுக் கட்சி பிழைப்புவாதிகளை அமர்த்தும் வேலையை தொடங்கி விட்டது, மைய அரசு. இன்னொரு பக்கம், இந்திய தரகு முதலாளித்துவ நிறுவனங்களான ரிலையன்ஸ் மற்றும் டாடா குழுமங்களும், ஹாலந்து நாட்டின் பிலிப்ஸ் நிறுவனமும், அமெரிக்காவின் சி.எம்.எஸ். நிறுவனமும் என்.எல்.சி.யைக் கைப்பற்றும் போட்டியில் இறங்கியுள்ளன.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைத் தனியாருக்கு விற்பதை எதிர்த்து இங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் கடந்த 18-ஆம் தேதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். போலி கம்யூனிஸ்டுகள் மற்றும் ஓட்டுக்கட்சிகளின் பிழைப்புவாதத் தொழிற்சங்கங்களோ, இப்போதுதான் மனித சங்கிலி போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம் என்று சாவகாசமாய்ப் போராட தொடங்கியுள்ளன. ஏற்கனவே பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கும் விற்கும்போதும், ஏன் இப்போதும்கூட இந்நடவடிக்கை நாட்டை மீண்டும் காலனியாக்குவதன் ஒரு அம்சம்தான் என்பதை தொழிலாளிக்குப் போதிக்காமல், தனக்கு நேர்ந்துள்ள பாதிப்பாக மட்டுமே குறுக்கி, தொழிலாளர்களைப் பொருளாதார வாதத்திலேயே இத்தொழிற்சங்கங்கள் மூழ்கடித்து வருகின்றன.

வை.கோ, இராமதாசு முதலிய பா.ஜ.க.வின் எடுபிடி

**மனித சங்கிலி போராட்டம் என்.எல்.சி. தனியார்மயமாவதைத் தடுத்து விடுமா?**





படிப்பகம்

www.padippakam.com

தலைவர்கள் என்.எல்.சி.யைத் தனியார்மய மாக்குவதை கண்டித்து அறிக்கை விட்டுக் கொண்டிருக்க, புதிய தமிழகம், விடுதலை சிறுத்தைகள் முதலான 'தலித்'கட்சிகள் தனி யார்மயத்திலும் இட ஒதுக்கீடு கோருகின் றன.

ஒருவேளை, தொழிலாளர்களின் போராட்டத்தாலும் எதிர்கட்சிகளின் கூச்ச லாலும் அரசு 51 சதம் பங்குகளை விற்பதி லிருந்து அதை 26 சதமாகக் குறைத்துக் கொள்ளலாம். அல்லது சுரங்கங்களை மட்டும் தனியாருக்கு விற்பது போன்ற கூறு போடும் நடவடிக்கையில் இறங்கலாம். ஆனால் மத்திய அரசின் புதிய பொருளா தாரக் கொள்கையை எதிர்க்காமல் அதை நிர்பந்திக்கும் உலக வர்த்தகக் கழகத்திலி ருந்து இந்தியாவை வெளியேறச் சொல்லி போராடாமல் இக்கண்துடைப்பு நடவடிக் கைகளைக் கண்டு, தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போனதாக அமைதியடைவ தைவிட அபாயம் எதுவுமில்லை.

இதை மூடிமறைத்துவிட்டு வாய் சவடா லடிக்கும் ஓட்டுக் கட்சிகளையும், துரோகத் தொழிற்சங்கங்களையும் நம்புவதால் எந்த பலனுமில்லை. மாறாக, புரட்சிகர அரசி யலின் கீழ் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பு தொழிலாளர்களையும் ஒன்றி ணைத்துப் போர்குணத்துடன் போராடு வதைத் தவிர வேறு வழியுமில்லை; மாற்றமும் இல்லை.

● பச்சையப்பன்

9-ஆம் பக்கத் தொடர்ச்சி

யோடு நிறுத்திவிட்டது. அதேசமயம் நய வஞ்சகத்தோடு, ''ஏப்ரல் 15 முடிய காவிரி பாசனப் பகுதியின் வட்டாரத் தலைநகரங் களில் மட்டும் நெல் கொள்முதல் செய்யப் படும்; ஆனால், ஊக்கத் தொகை வழங்கப் பட மாட்டாது'' எனத் தடாலடியாக அறி வித்தது.

சம்பா நெல் அறுவடையின் பொழுது காவிரி பாசனப் பகுதியில் திறக்கப்படும் நெல் கொள்முதல் நிலையங்கள் வழமை யாக மே மாத மத்தி வரை செயல்படும். ஆனால், இந்த முறை அந்த வழக்கத்திற்கு மாறாக, இரண்டு மாதங்களுக்கு முன்பே நெல் கொள்முதல் நிலையங்களை அடி யோடு மூடி விட்டது தமிழக அரசு.



நேரடிக் கொள்முதல் நிலையங்களை மீண்டும் திறக்கக் கோரி தஞ்சாவூர் - பழைய பேருந்து நிலையம் முன் நடந்த சாலை மறியல்.

கிட்டதட்ட 3 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படாமல் கொள்முதல் நிலையங்களின் முன் குவிந்து கிடக்கும் பொழுது, பல இடங்களில் அறுவடையே இன்னும் முடியாத பொழுது, ஜெயா கும்பல் கொள்முதல் நிலையங்களை இழுத்து மூடியது நெல் விவசாயிகளின் தலையில் பேரிடியாகவே இறங்கியது. இதனால் நெல் விவசாயிகள் பல்வேறு எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு, ''நெல் கொள்முதல் நிலையங்களை மீண்டும் திறக்கக் கோரி'' மார்ச் 23 அன்று முழுக் கடையடைப்புப் போராட்டத்தை காவிரிப் பாசனப் பகுதிகளில் நடத்தினர். பாசிச ஜெயா கும்பலோ தனது முடிவை நியாயப் படுத்தவும், விவசாயிகளின் போராட் டத்தை அவதூறு செய்து ஒடுக்கும் முகமா கவும், ரேசன் கடைகளின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் தேவைக்கு அதிகமாகவே நெல் கொள்முதல் செய்யப்பட்டு விட்டதாகப் புளுகி வருகிறது.

தமிழக அரசு விவசாயிகளிடமிருந்து 7.5 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லைக் கொள்முதல் செய்திருப்பதாகக் கூறுகிறது. இதில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல் 3 இலட்சம் டன் தான். மீதி 4.5 இலட்சம் டன் நெல்லை, விவசா யிகள் என்ற போர்வையில் மண்டி வியாபா ரிகள் அரசிடம் விற்று, கொள்ளை இலாபம் அடித்திருக்கின்றனர். இந்த மோசடியை விவசாய சங்கங்கள், எதிர்க்கட்சிகள் மட்டு மின்றி பத்திரிகைகளும் அம்பலப்படுத்தி விட்டன.

தமிழகத்தின் காவிரி பாசனப் பகுதி தவிர்த்த பிற பகுதிகளில் அரசு கொள்முதல் நிலையங்களைத் திறக்காததால், அந்தப் பகுதி விவசாயிகள் வேறு வழியில்லாமல் மண்டி வியாபாரிகளிடம் 450 ரூபாய்க்கு நெல் மூட்டைகளை விற்கின்றனர். இப்படி விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு நெல் மூட்டைகளை வாங்கும் மண்டி வியா பாரிகள், அவற்றை காவிரிப் பாசனப் பகு திக்குக் கொண்டு வந்து, விவசாயிகள் என்ற போர்வையில் அரசிடம் 600 ரூபாய்க்கு விற்று கொள்ளை இலாபம் அடித்துள்ளனர். வெளி மாவட்டங்களுக்கு நெல்லைக் கொண்டு செல்லும் தடை நீக்கப்பட்டது, இந்தக் கொள்ளைக் கூட்டத்துக்குத்தான் சாதகமாக அமைந்தது.

அரசு கொள்முதல் நிலையங்கள் மண்டி வியாபாரிகளுக்குச் சாதகமாக நடந்து கொண்டு, விவசாயிகளை மோசடி செய்வதை சட்டசபையிலேயே மறுத்துப் பேசினார் ஜெயா. அதன் பின்னர் அவரே அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டதற்கு மட்டரக நெல் ரகங்களை மண்டி வியாபாரிகள் விற்க முயன்றதையும் ஒரு காரணமாகக் கூறினார். இதன் மூலம் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதை அவரே ஒப்புக் கொண்டார்.

நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறந்து வைத்து மொத்த வியாபாரிகளுக்கு சேவை செய்த பாசிச ஜெயா கும்பல், இப்பொழுது கொள்முதல் நிலையங் களைத் தடாலடியாக மூடியதன் மூலமும் அவர்களுக்குத் தான் உதவியிருக்கிறது. மூன்று இலட்சம் டன்னுக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்படாமல், தேங்கிக் கிடக்கும் நிலையில், அரசு மீண்டும் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து முறையாகக் கொள்முதலை நடத்தா விட்டால், தேங்கிக் கிடக்கும் நெல்லை மண்டி வியாபாரிகளிடம் விற்பதைத் தவிர, காவிரிப் பாசன நெல் விவசாயிகளுக்கு வேறு வழி கிடையாது. ஏற்கனவே, ''காவிரிப் பாசன நெல் தரம் குறைந்தது'' என அறிவித்துவிட்ட மண்டி வியாபா ரிகள், தேங்கிக் கிடக்கும் நெல்லை அடி மாட்டு விலைக்கு வாங்கிக் குவிக்கக் காத்து கிடக்கிறார்கள்.

நெல் கொள்முதலில் தனியாரை அனும திப்பது; 'மானிய'ச் செலவைக் காட்டி அரசு நெல் கொள்முதல் செய்வதைப் படிப்படி யாகக் கைகழுவுவது - இவை, ரேசன் கடை களை இழுத்து மூடுவதற்கான இன்னொரு பாதை. எனவே, பாசிச ஜெயா கும்பல், காவிரிப் பாசன சிறு / நடுத்தர நெல் விவ சாயிகளின் மீதும், 12 இலட்சம் விவசாயக் கூலிகளின் மேலும் தொடுத்திருக்கும் இந்தத் தாக்குதல், தமிழகத்திலுள்ள வறிய மக்கள் அனைவரின் மீதும் தொடுத்துள்ள தாக்குதலுமாகும்!

● ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

# குஜராத்
# இந்தியாவின் போஸ்னியா!

குஜராத் மாநிலத்தில் முசுலீம்கள் மீது இந்து மதவெறி பயங்கரவாதிகள் நடத்தி வரும் தாக்குதல், இன்னும் தணிந்துவிட வில்லை; அவர்கள் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதல்கள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாகிவிடாதபடி 'அடக்கி' நடத்தப்படுகின்றன.

இராம ஜென்மபூமி நியாஸ், அயோத்தியில் பிரதமரின் தூதுவரிடம் ''தூண் தர்னம்'' கொடுத்த மார்ச் 15 அன்று, குஜராத்தின் தெருக்களில் 'மகா ஆரத்தி' நடத்தப்பட்டு, கலவரத்தின் அடுத்த கட்டம் துவங்கி வைக்கப்பட்டது.

மார்ச் 15,16 ஆகிய இரு தினங்களில் மட்டும், பரோடா நகரில் முசுலீம் குடியிருப்புகள் மீது இந்து மதவெறிக் கும்பல் நடத்திய தாக்குதலில் 4 முசுலீம்கள் கொல்லப்பட்டதோடு, இருபத்துக்கும் மேற்பட்டோர் கத்தியால் குத்தப்பட்டுப் படுகாயமடைந்துள்ளனர். அகமதாபாத், பரோடா, பலாசினோர், பெட்லாட் உள்ளிட்டு பல்வேறு நகரங்களும், கிராமப் புறங்களும் மார்ச் மூன்றாவது வாரத்தில் கூட ஊரடங்கு உத்தரவின் பிடியில் இருந்தன.

கோத்ராவில் எரித்துக் கொல்லப்பட்ட இராம சேவகர்கள் 58 பேர்தான்; அந்தத் தாக்குதலில் இந்திய ரயில்வே துறைக்கு ஏற்பட்ட நட்டம் இரண்டே இரண்டு ரயில் பெட்டிகள் மட்டும்தான். ஆனால், இதைச் சாக்காக வைத்து இந்து மதவெறிக் கும்பல் நடத்தி வரும் பயங்கரவாதத் தாக்குதலின் முதல் பத்து நாட்களுக்குள், எரித்துக் கொல்லப்பட்ட அல்லது கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்ட முசுலீம்களின் எண்ணிக்கை 1500-ஐத் தொட்டு விட்டது; முசுலீம்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், பயிர்கள் உள்ளிட்டுச் சூறையாடப்பட்ட அவர்களின் சொத்துக்களின் மதிப்பு கிட்டத்தட்ட 3000 கோடி ரூபாய். சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்ட முசுலீம்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 1.25 இலட்சம்.

குஜராத்தில் நடந்து வரும் இந்த இந்து மதவெறி பயங்கரவாதத் தாக்குதலைப் பற்றி செய்தி சேகரிக்கச் செல்லும் பத்திரிகையாளர்களில் பெரும்பாலோர் கூட, இதைக் ''கலவரம்'' எனக் குறிப்பிடுவது கிடையாது; ''கலவரம் என்றால் ஆயுதம் தாங்கிய இரண்டு கும்பல்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ள வேண்டும். ஆனால் குஜராத்திலோ இந்து மதவெறிக் கும்பலும், அரசும் ஒன்றோடொன்று கைகோர்த்துக் கொண்டு, முசுலீம் இனப்படுகொலையை நடத்துகின்றன. போஸ்னியாவில், கொசோவாவில் நடந்தது போன்ற 'இனத் தூய்மை' வெறியாட்டம்தான் குஜராத்தில் நடந்து வருகிறது'' என அவர்கள் அம்பலப்படுத்துகிறார்கள்.

கொல்லப்பட்ட முசுலீம்களின் எண்ணிக்கையோ, அல்லது அகதிகளாக்கப்பட்ட முசுலீம்களின் எண்ணிக்கையோ இந்தக் கலவரத்தை இனப் படுகொலை எனக் குறிப்பிடும்படி பத்திரிகையாளர்களைத் தூண்டி விடவில்லை. மாறாக, நிராயுதபாணியான முசுலீம் ஆண்கள், பெண்கள், நிறை மாத கர்ப்பிணிகள், குழந்தைகள்; முசுலீம் மக்களின் மத மற்றும் கலாச்சார அடையாளச் சின்னங்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அழித்தொழிக்கப்படும் விதம்தான் பத்திரிகையாளர்களை இப்படிக் குறிப்பிட வைக்கிறது.

### வக்கிரமான முறையில் நடந்த கொலைகள் - பாலியல் வன்முறைகள்

அகமதாபாத் நகரிலேயே இனப்படுகொலை கோரத் தாண்டவமாடிய பகுதி நரோடா பாட்டியா தான். கோத்ரா சம்பவம் நடந்த மறுநாள், இந்து மதவெறியர்கள் ''பந்த்'' நடத்திய பிப்.28 அன்று மட்டும் இந்தப் பகுதியில் 110 முசுலீம்கள் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். அன்று, இந்த இனப்படுகொலை தொடங்கும் முன்பாக, நரோடா பாட்டியாவிற்கு வந்து, இந்து மதவெறிக் குண்டர்களை ஆசிர்வதித்துச் சென்றவர் விசுவ இந்து பரிசத்தின் பொதுச் செயலாளர் பிரவீண் டோகாடியா.

இந்தப் பகுதியைச் சேர்ந்த பல முசுலீம் தாய்மார்களும், இளம் பெண்களும் மட்டுமின்றி, இளம் சிறுமிகள் கூட கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு, அதன்பின் கத்தியலால் மண்டை பிளக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்; இந்து மதவெறியர்களால் தூக்கிச் செல்லப்பட்ட பல இளம் முசுலீம் பெண்களின் கதி என்னவானதென்றே தெரியவில்லை என அகதி முகாம்களில் இருக்கும் அவர்களின் உறவினர்கள் அழுது புலம்புகிறார்கள்.

முசுலீம்கள் ஒளிந்திருந்த ஒரு வீட்டினுள் தரையெங்கும் தெப்பம் போல தண்ணீரைப் பீய்ச்சியடித்த இந்து மதவெறியர்கள், அதன்பின் உயர் அழுத்த மின்சார

முற்றிலுமாக அடித்து நொறுக்கப்பட்டு, எரிக்கப்பட்ட முசுலீம் குடியிருப்பு; தனது கண்முன்னே நெருங்கிய உறவினர்கள் அனைவரும் எரித்துக் கொல்லப்பட்டதைக் கண்டு மனம் ஒடிந்து போன ஃபைசன் மியான் சிந்தி. (நன்றி: இந்தியா டுடே)




படிப்பகம்

www.padippakam.com

கம்பிகளை அவ்வீட்டிற்குள் தூக்கிப் போட்டனர். இந்த நவீன வக்கிரத் தாக்கு தலில் 19 முசுலீம்கள் மரக் கட்டைகளைப் போலக் கருகி இறந்து போனார்கள்.

இதைவிட மிகவும் கொடூரமான வக்கி ரமான முறையில் சலியா பெஹன் என்ற நிறைமாத கர்ப்பிணிப் பெண் எரித்துக் கொல்லப்பட்டார். இந்து மதவெறிக் கும்பல் இவரை உயிரோடு எரிக்கும் முன்பாக, அவரின் வயிற்றைக் கிழித்து, அரைகுறையாக வளர்ந்திருந்த சிசுவை வெளியே எடுத்து, அதை முதலில் எரித்துக் கொன்றனர். அதன்பின் ரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடந்த சலியா பெஹனையும், அவரது மூன்று வயது மகன் மங்கனையும், ஆறு மாதக் குழந்தை சுபினையும் ஒன்றாக உயிரோடு எரித்துக் கொன்றனர்.

அன்று மயிரிழையில் உயிர் பிழைத்த சலியா பெஹனின் நெருங்கிய தோழி பாத்திமா பீ, ''இப்படி எங்களைக் கொடூர மாக உயிரோடு எரித்துக் கொல்வதற்கு டயர்களையும், பெட்ரோலையும் வாரிக் கொடுத்தவர்கள் அரசு பேருந்துக் கழகக் குடியிருப்பில் வசிப்பவர்கள்தான்'' எனக் குற்றஞ் சுமத்துகிறார். குற்றுயிரும் குலையு யிருமாகக் கிடக்கும் பாத்திமா பீயின் மகன் குவாஜா ஹுசைன் கொடூரமாகத் தாக்கப் பட்ட அதிர்ச்சியின் காரணமாக வாய் பேச முடியாத ஊமையாகி விட்டான்.

## “இதைக் கற்பனைகூட செய்து பார்க்க முடியாது!”

ஆயுப் குரேஷி என்ற தொழிலாளி, ''அகமதாபாத்தைச் சேர்ந்த எனக்குக் கலவ ரங்கள் புதியதல்ல; ஆனால், இதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. இது ஒரு மரணத் தாண்டவம். எனது வாழ்நாள் முழுவதும் இந்தக் கலவரம் என்னைத் துரத்திக் கொண்டே இருக்கும்'' என உடலெங்கும் நடுங்க இந்தத் தாக்கு தலைப் பற்றிக் கூறுகிறார்.

இந்து மதவெறி பயங்கர வாதிகள் குரேஷியின் கண் முன்னாலேயே, அவரின் ஐந்து வயது மகன் சோகேல் லையும், ஏழு வயது மகள் ஃபர்னாவையும் மண்ணெண்ணையை ஊற்றி, அந்த இளம் பிஞ்சு களைத் துடிதுடிக்க எரித்துக் கொன்றனர். ''என் குழந்தை களை இந்து மதவெறியர்கள் என்னிடமிருந்து பறித்துக் கொண்டபொழுது, அவர்கள் கண்களில் தெரிந்த மரண பீதியை என் வாழ்நாள் முழு வதும் மறக்க முடியாது'' எனக் கூறித் தேம்புகிறார், அவர்.

தனது குழந்தைகளைப் பறிகொடுத்த ஆயுப் குரேஷி என்ற முசுலீம் மட்டுமல்ல, அகமதாபாத் நகர போலீசு கமிசனர் பி.சி. பாண்டே என்ற இந்துவும் கூட, ''எனது 32 வருடப் பணிக் காலத்தில் இதுபோன்ற கொலைவெறிக் கும்பலைப் பார்த்த தில்லை'' எனக் குறிப்பிடுகிறார்.

உயிர் பிழைத்த தனது இரு குழந்தைகளுடன் ஆயுப் குரேஷி. (நன்றி: இந்தியா டுடே)




### இனப்படுகொலைக்குக் கிராமப்புறங்களும் தப்பவில்லை

''பசுவின் இறைச்சியைத் தின்பவர் களின் கிராமத்தைத் தூய்மைப்படுத் துங்கள்; முசுலீம்கள் அனைவரையும் அகற்றித் தூக்கியெறியுங்கள்; அவர்களை ஓட ஓட விரட்டிக் கொல்லுங்கள்;'' - பஞ்ச்மகால் மாவட்டத்திலுள்ள பந்தர் வாடா என்ற கிராமத்தில், பிப்ரவரி முதல் வாரம் நடந்த விசுவ இந்து பரிசத் பொதுக் கூட்டத்தில் இந்து மதவெறியர்கள் ஆற்றிய 'தேசபக்த' உரை இது. இன்று அந்தக் கிரா மத்தில் பெயருக்கு முசுலீம் என்று சொல்லிக் கொள்ளுவதற்குக்கூட ஒரு வரும் கிடையாது.

பந்தர்வாடா கிராமத்தில் காலங் கால மாக இருந்து வந்த முசுலீம் குடியிருப்புகள் அனைத்தும் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட தோடு, கிட்டதட்ட 21 முசுலீம்கள் படு கொலை செய்யப்பட்டனர். தப்பிப் பிழைத்த முசுலீம்கள் கோத்ராவில் உள்ள அகதி முகாமில் தஞ்சம் அடைந்திருக்கின் றனர்.

''பந்தர்வாடாவில் நடந்த இனப் படு கொலையைத் தலைமையேற்று நடத்தி யவன் உள்ளூர் பா.ஜ.க. தலைவன் என்ற போதும், அவன் தலைமையில் வந்த கொலைகார கும்பல் முகம் தெரியாத வெளியூர்க்காரர்கள்'' என்கிறார், தப்பிப் பிழைத்த அக்தர் ஹுசைன் சையத். இவ ரோடு சேர்ந்து இவரது தாயும் தங்கையும் தப்பிக்க முயன்றபொழுது, அவர்கள் இரு வரும் இந்து மதவெறியர்களால் சுற்றி வளைக்கப்பட்டு, உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர்.

✸ பஞ்ச்மகால் மாவட்டத்திலுள்ள மற்றொரு கிராமமான அஞ்சன்வாவில், நான்கு குழந்தைகள் உள்ளிட்டு 11 முசு லீம்கள், கிணற்றுக்குள் வீசி எறியப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். ''அவர்கள் எங்கள் குடிசைகளைத் தீ வைத்துக் கொளுத்திய பொழுது, நாங்கள் உயிரைக் காத்துக் கொள்ள வீட்டில் இருந்து வெளியேறி ஓடினோம். அப்பொழுது அவர்கள் கையில் சிக்கிக் கொண்டவர்கள் அனை வரும் கிணற்றுக்குள் வீசியெறியப்பட்டுக் கொல்லப்பட்டதாக''க் கூறுகிறார், மக்சூதா. கிணற்றுக்குள் வீசப்பட்டுக் கொல்லப்பட்ட நான்கு குழந்தைகளில், இரண்டு குழந் தைகள் மக்சூதாவின் குழந்தைகள்.

✸ குஜராத்தின் தலைநகர் காந்திநகரில் இருந்து அறுபது கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள சர்தார்புரா என்ற கிரா மத்தில், இனப்படுகொலைக்கு முன்பு பத்தான், மேமன், மன்சுரி, ஷேக் ஆகிய பிரி வுகளை சேர்ந்த 450 முசுலீம் குடும்பங்கள் வசித்து வந்தன. மார்ச் 1 அன்று பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு 32 முசுலீம்கள் உயி ரோடு எரித்துக் கொல்லப்பட்ட பின்பு, அந்தக் கிராமம் முசுலீம் குடும்பம் அறவே இல்லாமல் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது. அக்கிராமப் பஞ்சாயத்து அலுவலகத்தை ஒட்டியிருந்த முசுலீம்களின் கடைகளும் சூறையாடப்பட்டு, தீ வைத்துக் கொளுத்தப் பட்டுவிட்டன.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த முசுலீம்கள் இந்து மதவெறியர்களால் தாக்கப்படுவது இதுதான் முதல்முறை எனக் கூறப்படுகி றது. முசுலீம்கள் தாக்கப்படுவதைத் தடுப்ப தற்காக இக்கிராமமக்கள் ஒரு அமைதி கமிட்டியை அமைத்திருந்தனர். ஆனாலும் கூட, உள்ளூர் இந்து மதவெறியர்கள் இரண்டு பேர் வெளியூர்களில் இருந்து 1500-க்கும் அதிகமான வி.இ.ப, பஜ்ரங் தள் குண்டர்களைத் திரட்டி வந்து இத்தாக்கு தலை நடத்தி முடித்தனர்.

இந்தக் கும்பல் முசுலீம்களின் குடிசை களை ஒவ்வொன்றாகக் கொளுத்திக் கொண்டே வந்தபொழுது, கிட்டதட்ட 40-50 முசுலீம்கள் உயிரையாவது காத்துக் கொள்ள கான்கிரீட் கூரை போட்ட ஒரு வீட்டுக்குள் புகுந்து கதவை மூடிக் கொண்டனர். இந்து மதவெறிக் கும்பல் அந்த வீட்டிற்குள் பெட்ரோலையும், மண்ணெண்ணையையும் ஊற்றிக் கொளுத் தியதால், அந்த வீட்டிற்குள் தஞ்சம் புகுந்தி ருந்த முசுலீம்களில் 32 பேர், ஒரே இடத்தில் எரிந்து சாம்பலாயினர்.

காவலுக்கு நின்றிருந்த போலீசார் இந்த இந்து மதவெறிக் கும்பல் கிராமத்திற்குள் நுழைந்த பொழுது, அவர்களை எச்சரிக்கும் வண்ணம் வானத்தை நோக்கிக் கூடச் சுட வில்லை. அந்தக் கும்பல் மீது நான்கு கண்ணீர் புகை குண்டுகளை மட்டும் வீசி



படிப்பகம்

www.padippakam.com

யெறிந்து விட்டு ஒதுங்கிக் கொண்டு விட்டனர். 450 முசுலீம் குடும்பங்களின் மீது மாலையில் தொடங்கப் பட்ட தாக்குதல் நள்ளிரவு வரை நீடித்தது. மின் கட்டணம் செலுத்தாததால் அக்கிராமத்துத் தெரு விளக்குகளின் மின் இணைப்பைத் துண்டித்து விட்டிருந்த மின்சார வாரியம், படுகொலை நடந்த அன்று, திடீரென மின் இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்து, இந்து மதவெறிக் கும்பலுக்கு உதவியது.

“1969-க்குப் பின் குஜராத்தில் பல முறை இந்து மதவெறிக் கலவரங்கள் நடந்திருந்த பொழுதும், இப்பொழுதுதான் குஜராத்தின் அனைத்துக் கிராமப்புறங்களும், மலைவாழ் மக்கள் அதிகமாக வாழும் பஞ்ச்மகால், சபர்கந்தா மாவட்டங்களும் கலவரத்தை அனுபவிக்கின்றன” என்கிறார் பஞ்ச்மகால் மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் ராஜீ பார்கவ்.

கிட்டதட்ட 2,600 கிராமங்களில் இருந்து முசுலீம்கள் அகதிகளாகத் துரத்தியடிக்கப்பட்டிருப்பதோடு, அக்கிராமங்களில் அவர்களுக்குச் சொந்தமாக இருந்த அனைத்து உடைமைகளும் சூறையாடப்பட்டுத் தீக்கிரையாக்கப் பட்டுவிட்டன. கிராமங்களில் இருந்து தப்பியோடி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பள்ளிவாசல்களிலும்,' தன்னார்வத் தொண்டு நிறுவன முகாம்களிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்திருக்கும் கிராமப்புற முசுலீம்கள் 'அமைதி' திரும்பினால்கூட, தங்களது சொந்த கிராமத்திற்குத் திரும்பிவிடாதபடி பீதியூட்டப்பட்டுள்ளனர்.



அகமதாபாத் - கோமதிபுரா இடுகாட்டில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ள முசுலீம் மக்கள்.

சவாலா என்ற ஊரிலுள்ள அகதி முகாமில் தஞ்சமடைந்திருக்கும் பசுமியா பத்தான், “இந்த முகாமை விட்டு வெளியே போகவே எனக்கு அச்சமாக இருக்கிறது; இந்த தாடியைப் பார்க்கும் விநாடியே, அவர்கள் என்னைக் கொன்று போட்டு விடுவார்கள்” என முசுலீம்களின் மனநிலையைப் புட்டு வைக்கிறார்.

மெஹ்சானா மாவட்டத்தைச் சேர்ந்த ரித்ரோல் கிராமத்தில் பனாரஸ் சேலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 400 முசுலீம் நெசவுத் தொழிலாளர்கள், இந்த இனப்படுகொலையில் இருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்து விட்டனர். கிட்டதட்ட பதினெட்டு ஆண்டுகளாக ரித்ரோல் கிராமத்தில் தங்கி, சேலைகளை நெய்து வரும் இந்த நெசவுத் தொழிலாளர்கள், இந்த இனப்படுகொலைக்குப் பின், தங்களது சொந்த ஊரான காசிக்குத் திரும்பிச் சென்று விட்டனர்.

ஷகில்பாய் என்ற நெசவுத் தொழிலாளி “நாங்கள் இனி ஒருபோதும் குஜராத்துக்குத் திரும்ப மாட்டோம். இங்கே நிறைய பணம் சம்பாதிக்கலாம். ஆனால், உயிருக்கே உத்தரவாதம் இல்லாத பொழுது, பணத்தால் என்ன பயன்?” என்று

# சூறையாடப்பட்ட முசுலீம் நிறுவனங்களின் பட்டியல்

இந்த இனவெறிப் படுகொலையின் பொழுது முசுலீம் மக்களையும், அவர்களது குடியிருப்புப் பகுதிகளையும் தாக்கி அழிப்பது மட்டுமே இந்து மதவெறியர்களின் நோக்கமாக இருக்கவில்லை. முசுலீம்களுக்குச் சொந்தமான கடைகள், வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகளைத் தாக்கி அழிப்பதன் மூலம் முசுலீம் சமூகத்தின் பொருளாதார பலத்தை உடைப்பதும், இந்து முதலாளிகளுக்குப் போட்டியாக முசுலீம் முதலாளிகள் செல்வாக்கு செலுத்தி வந்த தொழில்களில் இருந்து அவர்களைத் துரத்தியடிப்பதும் இந்து மதவெறி பயங்கரவாதிகளின் நோக்கமாக இருக்கிறது.

அகமதாபாத் நகரில் மட்டும் முசுலீம்களுக்குச் சொந்தமான 712 கடைகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன; 250 கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு, தரைமட்டமாக்கப்பட்டு விட்டன. இந்துவும், முசுலீமும் கூட்டாகச் சேர்ந்து நடத்தி வந்த வர்த்தக நிறுவனங்கள் கூட, இந்தத் தாக்குதலில் இருந்து தப்பிவிடவில்லை.

“ஆஷீர்வாத்”, “சஃப்ரான்” (Saffron) (காவி) என்ற இரு கடைகள் இந்தத் தாக்குதலில் தரைமட்டமாகிப் போயின. இந்தக் கடைகளின் பெயரை வைத்துப் பார்க்கும் பொழுது இவை இந்து முதலாளிகளுக்குச் சொந்தமானவை என்றுதான் நினைக்கத் தோன்றும். ஆனால், இந்து மதவெறி பயங்கரவாதிகள் இந்தக் கடைகள் முசுலீம்களுக்குச் சொந்தமானது எனக் கண்டுபிடித்து தாக்கி அழித்துள்ளனர்.

இந்த இனவெறிப் படுகொலை தொடங்குவதற்கு முன்னதாகவே, இந்து மதவெறிக் கும்பல், அகமதாபாத் நகரில் முசுலீம்களுக்குச் சொந்தமான கடைகள் / வர்த்தக நிறுவனங்கள் பற்றிய முழு விவரங்களையும் அகமதாபாத் நகராட்சியிடமிருந்து வாங்கி வைத்துக் கொண்டது. இதனால்தான் இந்து மதவெறி கும்பலால் இந்துக்களின் கடைகளுக்கு மத்தியில் இருக்கும் முசுலீம் கடைகளை மட்டுமல்லாது, பெயரை வைத்து அடையாளம் காண முடியாத முசுலீம்களுக்குச் சொந்தமான நிறுவனங்களைக் கூடத் துல்லியமாகத் தாக்கி அழிக்க முடிந்தது.

✱ அம்மாநிலத்தின் நெடுஞ்சாலைகளில் “செலியா” (Chelliya) முசுலீம்களால் நடத்தப்பட்டு வந்த சைவ உணவு விடுதிகளில், கிட்டதட்ட 1000 உணவு விடுதிகள் இன்று சாம்பலாகி விட்டன.

✱ அம்மாநிலமெங்கும் முசுலீம்களுக்குச் சொந்தமாக இருந்த பேக்கரி நிறுவனங்களில் 75 சதவீத நிறுவனங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டன. இதன் மதிப்பு மட்டும் கிட்டதட்ட 50 கோடி ரூபாய் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முசுலீம்களுக்குச் சொந்தமான 800 லாரிகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டதால் அவை நெடுஞ்சாலைகளில் எலும்புக் கூடுகளாக நிற்கின்றன.

✱ பருப்பு உற்பத்தியிலும், விற்பனையிலும் கோலோச்சி வந்த தாவூதி போஹ்ரா முசுலீம்களுக்குச் சொந்தமான ஆலைகளில் பெரும்பாலானவை சூறையாடப்பட்டும், தீ வைத்துக் கொளுத்தப்பட்டும் அழிக்கப் பட்டு விட்டன.

தாவூதி போஹ்ரா முசுலீம்களுக்குச் சொந்தமான நிறுவனங்களும், உடைமைகளும் இதுவரை நடந்த எந்தவொரு இந்து மதவெறிக் கலவரத்திலும் தாக்கப்பட்டது கிடையாது. இப்பொழுது, தாவூதி போஹ்ரா முசுலீம்களின் தொழில்


படிப்பகம்

www.padippakam.com

கூறிவிட்டுதான் காசிக்கு ரயில் ஏறினார்.

### போலீசின் இந்து மதவெறி

நரோடா பாட்டியா பகுதியில் ஐயாயிரத்துக்கும் அதிகமான இந்து மதவெறிக் கும்பல் புகுந்து இனப்படுகொலையைத் தொடங்கிய பொழுது, அப்பகுதி முசுலீம்கள் இந்துமதவெறிக் கும்பலின் மீது கற்களை வீசியெறிந்து தடுக்க முயன்றனர். அந்த சமயத்தில், அந்தப் பகுதியில் பாதுகாப்புக்காக நின்ற போலீசார், இந்து மதவெறிக் கும்பலைத் தடுத்துக் கொண்டிருந்த முசுலீம்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, நான்கு முசுலீம்களைக் கொன்று, முசுலீம்களின் எதிர்ப்பைச் சிதறடித்து, இந்து மதவெறியர்கள் எவ்விதத் தடையுமின்றி இனப்படுகொலையை நடத்துவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தனர். மேலும், கலவரம் தொடங்குவதற்கு முன்பாகவே சிவில் உடையில் இந்தப் பகுதிக்குள் புகுந்த போலீசார், முசுலீம்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள தயாராக ஆயுதங்கள் சேகரித்து வைத்துள்ளனரா என இந்து மதவெறியர்களுக்காக வேவு பார்த்துச் சென்றனர்.

முசுலீம் பகுதியான அர்பன் நகரைத் தாக்கி, அதற்கு அருகில் உள்ள ஹரிதாஸ் நகரில் இருந்து இந்து அடியாட்கள் திரட்டப்பட்டனர். பஜ்ரங் தளத்தின் தலைவனான ரவீந்தர் ஷர்மாவின் தலைமையில் அர்பன் நகருக்குள் புகுந்த இந்த கொலைக்

## கலவரத்தில் ஈடுபட்டது சமூக விரோத ரவுடிக் கும்பலா?

ஓட்டுக்கட்சிகள் கலவரத்தைத் தூண்டி விட்டு நடத்தும்பொழுது, களத்தில் அதற்குத் தலைமையேற்பது, துணை நிற்பதெல்லாம் ரவுடிகள்தான் என்பது பொதுவான உண்மையாக இருந்தாலும், குஜராத்தில் அது பொய்யாகிவிட்டது. அங்கு ரவுடிகளின் இடத்தையும், பாத்திரத்தையும் எடுத்துக் கொண்டவர்கள் அம்மாநில அமைச்சர்கள், பா.ஜ.க., வி.இ.ப., பஜ்ரங் தள் அமைப்புகளின் முக்கியத் தலைவர்கள்; இந்து மதவெறியூட்டப்பட்ட மேல்சாதி - மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்ற கனவான்கள்.

''நகர்ப்புறங்களில் நடந்த கலவரங்களை படித்த, பணக்கார மேட்டுக்குடி கும்பல் தலைமையேற்று நடத்தியதால்தான், எங்களால் கலவரம் பற்றி முன்கூட்டியே உளவறிய முடியாமல் போய்விட்டது'' என அகமாதாபாத் [illegible] போலீசு கமிசனர் பி.சி. பாண்டே ப[illegible] கைகளிடம் புலம்பியிருக்கிறார். இ[illegible] வெறிக் கும்பலுக்கு போலீசு அடிய[illegible] செயல்பட்டதை மறைக்கப் போய்[illegible] பணக்கார கும்பல் கையில் கத்தி[illegible] பெட்ரோல் டின்னோடும் அலைந்[illegible] போட்டு உடைத்து விட்டார், பி.சி. பாண்டே.

''வர்த்தக நிறுவனங்களைச் சூறையாடிக் கொள்ளையடித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்'' என அறிவிக்கப்பட்டவுடனேயே மேட்டுக் குடியைச் சேர்ந்த பலர் போலீசாரைத் தொடர்பு கொண்டு, ''கொள்ளையடித்த பொருளைத் திருப்பிக் கொடுத்து விடுகிறோம்; எங்களைக் கைது செய்து விடாதீர்கள்'' எனக் கெஞ்சியதாக ''இந்து'' நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

கும்பலின் முன்னணியில் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த ப்ரதீப் ஷர்மாவும் இருந்ததாக பெரோஸா பேகம் என்ற முசுலீம் பெண் பத்திரிகையாளர்களிடம் கூறியிருக்கிறார்.

அர்பன் நகருக்குள் நுழைய முயன்ற இந்து மதவெறிக் கும்பலைத் தடுப்பதற்காக அப்பகுதி முசுலீம்கள் அக்கும்பல் மீது தாக்குதல் நடத்திய பொழுது, புபத்தன் காத்வி என்ற போலீசு அதிகாரி முசுலீம்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டான். இதையும் மீறி முசுலீம்கள் இந்து மதவெறிக் கும்பலோடு போராடிக் கொண்டிருந்த பொழுது, குஜராத் மாநில உள்துறை மந்திரி கோர்தன் ஜாடாபியாவின் அடியாளான

செல்வாக்கை அழிப்பதற்கு, இந்து மதவெறியர்கள் அவர்களிடம் வேலை பார்த்து வரும் பழங்குடியின மக்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். முதலாளிகளான தாவூதி போஹ்ரா முசுலீம்களுக்கும், தொழிலாளிகளான பழங்குடியின மக்களுக்கும் இடையே இருந்து வந்த வர்க்க முரண்பாட்டை, இந்து மதவெறியர்கள் இந்து மதவெறியாக, முசுலீம் எதிர்ப்பாகத் திசை திருப்பி விட்டு, தாவூதி போஹ்ரா முசுலீம்களின் பருப்பு ஆலைகளையும், கடைகளையும் அழித்து விட்டனர்.

கிராமப் புறங்களில் முசுலீம்களுக்குச் சொந்தமான நிலங்கள் மேல்சாதி இந்து மதவெறியர்களால் அபகரித்துக் கொள்ளப்படுகின்றன. சர்தார் புரா கிராமத்தைச் சேர்ந்த முன்சாஃப் பத்தான், ''எங்களது நிலங்கள் விலை மதிப்பு மிக்கவை; வளமானவை; ஆழ்குழாய் கிணற்றுப் பாசன வசதி கொண்டவை. அந்த நிலங்களை படேல் சாதியினர் அபகரித்துக் கொள்ள விரும்புகிறார்கள்'' என இந்த இனப்படுகொலையின் மூலம் மேல்சாதி இந்து மதவெறியர்கள் அடைந்துவிடும் பொருளாதார ஆதாயத்தைப் புட்டு வைக்கிறார்.

தாராளமயம் - தனியார்மயத்தை நடைமுறைப்படுத்தி நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீவிரப்படுத்தி வருவதில் இந்து மதவெறிக் கும்பலுக்குக் கணி



எரிக்கப்பட்ட தமது மருந்துக் கடையின் முன் திர்மிஸும் அவரது ''இந்து'' பங்குதாரர் ஜோஷியும். (நன்றி: இந்தியா டுடே)

சமான பங்குண்டு. அவர்களோ, குஜராத் மாநிலத்தில் முசுலீம்களின் பொருளாதார பலத்தை உடைப்பதற்கு, அம்மாநிலத்தில் பேயாட்டம் போட்டு வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நைச்சியமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். வேலையற்ற இந்துக்களிடம், ''அவர்கள் உங்கள் வேலையை எடுத்துக் கொண்டு விட்டனர்'' என முசுலீம்களுக்கு எதிரான பொய்ப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, அவர்களை முசுலீம்களுக்கு எதிராகத் திசைதிருப்பி விட்டு, தங்களது சதித் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டு விட்டனர்.

முசுலீம் மக்களின் பொருளாதார பலத்தை உடைத்த பின்னும் கூட, இந்து மதவெறி பாசிசக் கும்பலின் ஆதிக்க வெறி அடங்கிவிடவில்லை. முசுலீம்கள் பொருளாதார ரீதியாக மீண்டும் எழுந்து நின்றுவிடக்கூடாது என்பதற்காகவே, ''முசுலீம்களுக்கு இந்துக்கள் யாரும் கடன் கொடுக்கக் கூடாது; முசுலீம்களோடு கொடுக்கல் - வாங்கல் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது; முசுலீம்களுக்கு இந்துக்கள் வேலை கொடுக்கக் கூடாது'' என்ற பிரச்சாரத்தை முடுக்கி விட்டுள்ளனர். இது, இந்து மதவெறியர்களால் வெகுகாலமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருவதுதான் என்றாலும், இந்த இனவெறிப் படுகொலை குஜராத் மாநில இந்து - முசுலீம்களிடையே ஏற்படுத்தியிருக்கும் பிளவையும், அம்மாநில மக்களிடம் ஏற்படுத்தி இருக்கும் பீதியையும் பயன்படுத்திக் கொண்டு, இப்பொருளாதாரப் புறக்கணிப்பை நடைமுறைப்படுத்திவிட இந்துமதவெறியர்கள் துடிக்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

பரத் ரானா நேரடியாக அங்கு வந்து போலீசு அதிகாரி காத்வியைச் சந்தித்து, ''ஏதோ'' சொல்லிவிட்டுச் சென்றான். இதன்பின், காத்வியும், அவரோடு இருந்த பிற போலீசு அதிகாரிகளும் முசுலீம்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, நான்கு பேரைக் கொன்று முசுலீம்களின் எதிர்ப்பைச் சிதறடித்தனர்.

துப்பாக்கி ஏந்திய போலீசு அதிகாரிகளின் பாதுகாப்போடு அர்பன் நகருக்குள் புகுந்த இந்து மதவெறி கும்பல் போலீசு நிலையத்திற்கு எதிரேயும், அருகாமையிலும் இருந்த முசுலீம்களின் வீடுகளையும், கடைகளையும் தீயிட்டுக் கொளுத்தியது. அர்பன் நகருக்கு அருகில் இருக்கும் அன்சார் நகருக்குள் லாரிகளின் மூலம் ஆக்சிஜன் சிலிண்டர்களைக் கொண்டு வந்து இறக்கி, அவற்றை வெடி பொருளாகப் பயன்படுத்தி, அன்சார் நகரில் இருந்த வீடுகளையும் கடைகளையும் தகர்த்து தடைமட்டமாக்கியது, இந்து மத வெறிக் கும்பல்.

அகமதாபாத் நகரில் இனப்படுகொலை உச்சக் கட்டத்தில் இருந்தபொழுது, குஜராத் மாநில சுகாதார மந்திரி அசோக் பட் போலீசு கட்டுப்பாடு அறையில் உட்கார்ந்து கொண்டு, 'வயர்லெஸ்' மூலம் இந்து மத வெறியர்களுக்கும், போலீசுக்கும் வியூகம் அமைத்துக் கொடுத்து வந்தார்.

இந்த இனப்படுகொலை தொடங்குவதற்குச் சில நாட்கள் முன்னதாக, அகமதாபாத் நகரில் பணியாற்றி வந்த துணை ஆய்வாளர்கள் அனைவரும் இடமாற்றம் செய்யப்பட்டு, அந்த இடங்களில் எல்லாம் இந்து மதவெறியர்களுக்கு நம்பகமான அதிகாரிகள் அமர்த்தப்பட்டனர். முக்கிய பதவிகளில் இருந்த சில முசுலீம் போலீசு அதிகாரிகள் உப்பு சப்பில்லாத பதவிகளுக்குத் தூக்கி அடிக்கப்பட்டனர். இனப்படுகொலையின் பொழுது இந்து மத வெறியர்களைக் கைது செய்ய முயன்ற ஒன்றிரண்டு போலீசு அதிகாரிகள் உடனடியாக இடம் மாற்றம் செய்யப்பட்டனர்.

''கலவரக்காரர்களுக்கு போலீசு உடந்தையாக இருந்ததாகக் கூறுவது பொய். அம்மாநிலத்தில் நடந்த கலவரத்தில் கொல்லப்பட்ட 668 பேரில், 100 பேர் கலவரத்தை அடக்க போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்கள்'' என 100 பிணங்களைக் காட்டி போலீசுக்கு வக்காலத்து வாங்குகிறார் அத்வானி. போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்து போன 100 பேரில், 46 பேர் முசுலீம்கள் என்பதே போலீசின் யோக்கியதையை அம்பலப்படுத்திக் காட்டுகிறது. குஜராத் போலீசிடம் ஊறிப் போயுள்ள இந்த இந்து மதவெறியை அரசும், உயர் அதிகாரிகளும் குற்றமாகப் பார்க்கவில்லை. மாறாக, ''போலீசும் சமூகத்தின் ஒரு பகுதிதான்'' எனக் கூறி போலீசு இனப்படுகொலைக்கு உடந்தையாக இருந்து வருவதை நியாயப்படுத்துகிறார்கள்.

ஒவ்வொரு தாக்குதலின் பொழுதும், ஆயிரக்கணக்கான இந்து மதவெறியர்கள் ஒன்றாகத் திரண்டு போய்தான், முசுலீம் குடியிருப்புகளைத் தாக்கியிருக்கிறார்கள்; முசுலீம் மக்களைக் கொன்று குவித்திருக்கிறார்கள். ஆனால் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்து போன இந்து மதவெறியர்களின் எண்ணிக்கை வெறும் 51 தான். அதேபொழுதில் முசுலீம்கள் கும்பலாகத் திரண்டு வலியப் போய், இந்துக் குடியிருப்புகளைத் தாக்கியதாகவோ, இந்துக்களைக் கொன்றதாகவோ இந்து மதவெறி அரசினால் கூட குற்றம் சாட்ட முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால், இந்த இனப்படுகொலையின் பொழுது ஒரேயொரு அப்பாவி இந்து கூட முசுலீம்களினால் தாக்கப்படவுமில்லை; கொல்லப்படவுமில்லை.

இந்த இனப்படுகொலை கிராமப்புறங்களில் இருந்து முசுலீம்களைத் துரத்தியடித்துவிட்டு, கிராமங்களை ஏறக்குறைய ''தூய்மைப்படுத்தி விட்டது''. நகரங்களிலோ, இட்லரின் ஆட்சியில் யூதர்கள் தனிமைப்படுத்தப்பட்ட, ''கெட்டோ'' என்றழைக்கப்பட்ட தனிக் காலனிகளில் வாழ்க்கையை ஓட்டியதைப் போல, முசுலீம்கள் வாழ வேண்டிய அவலநிலையை உருவாக்கிவிட்டது. இந்து மதவெறி பயங்கரவாதிகள் முசுலீம்களோடு இந்துக்கள் யாரும் கொடுக்கல் - வாங்கல் உறவு கூட வைத்துக் கொள்ளக்கூடாது எனக் கட்டளை இட்டிருப்பதன் மூலம் முசுலீம்கள் மீது புது வகையான தீண்டாமையைத் திணிக்க முயலுகிறார்கள். அகதிகளாக்கப்பட்ட முசுலீம்களுக்கு அம்மாநில அரசு எவ்வித உதவியும் செய்ய மறுத்து வருவதன் மூலம், இப்புதிய தீண்டாமையை நடைமுறைப்படுத்தவும்

## கலாச்சார அழித்தொழிப்பு

அகமதாபாத் நகர போலீசு கமிசனர் அலுவலகத்தின் முன் அமைந்திருந்த வாலி தர்கா, கோத்ரா தாக்குதல் நடந்த மறு நாளே, போலீசின் கண் முன்னரே இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. இந்த தர்காவில் குஜராத்தில் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற உருதுக் கவிஞர் வாலியின் கல்லறை அமைந்திருந்தது. புகழ்மிக்க இந்த தர்கா இடிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே, மாநில பொதுப் பணித் துறையால் அதன் இடிபாடுகள் அகற்றப்பட்டு, வாலி தர்கா இருந்ததற்கான சிறு அடையாளம் கூட இல்லாதபடி துடைக்கப்பட்டு விட்டது.

குஜராத்தில் சுஃபி முசுலீம் மரபின்படி தர்காக்கள், இந்து மதத்தினரும் சென்று வழிபடும் மத நல்லிணக்கத்தின் அடையாளமாக இருந்து வருகிறது. இதன் காரணமாகவே இந்து மதவெறியர்கள் குஜராத் மாநிலத்தில் பல தர்காக்களை இடித்துத் தள்ளியிருக்கின்றனர். அகமதாபாத் நகரத்தில் 250 ஆண்டு காலப் பழமையும், மிகுந்த கலை நுணுக்கமும் கொண்ட முஹாஃபிஷ்கான் மசூதி உள்ளிட்டு 45 பள்ளிவாசல்களும், தர்காக்களும் இடித்துத் தள்ளப்பட்டுள்ளன; அல்லது சேதப்படுத்தப்பட்டுள்ளன. பரோடாவில் 8 மசூதிகள் உள்ளிட்டு அம்மாநிலமெங்கும் 69 மசூதிகளும், தர்காக்களும் இந்து மதவெறியர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றன.

அகமதாபாத் நகரத்தில் தலீம் என்ற தன்னார்வக் குழு இயங்கி வருகிறது. இந்தக் குழுவின் பெயர், உருது மொழிப் பெயரைக் கொண்டு அமைந்துள்ளதால், குழுவின் பெயரை மாற்ற வேண்டும் என இந்து மத வெறியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இப்படி முசுலீம் மக்களின் உயிர், உடைமை, கலாச்சார சின்னங்கள் மட்டுமின்றி, முசுலீம்களை நினைவுபடுத்தும் எந்தவொரு சிறு அடையாளமும் இருக்கக் கூடாது என்ற வெறியோடு இந்து மதவெறியர்கள் குஜராத்தில் நடத்தி வரும் கலவரத்தை, இனப்படுசொலை - இனத் தூய்மை நடவடிக்கை எனக் கூறாமல் வேறெப்படி மதிப்பிட முடியும்?

உடைத்து நொறுக்கப்பட்ட கன்கரியா மசூதி.






படிப்பகம்

www.padippakam.com

தொடங்கி விட்டனர்.

***

கிட்டதட்ட ஒரு மாதமாக குஜராத்தில் முசுலீம் மக்களின் மீது ஏவிவிடப்பட்டுள்ள படுகொலையை, வன்புணர்ச்சியை, சூறையாடலை, தீவைப்பை - சுருக்கமாகச் சொன்னால், இந்திய தண்டனைச் சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களை, ''இந்துக்களின் எழுச்சியாக''த் திரித்துப் புரட்டுகிறது இந்து மத வெறிக் கும்பல். கோத்ராவில் 58 இராம பக்தர்கள் தீவிரவாதிகளின் சதியால்தான் கொல்லப்பட்டதாகத் திரைக்கதை எழுதி, இந்த இனப்படுகொலையை நியாயப்படுத்துகிறது.




அகமதாபாத்தில் நடந்த அமைதி ஊர்வலத்தில் துக்கம் தாளாமல் கதறியழும் முகம்மது ஹனீப் காந்தி. இந்த இழப்புகளுக்கும், அவமானங்களுக்கும் காலம் கடந்து போவதுதான் தீர்வா?

கோத்ரா தாக்குதல் சம்பவம் பற்றி இன்னும் விசாரணை கூடத் துவங்கவில்லை. இது ஒருபுறமிருக்க, அகமதாபாத் நகர போலீசு கமிசனர் பி.சி. பாண்டே, ''கோத்ரா சம்பவம் திட்டமிட்டு நடத்தப்பட்டதாக நான் எண்ணவில்லை. அது தன்னெழுச்சியாக நடந்த ஒன்றாகத்தான் தெரிகிறது'' என வட இந்தியாவில் இருந்து வெளிவரும் ''டைம்ஸ் ஆஃப் இந்தியா'' என்ற ஆங்கில நாளிதழுக்கு பேட்டியளித்திருக்கிறார். இதை வேறு மாதிரியாகச் சொன்னால் அயோத்திக்கும் போகும் இராம பக்தர்களின் இந்து மதவெறி பேயாட்டத்திற்கு முசுலீம்கள் தந்த பதிலடிதான் கோத்ரா தாக்குதல். ஆனாலும், இந்து மதவெறிக் கும்பல் கோத்ரா சம்பவம் பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. தூண்டிவிட்டு, இந்திய முசுலீம்கள் நடத்திய சதியாக ஊதிப் பெருக்கி, இந்துக்களை உசுப்பேற்றுகிறது.

திடீரென உணர்ச்சிவசப்பட்டு அப்பாவி மனிதன் புரியும் குற்றத்திற்கும், **சதிகாரக் கும்பல் திட்டமிட்டு புரியும் குற்றத்திற்கும் இடையே வேறுபாட்டைக் கண்டுபிடிக்க முடியாதா? குஜராத்தில் முசுலீம் மக்கள் கொலை செய்யப்பட்ட விதத்**தையும், அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்ட விதத்தையும், முசுலீம் பெண்களும், சிறுமிகளும் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டதையும் மீண்டும் படித்துப் பாருங்கள். குஜராத் கலவரம், அப்பாவி இந்துக்கள் கோத்ரா சம்பவத்தினால் ஆத்திரமடைந்து தன்னெழுச்சியாக நடத்தி வரும் கலவரமா, இல்லை இந்து மத வெறிக் கும்பல் திட்டமிட்டு நடத்தி வரும் இனப்படுகொலையா என்பதைக் கண்டு கொள்ள முடியும்!

குஜராத்தை ஆளும் நரேந்திர மோடி அரசு, கோத்ராவில் எரிந்து இறந்து போன 58 இராம சேவகர்களின் சடலங்களை அகமதாபாத்துக்குத் தூக்கிக் கொண்டு போய் ஒப்பாரி வைத்து, இந்து மதவெறி தாக்குதலைத் தொடங்கி வைத்தது முதல், இந்தக் கலவரத்தின் பொழுதும் அமைதியாக இருக்கும் ஆனந்த் கிராமத்தின் மத நல்விணக்கத்தைச் சீர்குலைப்பதற்காக இந்து மத வெறியர்கள் அக்கிராம முசுலீம்களுக்கு வளையல்களை அனுப்பி வைத்து ஆத்திரமூட்ட முயலுவது வரை - குஜராத்தில் முசுலீம் மக்கள் மீது ஏவிவிடப்படும் ஒவ்வொரு தாக்குதலும் இந்து மதவெறி அமைப்புகளின் திட்டமிட்ட சதிதான்.

வி.இ.ப., பஜ்ரங்தள் ஆகிய இந்து வெறி அமைப்புகளுக்கு குஜராத் மாநிலமெங்கும் 38,000 கிளைகள் உள்ளன. இந்தக் கிளைகளில் இணைந்துள்ள ஒவ்வொருவனுக்கும் இந்து மதவெறியோடு, ஆயுதப் பயிற்சியும் அளிக்கப்பட்டு, இந்தக் கிளைகள் தனியார் கூலிப் படைகளாகவே வளர்க்கப்பட்டுள்ளன. அதனால்தான் முசுலீம் மக்களின் மீதும், அவர்களின் உடைமைகளின் மீதும் ஏவிவிடப்பட்டுள்ள ஒவ்வொரு தாக்குதலும் மிகவும் துல்லியமாகவும், மிகவும் கொடூரமாகவும் நடத்தப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம் இந்து மதவெறி அமைப்புகளின் பரிசோதனைக் கூடமாகக் கருதப்படுகிறது. ''குஜராத்தில் நடத்தப்படும் பரிசோதனைகளை நாடு முழுவதும் நடத்த வேண்டும் என்பதுதான் எங்களின் குறிக்கோள்'' என்கிறார் வி.இ.ப.வின் பொதுச் செயலாளர் பிரவீண் டோகாடியா.

முசுலீம் தீவிரவாதத்தைக் காட்டிதான் இந்துமதவெறி அமைப்புகள் அரசியல் பிழைப்பை நடத்துகின்றன. முசுலீம் தீவிரவாதம் இல்லையென்றால், அதன் எதிர்நிலையான இந்து மதவெறி பயங்கரவாதத்தின் அரசியல் அடித்தளமே நொறுங்கிப் போய்விடும். இந்த ''குஜராத் பரிசோதனை'' என்பதே, இந்து மத பயங்கரவாதத் தாக்குதலின் மூலம், முசுலீம்களை ஆத்திரமூட்டுவதும், முசுலீம் தீவிரவாதிகளைத் திருப்பித் தாக்குமாறு தூண்டிவிடுவதும்தான். எனவே, குஜராத் பரிசோதனைகளை நாடு முழுவதும் நடத்த வேண்டும் என்ற இந்து மதவெறிக் கும்பலின் விருப்பம் என்பது, நாடு முழுவதையும் சுடுகாடாக்க வேண்டும் என்பது தவிர வேறில்லை!

● செல்வம்

## அறிவிப்பு

**''முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.'' தொடர் கட்டுரை இடமின்மையின் காரணமாக இந்த இதழில் இடம்பெறவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

*— ஆசிரியர் குழு.*


படிப்பகம்

www.padippakam.com



## அரசு பயங்கரவாதிகளின் மோசடிகளுக்கு எல்லையே இல்லையா?

இரண்டாண்டுகளுக்கு முன்பு காசுமீர் மாநிலத்தில் உள்ள சிட்டிசிங்புரா என்ற கிராமத்தில் சீக்கியர்கள் பலர் சுட்டுக் கொல்லப் பட்டனர். அடுத்த சில நாட்களிலேயே சீக்கியர்களைச் சுட்டுக் கொன்ற ஐந்து முசுலீம் தீவிரவாதிகளை மோதலின்பொழுது சுட்டுக் கொன்று விட்டதாக இந்திய இராணுவம் அறிவித்தது. ஆனால் இந்த ஐவரும் அப்பாவி முசுலீம்கள் என்பது அடுத்த ஓரிரு நாட்க ளிலேயே அம்பலமானதோடு, போலி மோதல் படுகொலையை நடத்திய இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

அப்பொழுது காசுமீர் முதல்வர் பரூக் அப்துல்லா, "இராணு வத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் இரத்தமும், அவர்களை அப்பாவிகள் எனக் கூறும் அவர்களின் உறவினர்களின் இரத்தமும் மரபணு பரிசோதனை செய்யப்படும். இரண்டும் ஒரே மாதிரியா னது என நிருபிக்கப்பட்டால், இராணுவத்தின் மீது நடவடிக்கை எடுப்பேன்" என பரூக் அப்துல்லா உறுதியளித்தார்.

இதன்படி சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களிடமி ருந்து இரத்தம் பெறப்பட்டது. ஆனால் காசுமீர் மாநில அரசு, இரா ணுவத்தினரைக் காப்பாற்றுவதற்காக, சுட்டுக் கொல்லப்பட்டவர் களின் இரத்தத்தோடு, அவர்களின் உறவினர்களிடமிருந்து பெறப்பட்ட இரத்தத்தை அனுப்பி வைக்காமல், வேறு சிலரின் இரத்தத்தை அனுப்பி வைத்தது. இந்த மோசடியை ஹைதராபாத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் அம்ப லப்படுத்தியவுடன், அவர்கள் புளுகுவதாக பரூக் அப்துல்லா சட்டசபையில் சத்தியம் செய்தார். ஆனால், அரசு நடத்தியிருக்கும் மோசடி களை மரபணு சோதனை செய்த விஞ்ஞானிகளே ஆதா ரத்துடன் அம்பலப்படுத்திய வுடன், பரூக் அப்துல்லா வேறு வழியில்லாமல் காசுமீர் மக்களிடம் தன்னை மன்னித்து விடும்படி கெஞ்சிக் கொண்டிருக்கிறார்!



இந்திய இராணுவத்தால் தீவிரவாதிகள் என்று சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி காசுமீர் முசுலீம்களின் உடல்களைப் பிரேதப் பரிசோதனை செய்யும் மருத்துவக் குழு.

## "மே. வங்கத்தைப் பார்! போலி கம்யூனிஸ்டுகளைப் புரிந்து கொள்!"

"தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்ப்போம்! அரசுத்துறை நிறுவனங்களைப் பாதுகாப்போம்!" என்று சவடால் அடித்து வரும் போலி கம்யூனிஸ்டுகள், தாங்கள் ஆளும் மே.வங்கத்தில் ஹால்டியா பெட்ரோ கெமிகல்ஸ் (HPL) எனும் அரசுத்துறை நிறுவ னத்தை அண்மையில் தனியாருக்குத் தாரை வார்த்துள்ளனர். இந்நி றுவனம் போதிய நிதியாதாரமின்றி தொடர்ந்து நட்டத்தில் இயங்கு வதாகக் கூறி, பர்னேந்து சட்டர்ஜி எனும் தரகுப் பெருமுதலாளியின் தலைமையில் உள்ள டி.சி.ஜி குழுமத்திடம் போலி கம்யூனிஸ்டுகள் கையளித்துள்ளனர். இன்று ஹால்டியா பெட்ரோ கெமிகல்ஸ் நிறு வனத்தின் 51% பங்குகளை வாங்கியுள்ள தனியார் தரகுப் பெருமு தலாளிகளான டி.சி.ஜி குழுமத்தினர்தான் முன்பு இந்த அரசுத் துறை நிறுவனத்தில், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எனும் அரசுத் துறை நிறுவனம் பங்குகளை வாங்க விடாமல் தடுத்து சதி செய்து வந்தது. மேலும் டி.சி.ஜி.குழுமம், போபர்ஸ் ஊழல் புகழ் இந்து ஜாவின் பினாமி நிறுவனமாகும். இத்தகைய கடைந்தெடுத்த மோசடி நிறுவனத்திடம்தான் மே.வங்க இடது முன்னணி ஆட்சியா ளர்கள் அரசுத்துறை நிறுவனத்தைத் தாரை வார்த்துள்ளனர்.

முன்பு, போபர்ஸ் ஊழலையும் இந்துஜாக்களையும் எதிர்த்து சவடால் அடித்து வந்த 'மார்க்சிஸ்டுகள்' இப்போது இந்துஜா பினாமி நிறுவனத்தின் ஆதிக்கத்தைப் பற்றி வாயே திறப்பதில்லை. நாய் விற்ற காசு குரைக்கவா போகிறது என்று போபர்ஸ் பீரங்கி பேரக் கொள்ளையில் அடித்த பணம் மீண்டும் பினாமிகள் மூலம் முதலீடு செய்யப்படுவதை வரவேற்று நியாயம் கற்பிக்கவும் தொடங்கிவிட்டார்கள். "மாநிலத்தின் தொழில் வளர்ச்சியே இப்போது முக்கியம். அதற்கு தனியார் முதலீடு அவசியம். மூல தனம் எங்கிருந்து வந்தாலும் அதை வரவேற்போம்" என்கிறார் மே.வங்க 'மார்க்சிஸ்டு' கட்சி செயலாளரான அனில் பிஸ்வாஸ்.

## இந்து வெறியனின் மயிர் ஆராய்ச்சி

சிறுபான்மையினரான முசுலீம்களையும் அவர்களது மத நம்பிக்கைகளையும் இழிவுபடுத்தி அவதூறு செய்து ஆத்திரமூட்டு வது; அவர்கள் எதிர்த்தால் கல வரத்தைக் கட்டவிழ்த்து விட்டு தாக்குவது; கலவரத்துக்குக் காரணம் முசுலீம்கள்தான் என்று பழிபோட்டு அரசு எந்தி ரத்தைக் கொண்டு அடக்குமு றையை ஏவுவது; இந்துவெறி பாசிசத்தை நிலைநாட்டுவது - என்பது இந்துவெறி பாசிஸ்டு களின் உத்தி. அதன்படி, அயோத்தியில் சட்டவிரோத மாக இராமன் கோயில் கட்டக் கிளம்பியுள்ள இந்துவெறி யர்கள் நாடு முழுவதும் இந்து வெறியைக் கிளறிவிட்டு முசு லீம்களை இழிவுபடுத்தி ஆத்தி ரமூட்டும் வேலையைச் செய்து வருகிறார்கள். இந்த நோக்கத் தோடு அயோத்தி (பைசாபாத்) தொகுதியின் எம்.பி.யும், விசுவ இந்து பரிசத்தின் குண்டர்படை தளபதியுமான வினய் கத்தியார், "காசுமீரின் தலைநகரான சிறீநகரிலுள்ள ஹஸ்ரத்பால் மசூதியில் பாதுகாப்பாக வைத்து வழிபாடு செய்யப்படுவது முகம் மது நபியின் புனித முடி அல்ல; அது மெக்காவிலிருந்து வந்த ஒரு இந்து சாமியாரின் தாடியிலுள்ள முடி" என்று இழிவுபடுத்தி யுள்ளார்.

முடியை வழிபாடு செய்வது மூட நம்பிக்கை என்றால், அது அறிவுபூர்வமான நாத்திகப் பிரச்சாரம். ஆனால் அது நபிகளின் புனித முடியல்ல; இந்துசாமியாரின் தாடியிலிருந்த முடி என்றால், அது அவதூறு பொய்ப் பிரச்சாரம். ஏனெனில் மொகலாய மன்ன ரான அவுரங்கசீப் ஆட்சிக் காலத்தில், மெக்காவிலிருந்து நபிகளின் புனிதமுடி ஹஸ்ரத்பால் மசூதிக்குக் கொண்டு வரப்பட்டதற்கு வர லாற்று ஆதாரங்களும் நிருபணங்களும் உள்ளன.

எனவேதான் இந்துவெறியன் வினய் கத்தியாரின் இந்தக் கீழ்த்த ரமான அவதூறுப் பிரச்சாரத்தை எதிர்த்து காசுமீர் மக்கள் ஆர்ப்பாட் டங்களில் இறங்கினார்கள். பள்ளி - கல்லூரி மாணவர்கள் வகுப்பு



படிப்பகம்

www.padippakam.com



களைப் புறக்கணித்துவிட்டு, ''வினய் கத்தியாரே பதவி விலகி பகிரங்க மன்னிப்பு கேள்!'' என்று முழக்கமிட்டு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தார்கள். சிறீநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் கடையடைப்புப் போராட்டம் நடந்தது. காசுமீர் உயர்நீதிமன்ற நீதிபதிகள், கத்தியார் மீது வழக்கு தொடர அனுமதிகோரி தலைமை போலீசு இயக்குனரிடம் விண்ணப்பம் கொடுத்து தர்ணா போராட்டம் நடத்தினர். வினய் கத்தியாரின் இந்து வெறி அவதூறு பிரச்சாரத்தை பா.ஜ.க. தவிர அனைத்து ஓட்டுக் கட்சித் தலைவர்களும் வன்மையாகக் கண்டித்தனர். மாநில சட்டமன்றத்திலும் இந்த விவகாரம் எதிரொலித்தது. மத உணர்வுகளை இழிவுபடுத்தி அவதூறு செய்யும் வினய் கத்தியாரைக் கைது செய்ய வேண்டும் என்று பா.ஜ.க. கூட்டணியிலுள்ள காசுமீர் முதல்வர் பரூக் அப்துல்லா கூட எச்சரித்தார்.



இந்துவெறியன் வினய் கத்தியாரின் ஆத்திரமூட்டும் அவதூறை எதிர்த்து சிறீநகரில் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களை விரட்டி ஒடுக்கும் போலீசு.

இத்தனைக்கும் பிறகும் கூட வினய் கத்தியார் மீது பா.ஜ.க. ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. எங்கள் வீட்டு நாய் குரைக்கவோ கடிக்கவோ செய்யாது என்று நியாயப்படுத்தி வினய் கத்தியார் அப்படிப் பேசவே இல்லை என்று சாதிக்கிறார் பிரதமர் வாஜ்பாய். வினய் கத்தியாரும் நான் அப்படிப் பேசவேயில்லை; பத்திரிகைகள் தவறாக செய்தி வெளியிட்டுவிட்டன என்கிறார். அப்படியானால் தவறாக செய்தி வெளியிட்ட பத்திரிகைகள் மீது அவதூறு சட்டப்படி வழக்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே! அப்படி எதுவும் செய்யாததிலிருந்தே இந்து வெறியர்களின் புளுகு வெட்ட வெளிச்சமாகிறது.

அப்பாவி சிறுவர்கள் மீது திருட்டுப் பட்டம்

# திருச்சி போலீசின் அதிகார வெறியாட்டம்

போலீசு, சீருடை அணிந்த கிரிமினல் கும்பல் என்பதற்கு அதிரடிப் படை அட்டூழியங்களையோ, தேவாரம், முத்துக் கருப்பன் முதலிய அதிகாரிகளின் வெறியாட்டங்களையோ பட்டியல் போட வேண்டியதில்லை. ஒரு சாதாரண கடைநிலை போலீசுக்காரனே போதும்.

திருச்சி கோட்டை காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் பணியாற்றும் விஜயகுமார் என்ற போலீசுகாரார், சிந்தாமணி பகுதியிலுள்ள காவலர் குடியிருப்பில் வசிக்கிறார். கடந்த மார்ச் ஐந்தாம் தேதி இரவு பணி முடித்துவிட்டுக் குடிபோதையில் இருந்த விஜயகுமார், தனது மிதிவண்டியை அதே பகுதியிலுள்ள தையல் கடையருகே போட்டுவிட்டு தட்டுத் தடுமாறி வீடு வந்துள்ளார். மறுநாள் காலை போதை தெளிந்ததும், தனது மிதிவண்டி திருடப்பட்டு விட்டதாகக் கருதிக் கொண்டு தன் வீட்டருகே உள்ள உழைக்கும் மக்களின் குடியிருப்பில் புகுந்து பத்து பிஞ்சு சிறுவர்களைப் பிடித்துச் சென்றார்.




இச்சிறுவர்கள் பள்ளி நேரம் போக மற்ற நேரத்தில் காவலர் குடியிருப்பில் சில சில்லறை வேலைகளைச் செய்து கொடுத்து தன் குடும்பத்துக்கு உதவுபவர்கள். இவர்களைப் பிடித்துச் சென்ற விஜயகுமார், தன் வீட்டில் தலைகீழாக தொங்கவிட்டு அடித்துள்ளார். விவரமறிந்து சென்று பேசிய மக்களையும் அதிகாரத் திமிருடன் ஆபாசமாக பேசியுள்ளார்.

அப்பகுதியில் செயல்படும் அனைத்துத் தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்புச் சங்கத்தைச் சேர்ந்த தோழர்கள் என்ன நடந்தது என்று விசாரிக்கத் தொடங்கியதும், விஜயகுமார் சிறுவர்களை போலீசு நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளார். உடனடியாக மக்களைத் திரட்டி சம்பந்தப்பட்ட போலீசின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தோழர்கள் வாதாடியதன் பேரில் விஜயகுமார் மீது வழக்குப் பதிவு செய்வதாக போலீசு அதிகாரி ஒப்புக் கொண்டார்.

இதற்கிடையில் போலீசின் அராஜகத்தை அம்பலப்படுத்தி சங்கத்தின் சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. பிரச்சினை பெரிதாவதைக் கண்ட போலீசு, சிறுவர்களை விடுவித்ததோடு அ.தி.மு.க. மாவட்ட செயலர் வெல்லபாண்டி நடராசன் என்ற பொறுக்கி அரசியல்வாதியை முன்னிறுத்தி மக்களிடம் சமரசத்திற்கு வந்தது.

இது ஒருபுறமிருக்க, மூன்று நாளாக 'காணாமல் போன' மிதிவண்டி தையல் கடையிலிருப்பது 'கண்டுபிடிக்கப்பட்டது'. சம்பந்தமே இல்லாமல் பத்து சிறுவர்களைக் கொண்டு வந்து வதைத்தற்காகப் போலீசு இம்மியும் வருந்தவில்லை. போலீசு அடித்ததில் ஒரு சிறுவனின் நகங்கள் பெயர்ந்து போயுள்ளன. மற்றொரு சிறுவனின் விரல்கள் நசுங்கி, மண்டையில் காயம் ஏற்பட்டுள்ளது. வெந்நீரை முகத்தில் ஊற்றி அடித்ததில் பயபீதியில் உள்ளனர், இச்சிறுவர்கள்.

போலீசு என்பது வெறிபிடித்த மிருகம்; அப்பாவி மக்களைக் கடித்துக் குதறுவதுமட்டும்தான் அதற்கு தெரியுமென்பதற்கு திருச்சி போலீசே சான்று.

தகவல்:
அனைத்துத் தரைக்கடை
வியாபாரிகள் பாதுகாப்பு சங்கம், திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com

# கோவை

# இந்து வெறியர்களின் பரிசோதனைக் களமா?

**கோ**வை நகரின் தெற்கு வட்ட ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகர் முருகேசன் மார்ச் 21 அன்று காலையில் படுகொலை செய்யப்பட்டதையடுத்து, 1998-இல் நடந்ததைப் போன்ற இந்து மதவெறி கொலை வெறியாட்டம் தொடங்கி விடுமோ என்ற அச்சம் கோவை நகரில் மட்டுமின்றி, திருப்பூர், மேட்டுப்பாளையம் நகரங்களிலும் பரவியது. ''முருகேசனைக் கொன்றது யார்? அவர் எதற்காகக் கொல்லப்பட்டார்?'' என்ற விவரங்களை போலீசார் தீர விசாரிப்பதற்கு முன்பே, ''முருகேசன் ஆர்.எஸ்.எஸ். ஊழியர்; எனவே, அவரைக் கொன்றது முசுலீம் தீவிரவாதிகளைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது'' என்ற முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறி பிரச்சாரத்தை கோவை நகரெங்கும் விசிறிவிட்டு, இந்து மத வெறியர்கள் கலவரச் சூழ்நிலையை உருவாக்கினார்கள்.

முருகேசன் கொலைக்கு இரண்டு நாட்கள் முன்னதாகதான் கோவை ஆர்.எஸ். புரத்தைச் சேர்ந்த மீரான் சுல்தான் நடு ரோட்டில் கத்தியால் குத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். மீரான் சுல்தான் எந்தவொரு முசுலீம் தீவிரவாத அமைப்பையும் சேராதவர்; இவர் ஆழ்ந்த மதப் பற்று கொண்டவர் என்றபோதும், இவருக்கு இந்து மதத்தைச் சேர்ந்த நண்பர்களும் உண்டு. அந்த இந்து நண்பர்களுள் குறிப்பிடத்தக்கவர் கோவை ஆர்.எஸ்.புரம் பா.ஜ.க. கிளை பொறுப்பாளர்களுள் ஒருவரான பூரி கமல். இந்த பூரி கமல்தான் சுல்தான் மீரானைப் படுகொலை செய்திருக்கிறான்.

''சுல்தான் மீரான் பத்மபிரியா என்ற இந்துப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டதோடு, அவரை முசுலீமாகவும் மதம் மாற்றியிருக்கிறார். இதற்குப் பழிவாங்குவதற்குதான், இந்து மதவெறியன் பூரி கமல், சுல்தான் மீரானைக் கொன்றதாகக்'' கூறப்படுகிறது. குஜராத்தில் இந்துப் பெண்களை மணந்து கொண்ட முசுலீம்களை இந்து மத வெறியர்கள் தேடிக் கண்டுபிடித்து கொன்ற சம்பவங்கள், பூரி கமலையும் தூண்டிவிட்டிருக்கக்கூடும்.

முருகேசன் கொலைக்காக ''பந்த்'' நடத்தி, பேருந்துகளை நொறுக்கி, கலவரச் சூழலை ஏற்படுத்துமளவிற்கு அவர் செய்த பொதுச் சேவை என்ன என்று கேட்டால், ''முருகேசன், பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும், தூண் தானம் கொடுக்கப்பட்ட போதும் அயோத்தியில் முதல் ஆளாக நின்றார்'' என்று அவரின் கரசேவையை இந்து மதவெறியர்கள் புட்டு வைக்கிறார்கள்.

கோவையின் பஞ்சாலை, இன்ஜினியரிங் தொழில்களும், திருப்பூரின் பின்னலாடைத் தொழிலும், ஈரோட்டின் நெசவுத் தொழிலும் நசிவடைந்து, அம்மாவட்டங்களில் மக்களின் வாழ்க்கையே கேள்விக் குறியாகி நிற்கிறது. இதற்குக் காரணமான தனியார்மய - தாராளமயத்தை எதிர்த்துப் போராட வேண்டிய நேரத்தில், இந்து மத வெறிக் கும்பலோ கரசேவைக்குப் போய்விட்டு வந்த இந்து மதவெறியன் முருகேசனின் சாவுக்காக கலவரம் நடத்தும்படி கூறுகிறது. தனியார்மயம் - தாராளமயத்தை நடைமுறைப்படுத்தும் பா.ஜ.க. கூட்டணி அரசை எதிர்க்க வேண்டிய தருணத்தில், அப்பாவி முசுலீம்களை எதிரிகளாகக் காட்டி, மக்களின் விரோதிகளைப் பாதுகாக்கிறது. இந்தச் சதிகார இந்து மத வெறிக் கும்பல் அப்பாவி முசுலீம்களை மட்டுமல்ல, மக்களின் உரிமைக்காக, நல்வாழ்க்கைக்காகப் போராடுபவர்களைக் கூட உயிரோடு விட்டு வைப்பது கிடையாது.

இதற்கு உதாரணமாக, திருப்பூர் தாலுகா இடுவாய் கிராம பஞ்சாயத்துத் தலைவர் ரத்தினசாமி மற்றும் திருப்பூர் நகரிலுள்ள பிச்சம்பாளையம் புதூர் பகுதி சி.பி.எம். கட்சி கிளைச் செயலர் பன்னீர் செல்வம் ஆகிய இருவரும் கொலை செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம்.

ரத்தினசாமியைக் கொடூரமாகத் தாக்கிக் கொலை செய்ததோடு, அவரை, அவரது வீட்டின் அருகில் உள்ள மரத்திலேயே வெறும் உள்ளாடையுடன் தூக்கில் தொங்கவிட்டது கொலைகார கும்பல். அவர் உடலின் அருகே, ''கம்யூனிச எதிர்ப்பு முன்னணி'' எனும் அநாமதேய பெயரில் கிடந்த பிரசுரத்தில், ''✱ஆக்கிரமிப்பு, புறம்போக்கு நிலங்களை எடுத்து தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கியது; ✱தாழ்த்தப்பட்டோருக்கு சுடுகாட்டிற்காக இடம் ஒதுக்கிக் கொடுத்தது; ✱இடுவாய் கிராமத்தில் இருந்து வந்த இரட்டைக் குவளை முறை உள்ளிட்ட பல்வேறு தீண்டாமைக் கொடுமைகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுடன் சேர்ந்து போராடி ஒழித்தது; ✱கிறிஸ்தவர்களைத் தாக்கிய இந்து முன்னணி ரவுடிகளை, கிறித்தவர்களுடன் சேர்ந்து போலீசு வசம் ஒப்படைத்துத் தண்டனை வாங்கிக் கொடுத்தது; ✱இடுவாய் கிராம

கொலை செய்யப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்ட ரத்தினசாமி.





படிப்பகம்

www.padippakam.com

மக்களுக்குக் குடிநீர், சாலை, சுகாதார வசதிகளையும், உயர்நிலைப் பள்ளிக்கூடத்தையும் கட்டித் தந்தது; ★2002-ஆம் ஆண்டில் மக்கள் ஆதரவுடன் மீண்டும் பஞ்சாயத்துத் தலைவரானது'' ஆகிய 'குற்றங்களுக்காக'தான் ரத்தினசாமி கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால், கவுண்டர் சாதி ஆதிக்க வெறியர்கள்; இந்துமதவெறிக் கும்பல்; ஊர்ச் சொத்தை வளைத்துப் போட்டுத் தின்னும் சமூக விரோதிகள் - ஆகியோருக்கு எதிராகச் செயல்பட்டதால்தான் ரத்தினசாமி கொலை செய்யப்பட்டுள்ளார்.

மங்கலம் பகுதி விசைத்தறி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பி. நடராசன்; உழவர் உழைப்பாளர் கட்சியின் திருப்பூர் நகரச் செயலாளரும், இந்து முன்னணியின் மறைமுக ஆதரவாளருமான கே. ஈஸ்வரன்; இடுவாயின் முன்னாள் மணியக்காரர் ஐ.கே. கணேஷ் - இந்த மூவரும் ரத்தினசாமியைக் கொலை செய்யத் திட்டம் போட்டுக் கூலிப் படையை ஏவியிருக்கலாம் என ரத்தினசாமியின் குடும்பத்தினரும், ஊர் மக்களும் குறிப்பிடுகிறார்கள். ஆனாலும், போலீசு இவர்களைக் கைது செய்யாமல், விசாரணை செய்து வருவதாகப் போக்கு காட்டி வருகிறது.

ரத்தினசாமியின் மீது இதற்கு முன் நடந்த கொலைவெறித் தாக்குதலில், அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். அவர் இரண்டாம் முறை பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அவருக்குத் தொடர்ச்சியாக கொலை மிரட்டல்கள் வந்த வண்ணம் இருந்தன. இது பற்றியெல்லாம் போலீசிடம் புகாராகக் கொடுத்த பின்னும் அவருக்கு முறையாகப் பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை. இதனால் ரத்தினசாமியின் படுகொலையை மேல்சாதி வெறியர்கள் - இந்து முன்னணி - போலீசு கூட்டுச் சதி என்றுதான் பார்க்க முடியும்.

ரத்தினசாமிக்கு முன்னதாக, திருப்பூர் நகரிலுள்ள பிச்சம்பாளையம் புதூர் பகுதி கிளைச் செயலர் பன்னீர் செல்வம் பனியன் தயாரிக்கும் நிறுவனமொன்றில் தொழிலாளர் சங்கம் கட்டினார் என்பதற்காகவே கொலை செய்யப்பட்டார். அவரைக் கொலை செய்த முத்துக்குமார், இன்று திருப்பூரில் பா.ஜ.க. பிரமுகராக வலம் வருகிறார்.

ரத்தினசாமியும், பன்னீர் செல்வமும் 'மார்க்சிஸ்ட்' கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகக் கொலை செய்யப்படவில்லை. மாறாக, அவர்கள் இருவரும், அவர்களின் கட்சி மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களைப் போல முதலாளிகளோடு, சாதி வெறியர்களோடு, இந்து மதவெறியர்களோடு சமரசம் செய்து கொள்ளாமல், நேர்மையோடும், வர்க்க உணர்வோடும் போராடினார்கள் என்பதற்காகவே படுகொலை செய்யப்பட்டனர். இப்படிப்பட்ட ஜனநாயக, முற்போக்கு சக்திகளை இனம் கண்டு கொலை செய்வதன் மூலம், உழைக்கும் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி, கோவை மற்றும் திருப்பூர் நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் இந்து முன்னணிக்கும், சாதி ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக எந்தவிதமான முணுமுணுப்பும் எழுந்துவிடாதபடி பார்த்துக் கொள்கிறார்கள்.

ரத்தினசாமியின் இறுதி ஊர்வலத்திலும், திருப்பூர் நகரில் நடந்த இரங்கல் கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட பா.ஜ.க.(!) உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும், ''குற்றவாளிகளைத் தண்டிக்க சட்டம் இருக்கிறது;'' 'வன்முறை கூடாது'' எனப் போதித்து, மக்களின் கோபத்தை நீர்த்துப் போகச் செய்தன. ஆனால், ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி கும்பலோ ஓர் இந்து மதவெறிக் காலியின் மரணத்திற்காக கோவை நகரத்தை அல்லோகல்லப்படுத்தின. மதச்சார்பற்ற கட்சிகளின் ''அகிம்சை'' போதனையும், இந்து மதவெறிக் கும்பலின் பாசிச அடாவடித்தனமும் மக்களின் சுயமரியாதைக்கு விடப்படும் சவால் தவிர வேறென்ன!

**— ம.க.இ.க., கோவை.**

### தலையங்கம் தொடர்ச்சி

அருகதை உண்டா? மூன்று மாநிலங்களில் காங்கிரசுக்கு எதிர்ப்பு, பிற மாநிலங்களில் அதனுடன் கூட்டு என்கிற போலி கம்யூனிஸ்டுகளின் வழியிலேதான் தி.மு.க., பா.ஜ.க., ம.தி.மு.க. போன்றவை ''நட்பு'', ''உறவு'' என்கிற புதிய சந்தர்ப்பவாத அரசியலை வளர்த்துள்ளன.

''தந்தை பெரியார்'' - ''அறிஞர் அண்ணா''வின் அரசியல் வாரிசுகள், பார்ப்பன எதிர்ப்பு - பகுத்தறிவு பாரம்பரியத்தில் ஊறியவர்கள் என்று கூறிக் கொள்ளும் திராவிடக் கட்சிகளும், அவற்றின் பங்காளியான பா.ம.க.வும் இந்து மதவெறி பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்தபோது அரசியல் பார்வையாளர்கள் பலரும் வியந்தனர். ஆனால், இந்தக் கட்சிகள் எல்லாம் காரியவாத - பிழைப்புவாத அமைப்புகள்தாமே தவிர இவற்றுக்கு கொள்கை - இலட்சியம் எதுவும் கிடையாது என்பதை உணரும்போது இத்தகைய வியப்புக்கு இடமிருக்காது. பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்தாலும் தங்கள் கொள்கை - இலட்சியங்களைக் கைவிடவில்லை என்று இக்கட்சிகள் கூறிக் கொள்கின்றன. பணமும் பதவியும் மட்டுமே தமது கொள்கை - இலட்சியம் என்று ஒப்புக் கொள்வார்களேயானால் இதை நம்பலாம். கடைசியாக ''பொடா'' சட்டத்தை ஆதரித்துக் கைதூக்கியதுவரை மீண்டும் மீண்டும் இவர்கள் தமது துரோகத்தனத்தை வெளிக்காட்டிக் கொண்டு வருகிறார்கள்.

இறுதியாக, ஒரு உண்மையை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வுக்கும் - பா.ஜ.க.வும் இடையிலான உறவுதான் கொள்கைபூர்வமானது, இயல்பானது, இயற்கையான ''தொப்புள் கொடி'' உறவு போன்றது. திராவிட இயக்கத்துக்கும் இந்துத்துவாவுக்கும் இடையிலான பாலமாக அமையும் உறவு அது. எம்.ஜி.ஆர். புகழை வைத்து ஜெயலலிதா, அரசியல் நடத்தினாலும், ஆர். வெங்கட்ராமன் - சோ - காஞ்சி சங்கராச்சாரி - இராம. கோபாலன் போன்ற பார்ப்பனக் கும்பலின் ஆலோசனை அடிப்படையிலேயே ஆட்சி நடத்துகிறார். அயோத்தி பாபரி மசூதி இடிப்புக்கு ஆதரவு, வேதபாட சாலைகள் திறப்பு, ஆறுகால பூசை, யாகங்கள் - பூசைகள் நடத்துவது முதல் இப்போது கோவில்களில் வேதபாடங்கள் நடத்துவது, அன்னதானங்கள், குடமுழுக்குகள் நடத்துவதுவரை இந்துமதவாதிகளுக்கு நெருக்கமாக இருக்கிறார், ஜெயலலிதா.

கருணாநிதி ஒரு பிளவுவாதி, பயங்கரவாதிகளின் ஆதரவாளர், பார்ப்பன எதிர்ப்பாளர், நாத்திகவாதி என்கிற பொய்யை ஜெயலலிதாவின் பார்ப்பன ஆலோசகர்களும் பிரச்சாரகர்களும் பரப்பி வருகின்றனர். இலஞ்ச - ஊழல் சொத்து குவிப்பு வழக்குகளில் இருந்து தப்பிப்பதில் ஜெயலலிதா காட்டிய ஆத்திரம், அவசரம் காரணமாகத்தான் முன்பு பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்து விட்டார். பாதிக் கிணறு தாண்டுவதைப் போல ஜெயலலிதாவுக்காக பா.ஜ.க. அரசு எவ்வளவு தூரம் தாழ்ந்து போனது என்பது நாடே அறியும். அதன்பிறகும், தி.மு.க. - பா.ஜ.க. இடையே ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டு ஏற்பட்டாலும், அதை முறியடிப்பதற்கும், அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டு ஏற்படவும் வெங்கட்ராமன் - சோ - இராம. கோபாலன் போன்றவர்கள் எவ்வளவு பாடுபட்டனர் என்பதுதான் நாடு அறியாத இரகசியம். பா.ஜ.க., தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டு, மத்தியில் கூட்டணி அரசுக்குத் தலைமையேற்று வந்த அதேசமயம், அதன் தமிழகத் தலைவர்கள் மட்டுமல்லாது, அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, அசோக் சிங்கால் போன்றவர்களும் ஜெயலலிதாவோடு இரகசிய அரசியல் உறவு வைத்திருந்தனர்.

எவ்வாறாயினும் ''இந்துத்துவா'' கும்பல் சேரவேண்டிய வகையில் கூட்டுச் சேருகிறது. அது அவர்களின் கொள்கை உறுதியைக் காட்டுகிறது. ஆனால் சமூக நீதிக்காரர்களோ, முழுக்க முழுக்கவும் பிழைப்புவாதிகள்; பொது நோக்கத்துக்காகக் கூட ஒன்று சேரமாட்டார்கள் என்று கூட்டணி அரசியல் காட்டிவிட்டது.


படிப்பகம்

www.padippakam.com

# இலாப வெறியில் இந்துஸ்தான் லீவர் போராட்டத் தீயில் தொழிலாளர்கள்

அந்த மலைப்பிரதேசத்துக்குள் வெளி ஆட்கள் யாரும் எளிதில் நுழைந்துவிட முடியாது. இரு சக்கர வாகனங்கள் 40 ரூபாயும், நான்கு சக்கர வாகனங்கள் 80 ரூபாயும் கட்டணம் செலுத்தினால்தான் நுழைய முடியும். ஆனாலும், அம்மலைப் பகுதியின் பசுமை கொஞ்சும் அழகை, அங்கு கொத்தடிமைகளாக வாழும் மக்களின் அவலத்தை, புகைப்படம் எடுக்கவோ, வெளியுலகுக்குத் தெரியப்படுத்தவோ கூடாது. மீறினால், அது கிரிமினல் குற்றம்!

சுமார் 20,000 ஏக்கர் பரப்பளவுள்ள அம்மலைப் பகுதியும், அதில் வளைந்து நெளிந்து செல்லும் 50 கி.மீ. நீளமுள்ள தார்ச்சாலையும் ஒரேயொரு கம்பெனிக்குத்தான் சொந்தம். அங்கு அரை அடி குழி தோண்டவும், கட்சிக் கொடி நடவும், ஆடு-மாடு வளர்க்கவும்கூட அக்கம்பெனியிடம் அனுமதி பெற்றாக வேண்டும். தமிழக அரசுகூட இங்கு தெருவிளக்கு போடவும், மருத்துவமனை கட்டவும் இக்கம்பெனியிடம் அனுமதி கேட்டு நிற்கிறது.

இவ்வாறு ஓர் அந்நிய நிறுவனத்தின் முழு ஆட்சிக்குட்பட்ட அந்த மலைப்பகுதியின் பெயர் ஹைவேவிஸ் குரூப் எஸ்டேட். நம் நாட்டை அடிமையாக்கி ஆண்ட இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இந்துஸ்தான் லீவர் என்ற பன்னாட்டு ஏகபோக கம்பெனிதான் இந்த எஸ்டேட்டின் உரிமையாளர். தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்தில்தான் இந்தத் தனி வகை உலகம் உள்ளது.

இந்த எஸ்டேட் உருவான 1933-ஆம் ஆண்டிலிருந்து கடந்த 69 வருட காலமாக - முதலில் ப்ரூக் பாண்டு கம்பெனிக்கும் பின்னர் இன்றைய இந்துஸ்தான் லீவர் கம்பெனிக்கும் கைகட்டி வாய்மூடி கொத்தடிமைகளாக வாழ்ந்த 4000 தொழிலாளர் குடும்பங்கள் இன்று போர்க்கோலம் தரித்து நிற்கின்றன.

கடந்த 3 மாத காலமாக இவர்கள் ஒரு பைசா கூட சம்பளம் வாங்கவில்லை. பெண்களின் காது, மூக்கிலிருந்த அற்ப நகைகளை விற்றும், வட்டிக்கு வாங்கியும்தான் குடும்பத்தை நடத்துகிறார்கள். அவர்களது குழந்தைகள் தேர்வுக் கட்டணமும் விடுதிக் கட்டணமும் கட்டாததால் தொடர்ந்து கல்வி கற்க முடியாமல் வீட்டுக்கு விரட்டப்பட்டுள்ளனர். வறுமையும் இன்னல்களும் தொடர்ந்த போதிலும் தொழிலாளர்களின் போராட்டக் கனல் தணியவில்லை.

கடந்த 3 மாத காலமாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடக் காரணம் என்ன?

தமிழக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள ஒப்பந்தம் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை போடப்படுகிறது. கடந்த ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதியோடு முடிவடைந்த பழைய ஒப்பந்தம் ஜனவரி 2002-இல் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆனால், தேயிலைத் தோட்ட அதிபர்கள் சங்கத்தின் (PAT) பிடிவாதத்தால் பலமுறை நடந்த சம்பள பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்து விட்டன.

தற்போது நடைமுறையிலுள்ள ஒருநாள் சம்பளம் ரூ. 76.85, மூன்றாண்டுகளுக்குப் பிறகு புதிய ஒப்பந்தத்தில் ரூ. 93 ஆக உயர்த்தப்பட வேண்டும். ஆனால், முதலாளிகள் சங்கமோ, ''மத்திய அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையால் உள்நாட்டுத் தேயிலையின் விலை குறைந்து விட்டது'' என்ற காரணத்தைக் கூறி, மூன்றாண்டுகளுக்குப் பின்னரும் புதிய சம்பள உயர்வை மறுப்பதோடு, தற்போதைய சம்பளத்தையும் குறைத்து 60 ரூபாய்தான் தரமுடியும் என்கிறது. இதனை எதிர்த்துத் தொழிலாளர்கள் சார்பில் கோவை மாவட்ட வால்பாறை எஸ்டேட்டைச் சேர்ந்த சில சங்கங்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. இருப்பினும் இன்றுவரை தீர்ப்பு வரவில்லை.

இந்நிலையில் நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்பாகவே 60 ரூபாய் என்ற தமது சம்பளக் குறைப்புத் திட்டத்தை எப்படியாவது நடைமுறைப்படுத்திட வேண்டும் என்று வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறது, தேயிலைத் தோட்ட அதிபர்கள் சங்கம். இதற்காக தொழிற்சங்கத் தலைவர்களை விலைபேசுவது முதல் எல்லா கிரிமினல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது. இத்தாக்குதலுக்கு எதிராக தமிழகம் முழுவதும் கடந்த மூன்று மாதங்களாகத் தோட்டத் தொழிலாளர்கள் போராடி வருகின்றனர்.

குறிப்பாக, தேனி மாவட்டத்திலுள்ள இந்துஸ்தான் லீவரின் ஹைவேவிஸ் எஸ்டேட்டில் பழைய ஒப்பந்தம் காலாவதியாவதற்கு முன்பே, ஜூலை 2001-இல் சம்பளக் குறைப்பை நடைமுறைப்படுத்தப் போவதாக லீவர் கம்பெனி எல்லா சங்கங்களுக்கும் நோட்டீசு அனுப்பியது. அடுத்து டிசம்பர் 2001-இல் அனுப்பிய நோட்டீசில், ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளி பறிக்க வேண்டிய தேயிலைக் கொழுந்தின் எடையை 15 கிலோவிலிருந்து 21 கிலோவாக உயர்த்தியும் சம்பளத்தை ரூ. 76.85லிருந்து ரூ 60 ஆக குறைக்கப் போவதாகவும் தெரிவித்தது. ஆனால், தொழிற்சங்கத் தலைவர்கள் இதைப் பற்றி தொழிலாளிகளிடம் சொல்லாமல் மூடி மறைத்தனர்.

மேலும், உயர்நீதி மன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்பாக 1300 ரூபாய் அட்வான்ஸ் தருவதாக லீவர் கம்பெனி ஆசை காட்டியது. இந்த முன் பணத்தை, ரூ. 76.85

**''சட்டம் எங்கள் கையில்; ஆட்சியாளர்கள் எங்கள் பையில்!'' என்று கொக்கரிக்கும் பன்னாட்டு ஏகபோக லீவர் நிறுவனத்தின் முழு ஆட்சிக்குட்பட்ட ஹைவேவிஸ் குரூப் வென்னியார் எஸ்டேட்.**






படிப்பகம்

www.padippakam.com

சம்பளம் என்ற அடிப்படையில் தருகிறார்களா, அல்லது ரூ. 60 சம்பளம் என்ற அடிப்படையில் தருகிறார்களா என்று தெளிவுபடுத்தாததால் தொழிலாளிகள் இதை வாங்க மறுத்துவிட்டனர். ஆனால், தொழிற்சங்கத் தலைவர்களோ இந்த முன்பணத்தை ஏற்றுக் கொள்வதாக லீவர் கம்பெனியுடன் இரகசிய ஒப்பந்தம் போட்டுத் துரோகமிழைத்துள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த தொழிலாளர்கள், ஐ.என்.டி.யு.சி.யின் கனகராசு, முருகையா; ஹெச்.எம்.எஸ்-இன் சண்முகவேல், தி.மு.க.வின் மனோகரன், அ.தி.மு.க.வின் சஞ்சீவி பாண்டி ஆகியோரைத் தலைமைப் பொறுப்புகளிலிருந்து நீக்கிவிட்டனர். இவர்கள் எடுக்கும் எந்த முடிவும் எங்களைக் கட்டுப்படுத்தாது என்று லீவர் கம்பெனிக்கும் அதிகாரிகளுக்கும் அறிவித்து விட்டு, தங்களுக்குள் புதிதாக இருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துப் போராட்டத்தை நடத்துகின்றனர்.



இந்திய சட்டத்தைக்கூட மதிக்காமல் லீவர் நிறுவனத்தால் கொத்தடிமைகளாய் நடத்தப்படும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்.

''மத்திய அரசின் தாராள இறக்குமதி கொள்கையால் உள்நாட்டுத் தேயிலைக்கு விலையில்லாமல் நட்டமாகிறது; சம்பளக் குறைப்புக்கு இதுதான் காரணம்'' என்று இந்துஸ்தான் லீவரும் தேயிலைத் தோட்ட அதிபர்களும் நியாயவாதம் பேசுகின்றனர். ஆனால், இது பச்சைப் பொய் என்று தொழிலாளிகள் தோலுரித்துக் காட்டுகிறார்கள். ''4 கிலோ கொழுந்துக்கு 1 கிலோ டீத்தூள் கிடைக்கும் என்றால், நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்குப் பறிக்கும் 16 கிலோ கொழுந்தில் 4 கிலோ டீத்தூள் கிடைக்கும். இந்துஸ்தான் லீவர் விற்கும் ''டாப் ஸ்டார்'' டீத்தூள் ஒரு கிலோ 162 ரூபாய். ''திரீ ரோசஸ்'' டீத்தூள் ஒரு கிலோ 200 ரூபாய். ஆனால், ஒரு கிலோ தூள் தயாரிக்க எங்கள் சம்பளம் உட்பட எல்லா செலவும் சேர்த்து 100 ரூபாயைத் தாண்டாது. ஆக, ஒரு கிலோவுக்கு குறைந்தபட்சம் 50 ரூபாய் இலாபம் என்றால் கூட ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளி மூலம் லீவர் கம்பெனிக்கு கிடைக்கும் இலாபம் 200 ரூபாய்! எனில் 4000 தொழிலாளிகள் மூலம் எவ்வளவு கிடைக்கும் என்பதை நீங்களே கணக்கிட்டுப் பாருங்கள். அதேசமயம், நாங்கள் கேட்கும் சம்பளத்தால் ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ. 12 இலட்சம்தான் கூடுதலாகச் செலவாகும்.

ஆனால், கம்பெனி குரூப் மானேஜர், உதவி மானேஜர், பேக்டரி மானேஜர் ஆகிய மூன்று பேருக்கும் மாதச் சம்பளம் ரூ. 54,000. ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ. 19 இலட்சம். இதுதவிர கார், பங்களா வசதிகள். பேக்டரி மானேஜரின் நாய்க்கு மெத்தை, தலையணை, தனி வீடு; நாயைப் பராமரிக்க ஒரு தற்காலிகத் தொழிலாளி - என ஊதாரித்தனம். இந்த நாய்க்கு ஒரு மாத தீனிச் செலவு மட்டும் 3000 ரூபாய். நட்டத்தில் இயங்கும் கம்பெனியில் இது எப்படி சாத்தியமாகிறது? என்று லீவர் கம்பெனியின் மோசடி வாதங்களை அம்பலப்படுத்துகின்றனர்.

மேலும், இந்தியாவின் காபி உற்பத்தியில் இந்துஸ்தான் லீவர்தான் ஏகபோக ஆதிக்கம் வகிக்கிறது. இந்தியாவில் ஒரு கிலோ காப்பிக் கொட்டை ரூ. 30-க்கு கிடைக்கிறது. இரண்டு கிலோ கொட்டையிலிருந்து ஒரு கிலோ தூள் கிடைக்கும். ஆனால் இந்துஸ்தான் லீவரின் தயாரிப்புகளான ''சன்ரைஸ்'', ''ப்ரூ'' காபி தூள்களின் விலை கிலோ ரூ. 600-க்கும் மேலாக உள்ளது. உள்நாட்டு தேயிலைக்கு விலையில்லை; நட்டம் என்று சம்பளக் குறைப்புக்கு காரணம் சொல்லும் லீவர் கம்பெனி, காபி கொட்டை / தேயிலைக் கொழுந்து விலை வீழ்ச்சியின்படி தனது காபித்தூள் / டீத்தூள் விலையை ஒரு பைசா கூடக் குறைக்கவில்லை.

தாராள இறக்குமதிச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை, மலேசியா, பாகிஸ்தான் நாடுகளில் உள்ள தனது எஸ்டேட்களிலிருந்து தேயிலையை இறக்குமதி செய்து கொள்ளும் லீவர் கம்பெனி, இதன் மூலம் இந்தியாவில் தங்களின் தேயிலைக்கு விலையில்லை என்று நாடகமாடி, திட்டமிட்டே தொழிலாளியின் வயிற்றிலடிக்கிறது. இதோடு நீலகிரியில் சிறு தேயிலை விவசாயிகளிடமிருந்து 14 ரூபாய்க்கு வாங்கிய ஒரு கிலோ பச்சைத் தேயிலையை இன்று ரூ. 5.50-க்கு வாங்கிக் கொள்ளையடித்து வருவதும் இந்துஸ்தான் லீவர் போன்ற கம்பெனிகள்தாம். விலைக் குறைப்பைக் கொண்டு சிறு விவசாயிகளைப் போண்டியாக்கி அவர்களின் நிலங்களை அபகரித்துக் கொள்ளவும் இந்நிறுவனங்கள் முயற்சித்து வருகின்றன.

அன்றாட நுகர் பொருட்களான பற்பசை, குளியல் - சலவை சோப்புகள், ஷாம்பு, ஆரோக்கிய பானங்கள், அழகு சாதனப் பொருட்கள், காபி - டீத்தூள் விற்பனையில் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் நிறுவனம்தான் இந்துஸ்தான் லீவர். கடந்த ஆண்டில் இந்நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ. 1,641 கோடி. இதில் தேயிலை விற்பனை மூலம் 6%-ம், காபித்தூள் விற்பனை மூலம் 15%ம் இலாபம் அதிகரித்துள்ளது.

அந்நிய ஏகபோக நிறுவனமான லீவரின் இலாபவெறி, நட்டக்கணக்கு காட்டி ஏய்க்கும் அதன் பித்தலாட்டம், தொழிற்சங்கங்களின் துரோகம், ஓட்டுக் கட்சிகளின் பிழைப்புவாதம், தங்களின் இயலாமை ஆகிய அனைத்தையும் தங்கள் போராட்டத்தின் வழியே தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் நன்கு தெரிந்து கொண்டுள்ளனர். இந்திய சட்டத்தை மயிரளவுகூட மதிக்காத அந்நிய லீவர் கம்பெனியை உதட்டளவில் கண்டிக்கக்கூட எந்தத் தொழிற்சங்கமும் முன்வரவில்லையே என்று வேதனைப்படுகின்றனர்.

தொழிலாளிகளின் உறுதி குலையாத போராட்டம் வெற்றிபெற இன்று உடனடித் தேவை ஒரு புரட்சிகர தொழிற்சங்கம்தான்! வெறும் சம்பள உயர்வு என்ற கோரிக்கையோடு வரம்பிட்டுக் கொள்ளாமல், இந்துஸ்தான் லீவர் போன்ற அந்நிய ஏகபோக நிறுவனங்களை நம் நாட்டை விட்டே விரட்டியடிக்கவும், தனியார்மய - தாராளமய - உலகமயக் கொள்கையால் நம் நாடு மீண்டும் அடிமையாவதை முறியடிக்கும் அரசியல் கடமைக்காகவும் போராடக்கூடிய, ஒரு புரட்சிகர தொழிற்சங்கம்தான் தொழிலாளிக்கு விடுதலையைப் பெற்றுத் தரும். அந்தத் திசையை நோக்கிப் போராடும் தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் முன்னேறி வருகிறார்கள் என்பதைப் போராட்டக் களம் உணர்த்துகிறது.

**செய்தியும், படங்களும்:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**உத்தமபாளையம் வட்டம்.**

# கேரள அரசு ஊழியர் போராட்டம்

# படுதோல்வியும் படிப்பினையும்

அண்டை மாநிலமான கேரளத்தில் ஏறத்தாழ 6 இலட்சம் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இணைந்து 32 நாட்களுக்கு நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம், எந்தக் கோரிக்கையும் நிறைவேறாமல் தோல்வியில் முடிந்துள்ளது. எதிர்க்கட்சிகளான போலி கம்யூனிஸ்டுகள் மட்டுமின்றி பா.ஜ.க.வும் ஆளும் காங்கிரசுக் கட்சியின் தொழிற்சங்கங்களும் இணைந்து போராடிய போதிலும் அந்தோணி அரசு கடுகளவு கூட அசைந்து கொடுக்கவில்லை. இதன் விளைவாக, அரசு ஊழியர்களின் பொருளாதாரச் சலுகைகள் மட்டுமின்றி, ஊழியர் குறைப்பு நடவடிக்கையால் ஏறத்தாழ ஒரு லட்சம் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் வேலையிழந்து வீட்டுக்கு விரட்டியடிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர்.

தனியார்மயம் - தாராளமயத்தை இரண்டாம் தலைமுறை சீர்திருத்தம் என்ற பெயரில் மூர்க்கமாகச் செயல்படுத்திவரும் ஆட்சியாளர்கள், கோடிக்கணக்கான விவசாயிகளையும் தொழிலாளர்களையும் மரணக் குழியில் தள்ளி விட்டுள்ளதோடு, அரசு செலவுகளை குறைப்பது என்ற பெயரில் அரசு ஊழியர்களையும் வீட்டுக்குத் துரத்தி வருகிறார்கள். விருப்ப ஓய்வுத் திட்டம் என்ற பெயரில் வங்கி ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பிய ஆட்சியாளர்கள், இப்போது எட்டு இலட்சம் மத்திய அரசு ஊழியர்களை வேலையிலிருந்து விரட்டியடிக்கத் தீர்மானித்துள்ளனர்.

டெல்லியிலுள்ள பா.ஜ.க. கூட்டணி ஆட்சியாளர்கள் மட்டுமின்றி, போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து எதிர்க்கட்சிகளும் தாங்கள் ஆளும் மாநிலங்களில் இதே கொள்கையைச் செயல்படுத்தி வருகின்றன. முந்தைய ஆட்சியாளர்களால் கஜானா காலியாகி விட்டதாக கூறிக்கொண்டு, அரசு செலவுகளைக் குறைப்பது - சிக்கன சீரமைப்பு, தேவைக்கு அதிகமாக உள்ள ஊழியர்களைக் குறைப்பது என்ற கொள்கையை எல்லா மாநில அரசுகளும் செயல்படுத்தி வருகின்றன. தனியார்மய - தாராளமயத்தால் கஜானா சூறையாடப்பட்ட நிலையில், எல்லா மாநில அரசுகளும் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட நிதியில்லாமல் கோடிகோடியாய் கடன் வாங்கித் தத்தளிக்கின்றன. அரசு ஊழியர்கள் இதுவரை அனுபவித்து வந்த பொருளாதாரச் சலுகைகள் முடக்கப்படுகின்றன. விவசாயம், கல்வி, மருத்துவம், ரேசன் கடை முதலான அனைத்துக்குமான மானியங்கள் வெட்டப்படுவதோடு, அத்தியாவசியமான வறட்சி நிவாரணத் திட்டம் - வேலைக்கு உணவு திட்டம் முதலானவை கூடக் கைகழுவப்படுகின்றன.

இத்தகைய தனியார்மய - தாராளமயத் தாக்குதலின் ஓர் அங்கமாக கேரள மாநில அரசும் கஜானா காலி என்ற பல்லவியுடன் அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளது. தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் நிரம்பி வழிவதாகவும், ஊழியர்களுக்கான சம்பளம் - சலுகைகள் மட்டும் ஐந்தாண்டுகளில் 115% உயர்ந்து விட்டது என்றும், இதனால் நிதிப் பற்றாக்குறை அதிகரித்து வருவதாகவும் கேரள அரசு அங்கலாய்க்கிறது. ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க நிதியில்லாமல் மைய அரசிடமிருந்து ரூ. 200 கோடி கடன் வாங்கியுள்ளதாகவும், இனி கடன் வாங்கவும் வழியில்லை, கடன் கொடுப்பாரும் யாருமில்லை என்பதால் வேறு வழியின்றி சிக்கன சீரமைப்பை மேற்கொள்வதாகவும் நியாயவாதம் பேசுகிறது. இதன்படி அரசு ஊழியர்களின் விடுப்பு ஊதியம், ஓய்வூதியச் சலுகைகள், வாகனம் வாங்க - வீடு கட்ட தரப்படும் கடன்கள் முதலானவற்றை உடனடியாக நிறுத்துவதாகவும், அடுத்து வருமாண்டுகளில் படிப்படியாக 20% ஊழியர்களைக் குறைக்கப் போவதாகவும் அறிவித்தது.

சட்டமன்றத்திலோ, தொழிற்சங்கங்களிடமோ விவாதிக்காமல் கேரள முதல்வர் அந்தோணி இம்முடிவை தன்னிச்சையாக அறிவித்ததும், இதை எதிர்த்தும் சம்பள உயர்வு - சலுகைகளுக்கான புதிய கோரிக்கைகளுடனும் மாநிலம் முழுவதுமுள்ள அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். இதர மாநிலங்களை ஒப்பிடும் போது, கேரள மாநிலமானது தொழிற்சங்கப் போராட்டங்களில் உறுதியும் போர்க்குணமும் நிறைந்தது என்பதால், மாநிலம் தழுவிய அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் போராட்டத்தைக் கண்டு அஞ்சி, அந்தோணி அரசு பணிந்து விடும் என்றே பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் அந்தோணி ''ஊழியர்கள் வேலைக்கு வராததால் அரசு அலுவலகப் பணிகள் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது'' என்று ஏளனம் செய்தார். ஊழியர்கள் வேலைக்கு வராத நாட்களுக்கு ஒருக்காலும் ஊதியம் தர முடியாது என்று எச்சரித்தார். வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர் மீது அத்தியாவசியப் பணித் துறைச் சட்டம் (ESMA) பாயும் என்று எச்சரித்து இப்பாசிச சட்டத்தின் கீழ் முன்னணியாளர்களைக் கைது செய்து சிறையிலடைத்தார். துப்புரவு, குடிநீர் முதலான அவசர - அத்தியாவசியப் பணிகளுக்காக தினக் கூலிக்கு தற்காலிக ஊழியர்களை நியமித்து, போராடும் ஊழியர்களை அச்சுறுத்தினார்.

மறுபுறம் ''மாநிலத்தில் நீண்ட காலமாக தொழில் வளர்ச்சி இல்லை; 45 இலட்சம் படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் நிற்கிறார்கள். விவசாயத் திட்டங்கள், சிறு தொழில் திட்டங்கள், வளர்ச்சிப் பணி

**உழைக்கும் மக்களிடம் ஆதரவு திரட்டாமல், தலைநகர் திருவனந்தபுரத்தில் கேரள அரசு ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்த போராட்ட ஊர்வலம்; விழலுக்கு இறைத்த நீர்.**





www.padippakam.com
படிப்பகம்

களைச் செய்ய நிதியில்லை. மொத்த வருவாயில் 70% தொகையை அரசு ஊழியர்களுக்கான சம்பளமே விழுங்கி விடுகிறது. எனவே, சிக்கன சீரமைப்பு தவிர்க்க முடியாதது. கேரள மக்கள் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு அரசு ஊழியர் போராட்டத்தை ஆதரிக்காமல் நிராகரிக்க வேண்டும்'' என்று மக்களிடம் நியாயவாதங்களை அடுக்கினார்.

இவற்றை அம்பலப்படுத்தி முறியடிக்க, போராடும் அரசு ஊழியர்கள் முன்வரவில்லை. தேயிலை, காபி, மிளகு, இரப்பர், தேங்காய் முதலான விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை வீழ்ச்சிக்கு உலகமயமாக்கலே காரணம் என்பதையோ, தனியார்மய - தாராளமயக் கொள்கைதான் ஆலை மூடலுக்கும் தொழில் வளர்ச்சியின்மைக்கும் வேலையின்மைக்கும் காரணம் என்பதையோ, அரசு ஊழியர்கள் மீது பழி போட்டு தப்பிக்க முயற்சிக்கும் அந்தோணி அரசின் சூழ்ச்சிகளையோ தோலுரித்துக் காட்ட முயற்சிக்கவில்லை. விவசாயிகள், தொழிலாளர்கள், சிறுதொழில் நடத்துவோர், வேலையில்லா இளைஞர்கள் என அனைத்து தரப்பு மக்களிடம் தமது போராட்டத்தின் நியாயத்தை விளக்கி அவர்களை தனியார்மய - தாராளமயத்துக்கு எதிரான போராட்டத்தில் ஐக்கியப்படுத்தவுமில்லை. வேலை நிறுத்தம் செய்து பணிகளை முடக்கினால் அரசு தானாகவே பணிந்துவிடும் என்று ஆகாயக் கோட்டை கட்டிக் கொண்டு துறைசார்ந்த பொருளாதாரப் போராட்ட வரம்புடன் முடங்கிக் கொண்டார்கள்.

இதனால், தமது வறுமைக்கும் வேலையின்மைக்கும் உண்மையான காரணத்தை அறியாத உழைக்கும் மக்கள், ஆட்சியாளர்களின் பொய்ப் பிரச்சாரத்துக்குப் பலியாகிப் போனார்கள். பூசாரி பட்டினி கிடக்க லிங்கத்துக்கு பஞ்சாமிருதம் கேட்குதா என்று அரசு ஊழியர் போராட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். முதல்வர் அந்தோணி கிறித்துவர் என்பதால், தேவாலயங்களும் பாதிரியார்களும் வேலை நிறுத்தத்தை எதிர்த்து வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்தனர். தேவாலயங்களின் தயவிலுள்ள தன்னார்வக் குழுக்களால் இயக்கப்படும் விவசாய சங்கங்கள் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தின. வேலை நிறுத்தத்தை ஆதரித்து சி.பி.எம். தலைமையிலுள்ள ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) ஊர்வலம் நடத்தியபோது, வேலையில்லா இளைஞர்கள் அதற்கெதிராக தன்னெழுச்சியாகத் திரண்டு போட்டி ஊர்வலம் நடத்தினர். ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்வதை எதிர்த்து, ''நீங்கள் ஆசிரியர்களா அல்லது கல்வியை அழிப்பவர்களா?'' என்று பள்ளிக் கூடங்களில் பெற்றோர்கள் சுவரெழுத்துக்களை எழுதினர். ''அரசாங்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகள் தனியார் - கான்வெண்ட் பள்ளிகளில் படிப்பதால் அவர்களுக்குப் பாதிப்பு இல்லை; வேலை நிறுத்தத்தால் எங்கள் குழந்தைகளின் படிப்பும் எதிர்காலமும் பாழாகிறது'' என்று சாடும் பெற்றோர்கள், படித்த வேலையில்லா இளைஞர்களைக் கொண்டு பள்ளிக் கூடங்களில் பாடங்களை நடத்த வைத்தனர். வேலை நிறுத்தம் செய்வோரால் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது என்று பள்ளிக்கூட வாயில்களில் திரண்டு பாதுகாத்து நின்றனர். ''அவர்களுக்காவது மாதந்தோறும் முறையாக சம்பளம் கிடைக்கிறது; எங்களுக்கு வேலையே இல்லையே! நாங்கள் எதற்காக போராட்டத்தை ஆதரிக்க வேண்டும்? இந்தப் போராட்டம் தேவையற்றது'' என்று போராட்டத்தை எதிர்த்தனர்.



படித்த - வேலையில்லா இளைஞர்களைக் கொண்டு பாடங்களை நடத்தச் செய்து, பாதுகாப்புக்காக பள்ளி வாயிலில் திரண்டு நிற்கும் உள்ளூர் மக்களும் பெற்றோர்களும்: துறைசார்ந்த பொருளாதாரப் போராட்டத்தின் எதிர்விளைவு.

இத்தனைக்கும் பிறகும் கூட அரசு ஊழியர்கள் தமது துறைசார்ந்த பொருளாதாரவாத செக்கு மாட்டுப் பாதையை விட்டு வெளியே வரவில்லை. மக்களிடம் குறைந்தபட்சம் துண்டுப் பிரசுரம், பொதுக்கூட்டங்கள் மூலமாவது தமது போராட்டத்தின் நியாயத்தை விளக்க முற்படவில்லை. தொழிற்சங்கத் தலைவர்களும் இதற்கு முயற்சிக்கவில்லை. வேலை நிறுத்தத்தின் போது துப்புரவுப் பணிகளுக்காக ஒரு நாளைக்கு ரூ. 80 வீதம் தினக்கூலி ஊழியர்களை நியமிக்க அரசு முற்பட்டபோது, ஆயிரக்கணக்கான பட்டப்படிப்பு - பட்ட மேற்படிப்பு படித்த வேலையில்லா இளைஞர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு வேலைக்காகக் குவிந்தனர். நிலைமை இந்த அளவுக்கு விபரீதமான பின்னரும், போராடும் அரசு ஊழியர்களோ, அவர்களுக்குத் தலைமை தாங்கும் போலி கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் தலைவர்களோ மக்களிடம் உண்மைக் காரணத்தைத் தெளிவுபடுத்தி ஆதரவு திரட்ட முற்படவில்லை.

இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு போராட்டத்தைத் தனிமைப்படுத்தி, பேச்சு வார்த்தைக்குக் கூட வராமல் அந்தோணி அரசு இழுத்தடித்தது. பின்னர் அரசைப் பேச்சு வார்த்தைக்கு இணங்கச் செய்வதே ஒரு போராட்டமாகி, அரசு ஊழியர் போராட்டம் முட்டுச் சந்தில் சிக்கிக் கொண்டது. பேச்சு வார்த்தையில் அரசு ஊழியர்களின் 28 கோரிக்கைகளில் எந்தக் கோரிக்கையும் ஏற்கப்படவில்லை. ஓய்வூதியத் தொகையில் சில அற்பச் சலுகைகள் வழங்கப்பட்டதைத் தவிர, மையமான கோரிக்கை எதுவும் ஏற்கப்படவில்லை. வேலைக்கு வராத நாட்களுக்கு சம்பளமும் தரமுடியாது என்பதில் அரசு கடுகளவும் இறங்கி வரவில்லை. இதனால் உடும்பு பிடிக்கப் போனவன், உடும்பு வேண்டாம்; கையை விட்டால் போதும் என்ற நிலைக்கு ஆளானதைப் போல, 32 நாட்களுக்கு நடந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிட்டு வேறுவழியின்றி அரசு ஊழியர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

துறைசார்ந்த பொருளாதாரப் போராட்டத்தை எவ்வளவு தீவிரமாகவும் போர்க்குணத்தோடும் நடத்தினாலும் அதன்மூலம் ஆட்சியாளர்களின் சூழ்ச்சிகள் - சதிகளை முறியடித்து, கோரிக்கைகளில் வெற்றிபெற முடியாது; அது மேலும் மக்களிடமிருந்து தனிமைப்பட்டு தோல்வியுறவே செய்யும் என்பதற்கு கேரள அரசு ஊழியர் போராட்டம் இன்னுமொரு சான்றாகத் திகழ்கிறது. மக்கள் விரோத ஆட்சியாளர்கள் மக்களுக்காகப் பரிந்து பேசுவதாக நாடகமாடிக் கொண்டு நியாயவாதங்களை முன் வைக்கும்போது, அரசு ஊழியர்கள், தொழிற்சங்கவாத - பொருளாதாரவாத வட்டத்துக்குள் சுருங்கிக் கொள்வது விவேகமானதாக இருக்க முடியாது. தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தால் நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வரும் வேளையில், துரோக ஆட்சியாளர்களை எதிர்த்த போராட்டம் என்ற வகையில், விரிந்த தொலைநோக்கு அரசியல் பார்வையுடன், அனைத்து பிரிவு உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்பட்டுப் போராடுவதே இன்றைய தேவையாக உள்ளது. இதை போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எந்தவொரு ஓட்டுக் கட்சி தொழிற்சங்கத்தாலும் சாதிக்க முடியாது. புரட்சிகர அரசியல் - அமைப்பு பார்வையுடன் அனைத்து உழைக்கும் மக்களையும் ஒன்றிணைத்து போராடக் கூடிய புரட்சிகர தொழிற்சங்கங்களால் மட்டுமே இதைச் சாதிக்க முடியும்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

## பி.எம்.எஸ்.- போலிகள் குலாவல்

# தாய் பகையாம் குட்டி உறவாம்!

பயங்கரவாத எதிர்ப்பு, தேச ஒற்றுமை என்ற பெயரில் இந்து வெறியர்களுடன் கைகோர்த்து நிற்கும் போலி கம்யூனிஸ்டுகள் இப்போது தொழிற்சங்க ரீதியாகவும் கூடிக் குலாவத் தொடங்கி விட்டார்கள்.

இந்து வெறியர்களின் தலைமையிலுள்ள தொழிற்சங்கமான பாரதீய மஸ்தூர் சங்கத்தின் (பி.எம்.எஸ்.) 13-வது தேசிய மாநாடு கடந்த பிப்ரவரி 22-24 தேதிகளில் திருவனந்தபுரத்தில் நடந்தது. பி.எம்.எஸ்.-இன் தேசிய அமைப்புச் செயலாளரான கோவையைச் சேர்ந்த ஆர். வேணுகோபால், ''மாறுதலை ஒட்டி இம்மாநகரமே காவிமயமாகியுள்ளது'' என்று மாநாட்டு ஏற்பாடுகளைப் பாராட்டி வரவேற்றார். மாநாட்டின் மூன்றாவது நாளில் இந்து வெறியர்களின் தலைமை குருபீடமான ஆர்.எஸ்.எஸ்.-இன் தேசிய பொதுச் செயலாளர் டாக்டர் மோகன்ஜி பாகவத் சிறப்புரையாற்றியுள்ளனர். இப்படி வெளிப்படையாகவே இந்து வெறியர்களின் தொழிற்சங்கமாகக் காட்டிக் கொண்டுள்ள பி.எம்.எஸ்.-இன் மாநாட்டை இந்து வெறியர்களை எதிர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டுகளின் அகில இந்திய தொழிற்சங்கத் தலைவர்கள் வெட்கமின்றி நேரில் வந்து வாழ்த்தியுள்ளனர்.


போலி கம்யூனிஸ்டு 'மார்க்சிஸ்டு' கட்சியின் தலைமையிலுள்ள சி.ஐ.டி.யு. சங்கத்தின் சார்பாக, அதன் தலைவர் பாலானந்தன் இம்மாநாட்டில் கலந்து கொண்டு, ''உலக வர்த்தக கழகத்தின் கட்டளைகளுக்கு ஏற்ப மத்திய - மாநில அரசுகள் செயல்படுகின்றன. இதற்கு எதிராக தொழிற்சங்க வேறுபாடுகளைக் கைவிட்டு, நாம் அனைவரும் இந்தியர்கள் என ஒன்றுபட்டுப் போராட வேண்டும்'' என்று வாழ்த்துரையாற்றியுள்ளார். தொழிலாளர்கள் என்ற முறையில் வர்க்க அடிப்படையில் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்று அவர் அறைகூவல் விடுக்கவில்லை. இந்தியர்கள் என்ற முறையில் ஒன்றுபட வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ்.-இன் சித்தாந்தத்தை அப்படியே கிளிப்பிள்ளை போல இப்போலி கம்யூனிஸ்டு தலைவர் ஒப்பித்துள்ளார்.

இடதுகளே இப்படியென்றால், அதைவிட இன்னும் ஒருபடி தாவுவதுதான் வலதுகளின் கொள்கை என்ற அடிப்படையில், வலதுகளின் தொழிற்சங்கமான ஏ.ஐ.டி.யு.சி.யின் துணைத் தலைவர் திவாகரன், ''சரித்திரத்தில் இடம் பெறப் போகும் மாநாடு இது!'' என்று இந்துவெறியர்களின் தொழிற்சங்க மாநாட்டைப் பிழைப்புவாதிகளின் பாணியில் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

மேலும், ''அரசியல் சார்பற்ற தொழிற்சங்கம் மட்டுமே வெற்றிகரமாகப் போராட முடியும். நாங்களும் அரசியல் சார்பற்று செயல்பட தீர்மானம் செய்தோம். ஆனால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. பி.எம்.எஸ். அரசியல் சார்பற்று வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. அதனால் மட்டுமே போராட்டத்தை முன்னின்று நடத்திச் செல்ல முடியும். இணைந்து செயல்படுவோம்! வெற்றி பெறுவோம்!'' என்று வாழ்த்தியுள்ளார்.

அரசியல் சார்பற்ற தொழிற்சங்கம் என்பது கடைந்தெடுத்த குறுகிய பொருளாதார வாதத்தின் வெளிப்பாடாகும். அதாவது, இந்துவெறியர்கள் பாசிச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டால் எனக்கென்ன? பொடோ சட்டம் கொண்டு வந்தால் என்க்கென்ன? நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் அடிமைப்படுத்தினால் எனக்கென்ன? எங்களுக்கு வேண்டியது சம்பள உயர்வு, போனசு, ஓய்வூதியம், வாரிசுக்கு வேலை என்பதுதான் என்கிற அரசியலற்ற - சுயநலப் போக்குதான் பொருளாதாரவாதத்தின் அடிப்படையாகும். இந்த வழியில்தான் இந்து வெறியர்களின் தலைமையிலுள்ள பி.எம்.எஸ். சங்கம் தொழிலாளர்களையும் அரசு ஊழியர்களையும் அணிதிரட்டி வைத்துள்ளது. தொழிலாளி வர்க்க விடுதலைக்கே எதிரான இந்த வழிமுறையைக் கொண்ட பி.எம்.எஸ். சங்கத்தை ஆதரித்து, இந்தச் சங்கம்தான் வெற்றிகரமாகப் போராட முடியும் என்று வாழ்த்துவதோடு, இணைந்து போராடப் போவதாகவும் அறிவிக்கிறார் இப்போலி கம்யூனிஸ்டு தலைவர்.

'தொழிலாளி வர்க்கத்தின் பொதுக் கோரிக்கையில் மற்ற சங்கங்களோடு இணைவதில் தவறில்லை; பி.எம்.எஸ். சங்கத்தினரும் தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்க்கிறார்கள்' என்றெல்லாம் நியாயவாதம் பேசிக் கொண்டு, அதனுடன் கூடிக் குலாவிக் கொண்டு, அதுவும் ஒரு நல்ல தொழிற்சங்கம்தான் என்ற தோற்றத்தை இப்போலி கம்யூனிஸ்டுகள் உருவாக்குகிறார்கள். கடந்த ஆண்டு நவம்பரில் உலகமயமாக்க எதிர்ப்புப் போராட்டத்தின்போது, உலகமயமாக்கலைத் தீவிரமாகச் செயல்படுத்தி வரும் பாரதீய ஜனதா, சிவசேனா கட்சிகளின் தொழிற்சங்கங்களோடு வெட்கமின்றி கூட்டுச் சேர்ந்து மும்பையில் போராட்டம நடத்தினர். போலி கம்யூனிஸ்டுகள் இந்து கம்யூனிஸ்டுகளாக மாறி வருவதைக் கண்டு பூரித்துப் போன இந்துவெறியர்களின் அரசியல் - சித்தாந்த வார இதழான ''விஜய பாரதம்'', பி.எம்.எஸ். மாநாட்டில் இடது, வலது கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கியதைச் சிலாகித்து, செய்தியாக வெளியிட்டுள்ளது.



பாசிசத்தின் மிதவாதப் பிரிவினர் என்று போலி கம்யூனிஸ்டுகளைத் தோலுரித்துக் காட்டினார் தோழர் ஸ்டாலின். இன்று அதற்கு இலக்கணப் பொருத்தமாகத் திகழ்பவர்கள் நாங்கள்தான் என்று இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள் நிரூபித்து வருகிறார்கள். ●



படிப்பகம்



# நாட்டை மீண்டும் காலனியாக்காதே! மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே!

இந்திய அரசே,
உலக வர்த்தகக் கழகத்திலிருந்து
வெளியேறு!

## மே-1, 2002

| ''விவசாயத்தை அழிக்காதே!'' | ''பொதுத்துறையைத் தனியார்மயமாக்காதே!'' | ''கைத்தறி, விசைத்தறி தொழில்களை அழிக்காதே!'' |
|---|---|---|
| **திருவாரூரில்** | **நெய்வேலியில்** | **ஈரோட்டில்** |
| | | அந்நியத் துணி எரிப்புப் போராட்டம் |
| பேரணி - பொதுக்கூட்டம் | பேரணி - பொதுக்கூட்டம் | பேரணி - பொதுக்கூட்டம் |

**அணி திரள்க! ஆதரவு தருக!**

- மக்கள் கலை இலக்கியக் கழகம் ◆ புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி
- புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி ◆ விவசாயிகள் விடுதலை முன்னணி

### குஜராத்தில் இனப்படுகொலை

## தமிழகத்தின் மௌனத்தை உடைத்த புரட்சிகர அமைப்புகள்

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை பா.ஜ.க. விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ். முதலான சங் பரிவார் அமைப்புகள் கடந்த பத்தாண்டுகளாக அரங்கேற்றி வரும் இந்து மதவெறி பாசிச பயங்கரவாதத்தின் தொடர்ச்சியே குஜராத்தில் நடைபெற்று வரும் படு கொலைகள். இக்காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டிக்க முன் வராதவனை, மனித இனத்திலேயே சேர்த்துக் கொள்ள முடியாது எனும் பொழுது, இந்த இனப்படு கொலைக்கு எதிராக சுண்டு விரலைக் கூட அசைக்காத தி.க., தி.மு.க, ம.தி.மு.க., பா.ம.க. முதலான திராவிடக் கட்சிகள் தங்களை ஜனநாயக மதச்சார்பற்ற கட்சிகள் எனக் கூறிக் கொள்வதற்கு மயிரளவு தகுதியும் கிடையாது.

பாசிச ஜெயா, கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தில் 'இந்து கரசேவகர்கள்' கொல்லப்பட்டதைக் கண்டித்து ஆர்.எஸ்.எஸ். கருத்தை அறிக்கையாக வெளியிட்ட பின்னும் கூட, இவர்களின் 'சுயமரியாதை' சூம்பிக் கிடக்கிறது. இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள் 'மதநல்லிணக்கம்' என்ற காலாவதியான பஜனை மடத்திலேயே முடங்கிக் கிடக்கின்றனர். தலித் அமைப்புகளான புதிய தமிழகமும், விடுதலைச் சிறுத்தைகளும் அர்த்தத்தோடு மௌனம் காக்கின்றனர். முசுலீம் மத அமைப்புகளோ மேலும் இறுக்கமாக மதத்தில் ஒன்றுபடுவதன் மூலம் பாசிசத்தை வீழ்த்தமுடியுமென்று கனவு காண்கின்றனர்.

இந்நிலையில், மக்கள் கலை இலக்கியக் கழகம் மட்டுமே இந்து மதவெறி பாசிஸ்டுகளைத் தெருவில் இறங்கி போராடாமல் வீழ்த்தமுடியாது என்று பிரச்சாரம் செய்து வருகிறது. கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம், குஜராத்தில் நடைபெறும் கலவரம் பற்றிய உண்மையை மக்களிடம் கொண்டு செல்ல ம.க.இ.க. தமிழகமெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்த முடிவு செய்தது. உயர்நீதிமன்ற தீர்ப்பைக் காட்டி பொதுக்கூட்டத்திற்கு அனுமதி மறுத்தது போலீசு. இறுதியில் திருச்சி, தஞ்சை பகுதியில் மட்டும் பொதுக்கூட்டமும், மற்ற இடங்களில் தெருமுனைக் கூட்டங்களையும் நடத்தியது.

★ தஞ்சையில் 9.3.2002 அன்று தோழர் அருள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் மருதையன் சிறப்புரையாற்றினார்.

★ திருச்சியில் 11.3.2002 அன்று பொதுக்கூட்டம் பு.மா.இ.மு. தோழர் சேகர் தலைமையில் நடைபெற்றது. தோழர் காளியப்பன் சிறப்புரை ஆற்றினார்.

குஜராத்தில் விசுவ இந்து பரிசத் முசுலீம்களின் சொத்துக்களையும், குடும்பங்களையும் திட்டமிட்டு தாக்கியதையும்; இந்துவெறியின் இன்னொரு முகமாக செயல்படும் சங்கராச்சாரியின் சதித் திட்டத்தை அம்பலப்படுத்தியும், வி.இ.ப. முதலான சங் பரிவாரங்களின் வளர்ச்சியில் காங்கிரசு, மற்ற ஓட்டுக் கட்சிகளின் ஒத்துழைப்பைச் சுட்டிக் காட்டியும், முசுலீம் அமைப்புகளின் கையாலாகாத்தனத்தைக் குறிப்பிட்டும், பா.ஜ.க. அறிவித்திருக்கும் பட்ஜெட் - புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் அது அமுல்படுத்தி வரும் மறுகாலனியாதிக்க நடவடிக்கை என்றும் அதற்கு இணையாகத் தூண்டி வளர்க்கப்படும் இந்து மதவெறி பாசிசத்திற்குமுள்ள தொடர்பை விளக்கியும் சிறப்புரை அமைந்திருந்தது.

நிகழ்ச்சியின் இறுதியாக ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி எழுச்சியூட்டும்படி இருந்தது. திரளான பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தகவல்:
ம.க.இ.க., திருச்சி.

**Published and Owned by R. SHANMUGA RAJ, 110, IInd Floor, 63, Arcot Road, Chennai - 600 024.**
**Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.**

www.padippakam.com

வயல்வெளி ஓரமாகப் போடப்பட்டுள்ள இந்தக் கூரைப் பொந்துக்களில் வாழ்க்கையை ஓட்டும் இவர்கள், மகாராஷ்டிராவின் மரத்வாடா பகுதியில் உள்ள பர்பானி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள். மரத்வாடா பகுதி, வானம் பார்த்த வறண்ட பூமி. ஆகையால், இந்த விவசாயிகள் மரத்வாடா பகுதிக்குப் பக்கத்திலுள்ள மாவட்டங்களில் அமைந்திருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்பு வெட்டும் தினக் கூலிகளாகப் பஞ்சம் பிழைக்க வந்திருக்கிறார்கள்.

மகாராஷ்டிராவில் மட்டும் கிட்டதட்ட 192 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகள் அனைத்தும் மரத்வாடா பகுதியைச் சேர்ந்த வறிய விவசாயிகளைத்தான் கரும்பு வெட்டும் தினக் கூலிகளாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. கிட்டதட்ட 10 இலட்சம் விவசாயிகளின் வாழ்க்கை, வருடத்தில் ஆறுமாதமே கிடைக்கும் இந்தக் கூலி வேலையைத்தான் நம்பி ஓடுகிறது. கரும்பு வெட்டும் ஆறுமாத சம்பாத்தியத்தில், வேலை கொடுக்கும் காண்டிராக்டரிடம் பட்ட கடனுக்கு அசலையும், வட்டியையும் திருப்பிக் கொடுத்தபின் மிஞ்சுவதைக் கொண்டுதான் இவர்கள் அடுத்த ஆறு மாதத்தை ஓட்ட வேண்டும்.

கூட்டுறவு ஆலைகள் இந்தக் கூலி விவசாயிகளுக்குச் சட்டபூர்வ குறைந்தபட்ச கூலியோ, உரிமையோ அறவே கொடுப்பதில்லை; கரும்பு வெட்டும் போது, வியர்வையை மட்டுமல்லாது, தங்களது இரத்தத்தையும் சிந்தும் இந்தக் கூலி விவசாயிகளுக்கு ஒரு ஓலைக் குடிசையைக் கூடப் போட்டுத் தருவது கிடையாது. அந்த ஆறுமாத காலமும் இவர்கள் இப்படி கூரைப் பொந்துகளிலும், மாட்டு வண்டி, டிராக்டர்களுக்குக் கீழேயும் தங்கிக் கொண்டுதான் கூட்டுறவு ஆலைகளுக்காக இராப்பகல் பாராமல் உழைக்கிறார்கள். ஆனால், ஆலைகளோ இவர்களை ஆறு மாதம் கசக்கிப்




# இதுதான் இன்றைய இந்தியா

பிழிந்துவிட்டு, அதன் பின் கரும்புச் சக்கையைப் போல் வீசி எறிந்து விடுகின்றன. "ஊருக்கெல்லாம் சர்க்கரையைக் கொடுக்கும் எங்களுக்கு, அதில் ஒரு சிட்டிகையைக் கூட ருசித்துப் பார்க்கும் வசதியோ, வருமானமோ கிடையாது" என்கிறார் ஒரு விவசாயி. இவர்களின் பரிதாபகரமான வாழ்க்கையைச் சொல்லுவதற்கு இதைவிட வேறு வார்த்தைகள் வேண்டுமா?

இதோ, இந்தப் படத்தில் வரிசையாக நிற்கும் கார்கள், மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த 146 போலீசு அதிகாரிகளுக்குக் கொடுப்பதற்காக வாங்கப்பட்டுள்ளன. ஒரு "டாடா க்வாலிஸ்" காரின் விலை குறைந்தபட்சம் ஐந்து இலட்சம் என வைத்துக் கொண்டால் 146 கார்களுக்கான செலவு ஏழு கோடியைத் தாண்டும். பற்றாக்குறையைக் காட்டி ஆட்சியாளர்கள் 'மானியத்தை' வெட்டும் சமயத்தில் இப்படியொரு செலவு அவசியமா? என யாராவது கேட்டால், தீவிரவாதத்தைக் காட்டிக் கேட்டவரின் வாயை மூடிவிடுவார்கள்.

கொசு இருந்தால்தான் கொசுவர்த்திச் சுருள் தயாரிக்கும் நிறுவனங்கள் கொள்ளை இலாபம் சம்பாதிக்க முடியும். தீவிரவாதத்துக்கும் போலீசுக்கும் இடையேயான உறவும் ஏறத்தாழ இதைப் போன்றதுதான். தீவிரவாதம் இருந்தால்தான் போலீசு துறையை ஊதிப் பெருக்க முடியும்; அதற்கு இப்படி தண்டமாகக் கொட்டவும் முடியும்.



மகாராஷ்டிரா மாநிலத்தின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, சரத்பவார் போன்ற தலைவர்களின் அரசியல் தலையெழுத்தைத் தீர்மானிப்பதும் கூட கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்தான். அப்படிப்பட்ட ஆலைகள் இயங்குவதற்கு முதுகெலும்பாய் இருக்கும் விவசாயிகளைக் கொத்தடிமைகளைவிடக் கேவலமாக நடத்தும் அரசின் அலட்சியம் ஒருபுறம்; உழைப்புக்கும், உற்பத்திக்கும் சம்பந்தமேயில்லாத போலீசுக்கு, வசதிக்கு மேல் வசதி செய்து கொடுப்பதற்காக வாரி கொட்டப்படும் தண்டச் செலவு மறுபுறம். அரசின் இந்த பாரபட்சத்தை இனியும் நாம் சகித்துக் கொள்ள வேண்டுமா?

படிப்பகம்